நன்றி - நூலகத்திட்டம்

புதிய பூமி
පුදිය පූමි
PUTHIYA POOMI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
சுற்று 09 | ஜன/பெப்ரவரி 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்சி 43

# சமாதானத்திற்கான பாதையில் புதிய அரசாங்கம் எந்தளவு தூரம் செல்லும்?

நாட்டின் தமிழ் மக்கள் மட்டுமன்றி அனைத்து மக்களுமே சமாதானத்தையும் இயல்பு வாழ்வையுமே வேண்டிநிற்கிறார்கள். அதற்கான விருப்பத்தையும் ஆணையையும் வழங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே சந்திரிகா அம்மையாருக்கும் அவரது பொதுஜன முன்னணிக்கும் இதே ஆணையை நாட்டு மக்கள் 1994ல் வழங்கி இருந்தார்கள். அப்போது புதிய பூமி சந்திரிகாவிற்கு ஒரு இறுதிச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதனை அவர்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டி இருந்தது. ஆனால் சந்திரிகா அம்மையாரும் பொதுசன முன்னணியும் [illegible] ஐக்கிய தேசியக் கட்சிக்கு [illegible] மீண்டும் வழங்கிக் கொண்டது.

ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் புதிய அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணி என்னும் பெயரில் பதவிக்கு வந்துள்ளது. முஸ்லீம் மலையகக் கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் பெறுகின்றன. தமிழ் கூட்டமைப்புக் கட்சிகள் எதிர் வரிசையில் இருந்து கொண்டே தமது பரிபூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். இது ரணில் விக்கிரமசிங்காவிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மற்றொரு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் இந்தியாவிற்கு நேரடியாகச் சென்று தமது நிலைப்பாட்டை விபரமாகக் கூறி ஆலோசனை பெற்று



வந்தார். அமெரிக்காவிற்கு அதன் தூதுவர் மூலம் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துக் கொண்டார். இவற்றைத் தொடர்ந்து இடை நிறுத்திக் கொள்ளப் பட்ட நோர்வேயின் ஆரம்ப சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இம்முயற்சி வரவேற்கப்பட வேண்டியதாகும். நேரடியாக அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசுவதும் நியாயமான தீர்வு ஏற்படுவதும் அதன் மூலமாக சமாதானம் நிலை நிறுத்தப் படுவதும் அனைத்து மக்களுக்கும் நாட்டுக்கும் அவசியமான அதிமுக்கியமான தேவைப்பாடாக இருக்கிறது.

இதனை நிறைவேற்ற அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்புள்ள கடமை [illegible] இந்த இடத்தில் புதிய அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளப்போகின்றது [illegible] சமாதானப் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு பற்றி பேசினாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பெருந்தேசியவாத பேரினவாதக் கட்சி என்பதை மறந்துவிட முடியாது. அது வர்க்க, இன அடிப்படையில் எதையும் இதுவரை விட்டுக் கொடுத்து வந்ததாக வரலாற்றில் கூறிக் கொள்ள முடியாது. இனப்பிரச்சினை காரணமான இன்றைய யுத்தத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் ஐ.தே.கட்சியின் பங்களிப்பு பாரியதாகும்.

ஆனால் சர்வதேசிய நிலைமைகளின் அழுத்தமும் தேசிய நிலைமைகளின் பொருளாதார ராணுவ இயலாமைகளும் இனப்பிரச்சினைக்கான பேச்சு வார்த்தையை வற்புறுத்துகின்றன. பல முனை நிர்ப்பந்தங்கள் பேசுவதைத் தவிர வேறுவழி இல்லை என்ற நிலைப் பாட்டை எடுக்க வைத்திருக்கிறது.

இதனை எக்காரணம் கொண்டும் எவரும் குழப்பியடித்து சுய அரசியல் லாபம் பெறக் கூடாது. பேச்சு வார்த்தை என்ற இடத்திற்கு செல்வதற்குரிய சகல இடைத் தடைகளும் அகற்றப்படல் வேண்டும். அது பெயரளவில் அன்றி செயளவில் முழுமைபெறல் வேண்டும்.

வடக்கு கிழக்கிற்கான பொருளாதாரத் தடைகள் [illegible] தடைகள் கட்டுப்பாடுகள் அகற்றப்படுவது [illegible]

## நான்கு அடிப்படைகள் அவசியமானவை

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை திருப்தி ஏற்படுத்தும் வகையில் விரைந்து முன்னெடுக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே புலிகள் இயக்கம் முன்மொழிந்த யுத்த நிறுத்தம் அரசாங்கத் தரப்பில் மோதல் தவிர்ப்பாக இணங்கப் பட்டிருக்கிறது. இது முழுமையாக்கப் பட்டு நிரந்தர யுத்த நிறுத்தம் தொடரப் படல் வேண்டும். இதற்கு நோர்வே தூதுக்குழு தொடர்ந்து செயலாற்ற வேண்டும். நோர்வேயின் அனுசரணையை கவனமாகவும் நிதானமாகவும் உள்ளார்ந்த முன்

தொடர்ச்சி 12ம் பக்கம்

# தமிழ் தடுப்புக்காவல் கைதிகளை விடுதலைசெய்
# பயங்கரவாதத் தடை சட்டத்தை ரத்துச்செய்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், ஏற்கனவே காலாவதியாகிவிட்ட அவசரகாலச் சட்டத்தின் மூலமும் நாட்டின் பிரதான சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், பொலீஸ் பாதுகாப்பு நிலையங்கள் மற்றும் சில படை முகாம்கள் ஆகியவற்றில் தமிழ்க் கைதிகள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப் பட்டு வந்துள்ளனர். தமிழ்க் கைதிகள் என்னும் போது அவர்களில் மலையகத் தமிழரும் முஸ்லீம்களும் உள்ளடங்குவர். இவர்களில் பெண்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களாக உள்ளதுடன் அவர்களின் சிலருக்கு குழந்தைகளும் சிறைகளில் இருந்து வருகின்றனர்.

பலவருடங்களாகப் பயங்கரவாதிகள், புலிகள், அவர்களுக்கு உதவியவர்கள் என்னும் பெயரில் ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் ஆதாரமாக வைத்து இவர்கள் மீது வழக்குத் தொடராமலும் விசாரணைக்கு நீதி மன்றங்களில் நிறுத்தாமலும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் மீது தொடர்ச்சியான பலவகைச் சித்திரவதைகள் புரியப்படுகின்றன. அடிக்கடி சிறைக்கொலைகள் இடம் பெற்று வந்துள்ளன.

இப்பொழுது புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. அவசரகாலச் சட்டமும் நடைமுறையில் இல்லை. சமாதானத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறிக்கொள்ளப்படுகிறது. அப்படியானால் ஏன் தமிழ்ச் சிறைக் கைதிகள் விடுதலை செய்வதற்கு தயக்கம் காட்டப்படுகிறது. உள்நோக்கங்கள் உள்ளனவா? சட்டப்படி வேண்டும். பேரினவாத ஒடுக்கு முறை என்னும் வக்கிரம் தமிழ்க் கைதிகள் விடயத்தில் மேலிருந்து கீழ்வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

எனவே தடுத்து வைக்கப்பட்ட தமிழ்ச்சிறைக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யவேண்டும் எனப் புதிய பூமி வற்புறுத்துகின்றது. அத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தது இதே யூ.என்.பி அரசு தான். அக்கொடிய சட்டத்தை நீக்குவதற்கு இப்போது உரிய சந்தர்ப்பம் வந்துள்ளது. சமாதானத்திலும் அரசியல் தீர்விலும் உயர்வாகப் பேசப்படும் ஜனநாயகம் மனித உரிமை மீது உண்மையான பற்றார்வம் இந்த அரசுக்கு இருக்குமானால் பயங்கரவாதச் சட்டத்தை இல்லாமல் செய்வதே முறையானதாகும். அது தமிழ் மக்களுக்கும் அனைத்து மக்களுக்கும் அவசியமானதாகும்.

# வடபகுதி மீனவர் போராட்டம் நியாயமானது
# ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும்.

கடந்த இருபது வருடங்களாகத் தமது தொழில்களையும் உயிர் உடமைகளையும் இழந்து அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் அரைகுறை வாழ்க்கை வாழ்ந்து வரும் வடபகுதி மீனவர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் உடன் நிறைவேற்ற வேண்டும். அதற்காக அவர்கள் யாழ்--செயலகத்தின் முன் நடாத்திவரும் வெகுஜன மறியல் போராட்டம் முற்றிலும் நியாயமானதாகும். எமது புதிய ஜனநாயக கட்சி அதற்கு ஆதரவைக் கொடுத்து அதில் பங்கு கொண்டு வருகின்றது. மீனவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும் வரை அப்போராட்டம் தொடரப்பட வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் யாழ்-மீனவர் போராட்டம் சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றது. ஆனால் சகல வழிகளாலும் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் யாவும் தொடர்ந்து புறக்கணிக்கப் பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் உச்சநிலை விலையேற்றம், மீனவர் ஜீவாதாரப் பிரச்சினை, இடம் பெயர்ந்தோர் அவலம், சீமெந்து தொழிலாளர் உட்பட ஏனைய தொழிலாளர் பிரச்சினை, காணாமல் போனோர் பற்றிய முடிவின்மை, மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விப்பிரச்சினை, மின்சாரம் தொலைபேசி போக்குவரத்து போன்றவற்றில் காணப்படும் மக்கள் விரோத செயற்பாடுகள் சீர்கேடுகள் யாவும் தொடர்ந்து மக்களை அழுக்கி வருகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் எதுவும் காணப்படவில்லை. எல்லாம் வெறும் வாக்குறுதிகள் மட்டுமாகவே இருந்தும் வருகின்றன.

இவற்றை நோக்கும்போது வடபகுதியைத் தனிமைப்படுத்தி பட்டினி போடும் பழைய நிலையைத் தொடரத்தான் புதிய அரசாங்கமும் முயற்சிக்கின்றதா? என்னும் கேள்வியை யே எழுப்ப வேண்டியுள்ளது. அப்படியான எண்ணமோ உள்நோக்கமோ அரசாங்கத்திற்கு இல்லையெனில் மீனவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை தாமதிக்காது உடன் வழங்க வேண்டும். அத்துடன் ஏனைய பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வை வழங்க முன்வரல் வேண்டும் எனப் புதிய ஜனநாயக கட்சி அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுடலை ஞானம்

19வருடகால யுத்தத்தில் 50,000 ஆயிரம் கோடிக்கு மேல் செலவாகிவிட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 8 ஆயிரம் கோடியை யுத்தம் விழுங்கிவிட்டது. இன்று ஒவ்வொரு இலங்கையரும் 79,000 ரூபாவிற்கு கடனாளியாக இருக்கின்றனர். 60 ஆயிரம் பொது மக்களும் 20 ஆயிரம் படையினர் - பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். தனது கொள்கை விளக்க உரையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்துள்ளார். இதனைச் சுடலை ஞானம் என்று சொல்லலாமா?

## தண்டனை வேண்டும்.

கடந்த வருடம் மருதானைச் சோதனைச் சாவடியில் பொலிஸ் ராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட மலையகப் பெண்ணுக்கு 1-1/2 லட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என [illegible] தீர்மானித்துள்ளது. பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக் கொடுமைக்கு நஷ்டஈடு மட்டும் போதுமானதல்ல. கடும் தண்டனை பெறக் கூடிய சட்டம் அவசியம். புதிய அரசாங்கமாவது கொண்டு வருமா?

## இரண்டு தமிழர்கள்

புலிகளுக்கு எதிராகவும் அதன்மூலம் தமிழர் உரிமைகளுக்கு எதிராகவும் பேசுவதற்கு பாராளுமன்றத்தில் இரண்டு தமிழர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஒருவர் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். இரண்டாமவர் இராமலிங்கம் சந்திரசேகரன். முன்னையவர் பொதுசன முன்னணி இரண்டாமவர் ஜே.வி.பி. தேசியப்பட்டியல் மூலம் விஷயத்தோடு தான் அக்கட்சிகள் நியமித்துள்ளன போலும்.

## மழைக்கு மந்திரம்

மலையகத்தின் நீரேந்து பகுதிகளில் மழை பெய்யவில்லை. அதனால் மின்சாரம் பற்றாக்குறை. இதனை தீர்க்க புதிய மின்சக்தி அமைச்சின் கீழ் மின்சாரசபை மழைக்கு மந்திரம் ஓத முன்வந்துள்ளது. கதிர்காமத்திலிருந்து ஒரு பௌத்த பிக்குவை அழைத்து வந்து நீரேந்து பகுதிகளில் மழைக்கு மந்திரம் ஓதி வரவிட்டிருக்கிறது. அதற்குப் பெருந் தொகைப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மந்திரத்தால் மாங்காய் விழுந்துவது பொய் இல்லை என்று நம்பலாமா?

## பழைய கததைதான்

புலிகள் இயக்கத்தின் மீதான தடைநீக்கப்பட வேண்டுமானால் அவ்இயக்கம் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு ஆயுதங்களைக் கீழேபோட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறிவருகிறார். இது பழைய அமைச்சர் கதிர்காமரின் கோரிக்கையின் தொடர்ச்சிதானே.

## யாரை யார் கெடுத்தது

பொதுசன முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவர் ஜி.எல்.பீரிஸ். இப்போதைய அரசாங்கத்திலும் அமைச்சராகவும் அமைச்சரவைப் பேச்சாளராகவும் இருந்து வருகிறார். இவர் தன்னை மோசமாக நடத்திக் கெடுத்தவர் ஜனாதிபதி எனக் குற்றம் சுமத்தியவர். ஜனாதிபதியோ தமது அரசாங்கத்தை நாசமாக்கியது பீரிஸ் போன்றவர்களே என்று பதில் குற்றம் காட்டியிருந்தார். யார் யாரை நாசமாக்கியது என்பதைச் சிறிது காலம் செல்ல அறிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க தூதுவரும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும்

அண்மையில் யாழ்-பல்கலைக்கழக மாணவர்களின் தூதுக்குழு ஒன்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவ ராலயத்திற்குச் சென்று சில கோரிக்கை களை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.கஜேந்திரன் தலைமையில் முப்பத் தைந்து மாணவர்கள் வரை சென்று தூதுவர் ஆஷ்லி வில்ஸி, அரசியல் பிரிவுத் தலைவர் ஜோசப் எஸ். நோவக் உட்பட உயர் அதிகாரிகளிடம் தமது முறைப் பாட்டைத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளே ஏகப்பிரதிநிதிகள் என்றும் அவர்களுடன் மட்டுமே பேசவேண்டும். சுயநிர்ணய உரிமை, தமிழ் தேசியஇனம், மரபுவழித் தாயகம் என்பன ஏற்றக்கொள்ளப்பட வேண்டும். இவைகளே தமிழ் மக்களின் அபிலாஷை கள் எனச் சுட்டிக் காட்டி இவற்றைப் பெற்றெடுக்க அமெரிக்கா உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண் டனர். அத்துடன் ராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் உள்ள ஆயுதக் குழுக்களிடம் இருக்கும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். இதில் அமெரிக்கா அக்கறை காட்ட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந் தனர். அத்துடன் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் எனவும் மாணவர்கள் கேட்டுக்கொண் டனர். அத்துடன் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுவிக்க அமெரிக்கா உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்கள்.

இச்செய்தியையும் நடந்த பேச்சுவார்த் தையும் பார்த்து அழுவதா அல்லது சிரிப்பதா என்றே தெரியவில்லை. இந்த மெத்தப்படித்த மாணவர்கள் எந்த அடிப்படையில் அமெரிக்கத் தூதரக த்தை நாடினார்களோ தெரியவில்லை. அழைக்கப்பட்டார்களா? அல்லது நுழைந்தார்களா? எல்லாத் தூதரகங் களுக்கும் சென்றார்களா? அல்லது அமெரிக்கத் தூதரகத்திற்கு மட்டுமே போனார்களா?

ஓநாயிடம் ஆட்டுக்குட்டிகளுக்கு பாதுகாப்பு கேட்டதையும் வல்லூறிடம் கோழிக் குஞ்சுக்கு தஞ்சம் கேட்டதை யும் சாதாரணமான மக்கள் எவரும் நம்ப மாட்டார்கள். இத்தனை கோரிக்கைகள் வேண்டுகோள்களை புதிதாகப் பதவிக்கு வந்த பிரதமரிடமோ அன்றி உரிய அமைச்சர்களிடமோ முன்வைத் திருந்தால் கூட அது போராட்டத்தின் ஒரு அம்சம் என்று எடுத்துக்கொண்டிக் கலாம். அல்லது சிங்கள மக்கள் மத்தியில் உள்ள நேர்மையான அமைப்பு களிடம் முன்வைத்து சிங்கள மக்களுக் கான ஒரு செய்தியாக்கியிருந்தால் அது இங்வேளை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இப்பொழுதும் கூட எந்தவொரு தமிழ்க் கட்சியும் அல்லது அவர்களது சிந்தனைப் பட்டறையில் வளர்ந்த அமைப்பும் சரி சாதாரண சிங்கள மக்களிடம் சென்று தமிழர் பிரச் சினையை அது சார்ந்த கோரிக்கை யினை முன்வைத்தமை கிடையாது. அதே வழியைத் தான் பல்கலைக்கழகப் படித்த மாணவர்களும் பின்பற்று கிறார்கள். ஒரு வேளை 'சிங்கள ஏகாதி பத்தியத்திடம்' செல்வது தமிழ் ஆண்ட பரம்பரையினருக்கு தரக்குறைவானது போலும்.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் செல்வது மேன்மையானது என நம்புகிறார்களோ தெரியவில்லை. இதே அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லிவில்ஸி தான் ஒரு வருடத்திற்கு முன்பு யாழ்ப்பாண நூல் நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து தமிழர் போராட்டத்தையும் தமிழீழப் புலிகளையும் மோசமாகத் திட்டித் தீர்த்துக் கொண்டவர். யாராவது இக் கூட்டத் தில் இருந்தால் புலிகளிடம் தனது பேச்சை போய்ச் சொல்லுங்கள் எனவும் திமிர்த்தனமாக பேசியவர். அதனை அன்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சரியாகவே கண்டித்து அறிக்கையும் வெளியிட்டிருந்தது.

ஆனால் அதே ஒன்றியத்தின் பெயரால் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து வீழ்ந்து கும்பிடுவது போன்ற கோரிக்கை வைத்திருப்பது ஒருவகை அடிமைத் தனத்தையே வெளிப்படுத்தியுள்ளது. இது நேர்மையான தேசிய இனவிடு தலைப் போராட்டத்திற்கோ சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கோ எவ்வகையிலும் உதவப் போவதில்லை.

அண்மைக்காலங்களில் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமை எடுத்துக் கொள்ளும் முடிவுகளும் செயற்பாடுகளும் பரந்துபட்ட தமிழ் மக்களது நீண்டகால நலன்களுக்கு குந்தகமானதாகும்.

பல்கலைக்கழக மாணவர்களது செயற் பாடுகளை மக்கள் அவதானிப்பதும் அதனால் ஈர்க்கப்படுவதும் முக்கியமான தாகும். எனவே மாணவர்களது செயற் பாடுகள் திசைமாறிய பாதையில் செல்லக் கூடாது. உலகின் பல்கலைக் கழக மாணவர்களது போராட்டங்களின் செயற்பாடுகளின் முற்போக்கான பக்கங் களை யாழ் பல்கலைக்கழக மாணவர் தலைமைகள் கவனத்தில் எடுப்பது அவசியம். இன்று ஆப்கானிஸ்தானில், பிலிப்பின்சில் நடப்பதை மாணவர்கள் உற்று நோக்குவது பயன் தருவதாகும்.

• • • •

# மலையக கைதிகளின் விடுதலைக்கு கடுமையான அழுத்தங்கள் அவசியம்

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் மலையகத் தமிழ் கைதி களும் வழமைப்போல் அமைச்சர் சந்திர சேகரன் உட்பட பல அரசியல் தலைவர் களுக்கு கடிதம் எழுதியுள்ளனர். உள்ளே இருக்கின்ற கைதிகள் ஏதோ ஒருவகையில் தாங்கள் வெளியே வந்து விடவேண்டும் என்பதால் ஒவ்வொரு முயற்சியிலும் நம்பிக்கை வைத்தே செயற்படுகின்றனர்.

வடக்கு கிழக்கையும் மலையகத்தையும் சேர்த்த அரசியல்வாதிகளும் கைதிகள் விடயம் பற்றி நடவடிக்கை எடுப்பதாக கூறி ஊடகங்களில் விளம்பரங்களை பெற்றுக்கொள்கின்றனர். தேர்தல் காலங்களிலும் தேர்தல் முடிந்த பிறகும் மேற்படி விளம்பரங்கள் அவர்களுக்கு அவசியமானதாகும்.

சட்டரீதியாக செய்ய முடியாத விடங்களை காத்திரமான அரசியல் தலையீடுகளினால் செய்ய முடியும். அதற்கு தொடர்ச்சியான கோரிக்கை களும் போராட்டங்களும் அழுத்தங் களும் அவசியம். மலையகத் தமிழ் கைதி களின் விடயத்தில் திட்டமிட்ட சட்டரீதி யான நடவடிக்கைகளும் அரசியல் நடவ டிக்கைகளும் ஏற்கனவே தேவைப்பட்ட வைகளாகும்.

இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அவற்றையெல்லாம் குழப்பி அரசியல் லாபம் தேடும் வகையில் அவ்வப்போது மலையக அரசியல் வாதிகள் செயற்பட்டுள்ளனர். வேறு முயற்சிகளினால் விடுதலையானவர் களைக் கூட தாங்களே விடுவித்ததாக கூறி விளம்பரமும் தேடியுள்ளனர்.

இவ்விடயத்தில் உள்ள துன்பமான வரலாற்றை பட்டறிவாக கொண்டு போலியான நடவடிக்கைகளில் நம்பிக் கை கொள்ளாது சரியான நடவடிக்கை களில் நம்பிக்கை கொள்ள வேண்டும். மலையக அரசியல்வாதிகளின் வரையறைகளை விளங்கிக்கொண்டு நம்பிக்கைகளை வைப்பது நல்லது. விடுதலைக்கான இரட்சகர்களாக அவர்களை முழுக்கமுழுக்க நம்புவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

எந்த அரசாங்கம் வந்தாலும் அதில் சென்று குந்திக்கொண்டு இருக்கும் மலையக அரசியல் தொழிற்சங்க தலைவர்கள் என்போர் மக்கள் சார்பான உறுதிமிக்க அழுத்தம் கொடுப்பதில்லை. கொடுக்கவும் மாட்டார்கள். அவர்களது பலவீனத்தின் இடங்களை பேரினவாத ஆட்சிகள் சரியாகவே அறிந்து வைத்திருப்பர். இத்தகைய பதவி சுகம் சொத்து நாடி நிற்பவர்கள் மலையக மக்களுக்காக செயல்படுவார்கள் என எவரும் நம்ப முடியாது. மலையக கைதிகளின் விடுதலைக்கு வெகுஜனப்போராட்ட இயக்கம் தான் இறுதி வழி. அதற்குரிய முன்னெடுப்புகள் அவசியம்.


## புதிய பூமி

சந்தா விபரம்

1 வருடம் - 150.00 ரூபா, 6 மாதங்கள் - 75.00 ரூபா

வெளிநாடுகள்

இந்தியா - 400.00 ரூபா, ஏணைய நாடுகள் - 20.00 அ.டொலர்

(தபால் செலவு உட்பட)

*காசோலை/மணிஓடர் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :*

நிர்வாகி

புதிய ப' மி

47, 3வது மாடி, கெ.ம.ச.கட்டிடத் தொகுதி,

கொழும்பு 11. இலங்கை.


# நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

## முஸ்லீம் தலைவர்களின் தனித்துவமான சகோதரத்துவம்!

அமெரிக்கா இஸ்லாமிய உலகைச் சந்தேகத்துடன் பார்க்கிறது. இஸ்லாமிய நாடுகள் மீது நேரடியாக (ஈராக், ஆப்கானிஸ்தான்) குண்டு வீசி முஸ்லீம்களைக் கொலை செய்கிறது. மறைமுகமாக (இஸ்ரேல் மூலம்) பலஸ்தீன முஸ்லீம்களைக் கொலை செய்கிறது.

இந்தக் கொலைபாதக முஸ்லிம் விரோத அமெரிக்காவுடன் யூஎன்.எவ். ஆட்சி குலாவுகிறது. அதன் யூஎன்.பி. முஸ்லிம் தலைவர்கட்கு இது பற்றி கவலை இல்லையா? மாவனல்லையில் கடைகள் எரிக்கப்பட்ட போது சினந்து குமுறிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்குக் கூட இது உறைக்கவில்லையா? எதிர்க்கட்சியில் இருக்கிற முஸ்லிம் தலைவர்கட்குக் கூட இது பற்றிய கவலை இல்லையா? இவர்களேல்லாம் தலைவர்களா, பதவிக்காகத் தலையாட்டுகிற பொம்மைகளா?

## இன்னொரு முஜிபுர் ரஹ்மான்

வங்க பந்து என்று பிரியத்துடன் அழைக்கப்பட்ட முஜிபுர் ரஹ்மான் தனது மக்களின் எதிரியாக மாற ஒரிரு வருடங்களே சென்றன. நம்மூர் முஜிபுர் ரஹ்மானின் ஒற்றை ஆள் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தோழர் விக்கிரமபாகுவை அம்போ என்று கை விட்டுவிட்டு பொதுசன முன்னணியில் சங்கமமாகிவிட்டது. பொதுசன முன்னணியுடன் சரசாடும் பூரண உரிமையும் தனதே என்று நம்பியிருந்த முன்னாள் வாம சமசமாஜக்கட்சியின் முன்னாள் தலைவருக்கு புதிய இடதுசாரி முன்னணி என்ற களவாடிய பேரையுடைய கூட்டணியில் இருந்த மற்ற ஒரே 'கட்சியும்' போனபிறகு படு பயங்கரமான கோபம்.

முஜிபுர் ரஹ்மான் ஒரு குறுகிய முஸ்லிம் தேசியவாதி என்று இப்போது தான் அவரது பத்திரிகை கண்டுபிடித்திருக்கிறது. புதிய இடதுசாரி முன்னணியைக் குலைக்க முஜிபுர் உதவியபோது முஜிபுரின் வண்டவாளங்கள் இவர்களுக்குத் தெரியாமலா இருந்தது? இன்னொரு விதமாகப் பார்த்தால் விக்கிரமபாகு செய்யாத எதை முஜிபுர் செய்து விட்டார்?

## புலி விவகார அமைச்சர்

வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ இருக்கிறாரே, அவரால் உண்மையைப் பேசாமல் இருக்க முடியாது. அரசாங்கம் சமாதானம் பற்றியும் பேச்சுவார்த்தை பற்றியும் என்னவெல்லாமோ மழுப்பப் பார்க்கிற சமயத்தில் அரசாங்கத்தின் உள்நோக்கங்களை மனிதர் எப்படியோ சொல்லித் தொலைத்துவிடுகிறார். ஆயுதங்களைக் கீழே வைத்து பிறகு தான் பேச்சு என்று சொல்லி அதை அடுத்தநாளே மாற்றும் படி கட்டளை கிடைத்ததால் மாற்றி விட்டார். ஆனாலும் யூஎன்.பியின் நெஞ்சின் குரலாக அவர் இருக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர் சொன்னவையும் சொல்பவையும் மறுக்கப்படுவதாலோ மாற்றப்படுவதாலோ உண்மையான நோக்கத்தை யாரும் மாற்றிவிட முடியுமா?

பழைய வெளிவிவகார அமைச்சர் போலவே இவரது வேலை எல்லாம் வெறும் புலி விவகாரம் தொடர்பாகவே தான் இருக்குமா என்று பொறுத்திருந்து தான் பார்ப்பபோமே!

• • • • •

# ஒரு கடிதம்

# பழிவாங்கல் எப்போது நிறுத்தப்படும்?

அடியேன் யாழ் பல்கலைக்கழகத்திற்குள் புதுமுக மாணவனாகச் சென்ற சமயம் சிரேஷ்ட மாணவர்களினால் ஏற்படுத்தப் பட்ட வேண்டத்தகாத Ragging கலாச் சாரத்தினை எதிர்த்தேன். அதனை அடியோடு அழிக்க முனைப்பாக இருந்தேன். இதனை அறிந்த Ragging இற்கு ஆதரவான சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் என்னைத் தனிமையில் அழைத்து "தம்பி சிரேஷ்ட மாணவர்களுடன் ஒத்துழைத்துப் போவது தான் உமக்கு நல்லது" என்று கூறிவிட்டு பின் தனது உறவினர் ஒருவர் மூலம் எனக்குப் பாடம் வெட்டு வேன் என்று அச்சுறுத்தல் விடுத்தும் இருந்தார். அவரது மிரட்டலுக்கு அடி பணிய மறுத்ததினால் நான் திறமையாகச் செய்து இருந்தும் அவரது பாடத்திற்கு குறைந்த பெறுபேறு மட்டுமே கிடைத்தது. அது பழையகதை. இந்தக் கடிதத்தின் நோக்கம் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி யோ அன்றி அதனை மற்றவர்களுடன் பங்கு போடவோ அல்ல. மாறாக இனியும் இப்படியான கல்விக்கொலை இடம் பெறாது இருக்க வேண்டியே ஆகும். இந்தப் பழிவாங்கும் படலம் இன்றும் தொடர்கின்றது. குறிப்பாக Ragging எதிர்ப்பு மாணவர்களுக்கும் அவர்களுக்கு உதவி புரியும் மாணவர் களுக்கும் குறித்த விரிவுரையாளர் பாடரீதியில் தனது கைவரிசையைக் காட்டுகின்றார். இவற்றினை திரையிட்டு மறைக்க ஸ்ரீ கிருஷ்ணபகவானின் புனிதமான ஸ்ரீமத் பகவத் கீதை என்னும் புனித நூலினை கவசமாகப் பயன்படு த்திக் கொச்சப்படுத்துகின்றார். தனது கீதை வகுப்புக்கு மாணவர்களை வரும் படி வற்புறுத்தி வருவதாகவும் தெரிகி றது. ஸ்ரீமத் பகவத்கீதையின் சாராம்சமே "கடமையைச் செய் பலனை எதிர்பார்க் காதே'' என்பதேயாகும். தனது கடமையைச் செய்யாத இவர் எப்படி மற்றவர்களுக்கு உபதேசம் செய்வார்.

இது இவரைப் போன்ற சகல போலி ஆசாமிகளுக்கும் இப்படியானவர் களைத் தெய்வமாகக் கருதுபவர்களுக் கும் பொருந்தும். அண்மைக்காலத்தில் ஒரு மாணவன் பழிவாங்கப்பட்டு பின் உரியவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு அவரின் தலையீட்டினால் அவரது பெறுபேறு மீண்டும் மாற்றிக் கொடுத்த நிகழ்வு எல்லோரும் அறிந்த ஒன்று. மாற்றிக்கொடுத்தவருக்கு எமது உளமார்ந்த நன்றிகள் என்றென்றும் உண்டு. இவர் போற்றப்பட வேண்டிய வரே. ஒரு பிள்ளையைப் பெற்று வளர்க்க பெற்றோர் எவ்வளவு கஷ்டப் படுகின்றனர். பின் அந்தப் பிள்ளையை பாலர் பாடசாலை முதல் A/L வரை கல்வி பயில்விக்க எவ்வளவு பணச்சுமை, மனச்சுமை. பின்னர் உயர் கல்வி கற்க வந்த இடத்தில் இருந்த இடத்தில் இருந்து கொண்டு ஒரு வெட்டு வெட்டுகின்றனர் ஒரு சில மனச்சாட்சி அற்ற மரமண்டைகள். இதனை எப்படிப் பொறுக்க முடியும்? இறுதியாக நடைபெற்ற பரீட்சையிலும் இத்தகைய கல்விக்கொலை இடம் பெற்றதனை பரீட்சைப் பெறுபேறுகள் கோடிகட்டி நிற்கின்றன. இவற்றினை எந்த மாணவர்களினதும் தூண்டுதலின் பெயரில் எழுதவில்லை. மாறாக எனது இயல்பான சுதந்திரப் போக்கு கொண்ட மனத்தில் எழும் எண்ணத்திற்கு வரிவடிவம் கொடுக்கின்றேன். அவ் வளவுதான். எனது பேனாமுனையை கட்டுப்படுத்தும் சக்தி இந்த உலகில் எவருக்கும் கிடையாது.

ஆசிரியர் பற்றாக்குறைவான நேரத்தி லும் கூட இதே திணைக்கள விரிவுரை யாளர் ஒருவரின் நடவடிக்கையில் திருப்தியின்மையினால் அவருக்கு நியாயமான தற்காலிக இடைநிறுத்தம் கொடுத்த உயர் அதிகாரிகள் (குறிப்பாக பீடாதிபதி) சம்மந்தப்பட்டவரில் இத்தகைய அநீதிகளை ஆண்டாண்டு காலமாகக் கண்டும்காணாது இருப்பது ஏனோ? சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்களா? திருத்து வார்களா? அல்லது திருத்தப்படு வார்களா? கொலைகளி லேயே அதி உயர்ந்த கொலை ஒருவனின் கல்வியைக் கொலை செய்வது ஆகும். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவிலா? யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் Ragging இனை தடைசெய்தது போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் போல் மாணவர்களின் பரீட்சைப் Paper இனை அந்த அந்த மாணவர்கள் பார்வை இடுவதற்கு ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும் என்று உரிய இடத்திற்கு அழுத்தம் கொடுத்து அதனை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று கூறி அமைகின்றேன்.

மேற்குறிப்பிட்டவரினால்
பாடரீதியில் பழிவாங்கப்பட்ட
முன்னாள் மாணவன்
**தி. சத்தியேந்திரா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்-குடா நாட்டின் நிர்வாகம் யார் கையில்?

யாழ்-குடா நாட்டின் அரசாங்க நிர்வாகம் யாருடைய கைகளில் இருக்கிறது. அது அரசாங்க-ராணுவ சிவில் நிர்வாகம் என்னும் பெயரிலேயே இருந்து வருகின்றது. இவ்விருபகுதியினரையும் சேர்ந்த உயர் அதிகாரிகளே தீர்மானங்களை மேற்கொள்கிறார்கள். இவர்களுக்கு தெரியாமல் அங்கு எதுவும் நடக்க முடியாது.

ஆனால் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் அதிகரித்த விலைகளும் தொடர்கிறது. கடந்த தேர்தல் காலத்தில் தொடங்கிய இந்நிலை அரசாங்கம் பதவியேற்று இரண்டு மாதமாகியும் முடிவுக்கு வந்தபாடில்லை. கோதுமை மா. சீனி. எரிபொருட்கள் மற்றும் அன்றாட அத்தியாவசியப் பொருட்கள் கேட்பாரின்றி அதிகரித்த விலைகளில் விற்கப்படுகின்றன.

## வர்த்தக முதலைகளின் கொள்ளை லாபம்!

கொழும்பில் இருந்து பொருட்களை கப்பல் மூலம் குடாநாட்டிற்கு கொண்டு வருவதில் ஒரு குறிப்பிட்ட பெரு வர்த்தகர்களே ஏகபோகம் வகிக்கின்றனர். இவர்கள் குறித்தது தான் விலை. விரும்பினால் வாங்குங்கள் இல்லாவிட்டால் விடுங்கள். இது வர்த்தக ஆதிக்கத்தின் ஏகபோக நிலை. இதை தட்டிக்கேட்க அங்கு அரசாங்க-ராணுவ நிர்வாகம் தயாராக இல்லை. அதே போன்று தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்களை மூடிக்கொண்டிருக் கின்றனர். காரணம் இதே ஏகபோக வர்த்தகர்கள் கூட்டணிக்கும் காங்கிரசுக்கும் இருபத்தைந்து முப்பது லட்சம் என தேர்தல் செலவுக்கு எண்ணிக் கொடுத்தவர்கள்.

தற்போதைய அரசாங்கத்தில் யூஎன்.பி. யாழ் மாவட்ட எம்.பி. - மகேஸ்வரன் இந்துக் கலாச்சார அமைச்சர். அவர் பிரபல வர்த்தகர். ஆனால் அவர் இப்போது பேசுவதெல்லாம் ஆன்மீக ஈடேற்றம் பற்றியும் இந்து சமய கலாச்சார வளர்ச்சிபற்றியும் தான். இத்தனைக்கும் அவரது வர்த்தகம் ஓகோ என்று ஓடிக் கொண்டிருக்கிறது.

கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்கள் பெரும் வியாபாரிகள் எல்லோரும் தமிழர் கூட்டமைப்புக் கட்சிகளுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கொஞ்சிக்குலாவி பணம் குவிக்கின்றனர். அதில் ஒரு பகுதி சேர வேண்டிய பலருக்கு பல வழிகளாலும் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் மக்களது நிலைதான் மோசமாகி வருகிறது.

பொங்கல் விழாவிற்கு புனர்வாழ்வு அமைச்சரை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று காட்சிகள் காட்டிய அமைச்சர் மகேஸ்வரன் தாறுமாறான விலை ஏற்றங்கள் பற்றி வாயே திறக்காது இருந்து வருகிறார். திறந்தால் அவரது வியாபாரமும் அல்லவா பட்டுவிடும். வாக்கு வாங்கியவர்கள் பலவழிகளில் பிழைத்து வருகிறார்கள். வாக்களித்தவர்கள் விலைகள் ஏற்றத்தால் விழுங்கப்படுகிறார்கள்.

# டக்ளஸ் கொடுத்தால் பாவம் மகேஸ்வரன் தந்தால் புண்ணியம்

கடந்த அரசாங்கத்தில் இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவரது பணிப்பின் பேரில் வடக்கு கிழக்கில் உள்ள இந்துக் கோவில் பலவற்றுக்கும் பணம் கொடுக்கப்பட்டது. புனரமைப்புகள் இடம் பெற்றன. அப்போது அதனை எதிர்த்து பிரசாரங்கள் செய்யப்பட்டன. "பாவப்பட்ட பணம்" என்றும் பழிக்கப்பட்டது.

இப்போது புதிய ஆட்சியில் அதே அமைச்சராக இருப்பவர் தி. மகேஸ்வரன் பொட்டுப் பிறைகளோடு மாலை மரியாதையுடன் வரவேற்கப்படுகிறார். கோவில்களுக்கு பணமும் புனரமைப்பும் தருவதாகக் கூறியும் வருகிறார். இந்து சமயமும் இந்துக் கலாச்சாரமும் புகழின் உச்சிக்கு போகப் போவதாகவும் கூறப்படுகிறது.

அது சரி, டக்ளசும் அமைச்சராக இருந்ததும் ஒரு பேரினவாத அரசாங் கத்தில் தான். மகேஸ்வரன் அமைச்சராக இருப்பதும் மற்றொரு பேரினவாத அரசாங்கத்தில் தான். அப்படியானால் எப்படி டக்ளஸ் கொடுத்தது பாவப்பட்ட பணம். மகேஸ்வரன் கொடுப்பது புண்ணியப்பட்ட பணமாக இருக்க முடியும். மக்கள் தான் சரிபிழையைப் பிடிக்க வேண்டும்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கும் தொல்லை தவிர்ப்பு குழுவுக்கு முழுக்கு

புதிய அரசின் நீதியமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து இருக்கும் என வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதே வேளை அச்சட்டத்தின் காரணமாகவும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி விசாரணை இன்றி தடுத்து வைக்கப்படுவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட தொல்லை தவிர்ப்புக் குழுவின் இருப்பை அவசியமற்றதெனக் கூறி நீதி அமைச்சர் கைவிடத் தீர்மானித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தான் இலங்கையின் கடுமையானதும் கொடுமையானதுமான சட்டம். அதன் கீழ் நாடு முழுவதும் மூவாயிரம் வரையான தமிழ்க் கைதிகள் நீண்ட காலமாக விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 10,8,5 வருடங்களைத் தாண்டிய நிலையிலும் கைதிகள் விசாரணை இன்றி சிறைகளில் இருந்து வருகிறார்கள் முறையான குற்றச்சாட்டுக்களோ அன்றி அதற்கான ஆதாரங்களோ இன்றி வெறும் ஒப்புதல் வாக்கு மூலங்களுடன் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அடைதது வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த அரசாங்கம் ஏற்படுத்திய தொல்லை தவிர்ப்புக் குழுவால் சில நன்மைகள் பெறக் கூடியதாக இருந்தது. பொலீஸ் ராணுவக் கெடுபிடிகள் அத்துமீறல்களை இக்குழுவுக்கு முறைப்பாடு செய்து சில நிவாரணங்களைப் பெற முடிந்தது. ஆனால் அந்த நிலையை தற்போதைய நீதி அமைச்சர் இல்லா தொழித்திருக்கிறார். இது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக மனித உரிமைப் பக்கத்தை தமிழ் மக்களுக்கு படம் பிடித்துக் காட்டுகிறது. இன்னும் நாட்கள் செல்லச் செல்லவே ஐக்கிய தேசிய முன்னணியின் சுயரூபங்கள் வெளிவந்து கொள்ளும்.

# வவுனியா சிதம்பரபுர அகதிகள் அவலம்

வவுனியா சிதம்பர அகதிகள் முகாமில் (நலன் புரி நிலையம்) 2001 ஆண்டு கார்த்திகை மாதம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்டும் நிவாரண பொருட்களில் 4(நான்கு) கிலோவால் குறைக்கப் பட்டுள்ளது. இதே ஆண்டு மார்கழி மாதம் பருப்பு, சீனி, உப்பு ஆகியவை வழங்கப் பட்டது. ஆனால் அரிசி, மா வழங்கப்பட வில்லை ஐந்து மாதங்களாக எண்ணெய் வகை ஒன்றும் வழங்கப்பட வில்லை. விளக்கு எரிப்பதற்கு கூட அவர் திண்டாடும் நிலை. 2002 தை மாதம் இன்றும் ஒரு பொருட்களும் வழங்கப்பட வில்லை. பிரதேச செயலாளர், அரச அதிபர் ஆகியோரை, கேட்டால் இன்றும் புனர்வாழ்வு அமைச்சு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பொருட்கள் வரவில்லை என கூறுகின் றார்கள். இதனால் மீண்டும் ஒரு சத்தியாக்கிரகத்தை எதிர்நோக்கிய வண்ணம் மக்கள் உள்ளார்கள். ஆட்சி புதியது தான். ஆனால் அகதிகளின் அன்றாட அவலம் தொடர்கதைதான். எம்.பி.மார் எங்கே? அவர்களுக்கு எடுபிடிகளாகி நிற்போர் எங்கே?

# வவுனியா பாஸ் நடைமுறை

இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து பாஸ் நடைமுறை இலகு படுத்தப்படும் என்று செய்திகள் வந்த போதும் நடைமுறையில் மாற்றங்கள் பெரிதாக இடம் பெற்றதாக தெரியவில்லை. வன்னியில் இருந்து வருவோர் பிரமனாளங்குளத்தில் 10நாள் பாஸ் வழங்கப்படுகின்றது. தேவை ஏற்படின் மேலும் புதுப்பிக்க கூடிய வசதிகள் உள்ளபோது இவர்கள் தென் பகுதி செல்வதற்கு பிணையாளி தவர்ந்த ஏனைய செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் அவ்வாறே உள்ளது. தென் பகுதிக்கு செல்லும் ஒருவர் 150-200/- ரூபா வரை இவ்வனுமதிக்கு செலவு செய்ய வேண்டியுள்ளது அத்துடன் பல நாட்கள் காத்திருக்க வேண்டியும் உள்ளது. வவுனியா பாஸ் நடைமுறையானது வெறுமனே பாதுகாப்பு நடைமுறைகளுடன் மட்டும் சம்மந்தப்பட்ட ஒன்றல்ல. அதற்குள் அரசியல், பணம், பேரினவாத முனைப்பு போன்ற பல காரியங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. பணத்தைப் பார்த்துபாராமல் அள்ளி விடுபவர்களும் வேறு வழிகளில் தரகர்கள் மூலம் விடயங்களை அணுகுபவர்களும் தேவையான பாஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் ஏதுமறியாத சாதாரண மக்கள் தான் கடுமையான பாதிப்புக்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். வவுனியாவின் பாஸ் நடைமுறை தமிழ் மக்களைக் கயிறாகத் திரித்துக் கொள்ளும் ஒன்று என்று கூறினால் மிகையாகாது.

# யூ.என்.பி. யின் ஊடக சுதந்திரம்

கடந்த அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை நசுக்கி வந்தது மறுக்கப்படக் கூடியதல்ல. அதற்காக ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் இருந்தனர். இப்போது ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க பல சட்டத் திருத்தங்களைச் செய்ய இருப்பதாகவும் கூறி வருகின்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் எவ்வாறு ஊடக சுதந்திரம் இருக்கப்போகின்றது என்பதற்கு ஒரு முன்னறிவிப்பு இடம் பெற்றிருக்கிறது.

அண்மையில் அமைச்சர் பரிவாரங்கள் யாழ்ப்பாணம் சென்றபோது எந்தவொரு தமிழ் ஊடக வியலாளரும் அழைத்துச் செல்லப்படவில்லை. அவ்வாறே வன்னியின் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது தமிழ் ஊடகவியலாளர்கள் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. திட்டமிட்டே புறக்கணிக்கப் பட்டனர். ஏன்? என்பது பற்றி யாரும் பெரிதாகக் குரல் வைக்கவில்லை.

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

**செண்பகன்**

இலங்கைத் தமிழ் மக்களின் மத்தியில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியத்தில் அடிப்படையான வர்க்கக் கோளாறுகள் பல உள்ளன. இவை இனங்காணப்பட்டு பிரித்துப் பார்க்கப் படும் பொழுது மட்டுமே தமிழ் மக்களின் விடுதலைப் பாதையைச் செப்பனிட முடியும்.

இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு எழுபது ஆண்டுகளையும் அரசியல் சுதந்திரம் பெறப்பட்டு ஐம்பது ஆண்டுகளையும் நாம் கடந்துள்ளோம்.

1505ம் ஆண்டுமுதல் 1948 வரையான 450 ஆண்டுகள் அந்நியரின் ஆதிக்கத்தில் இலங்கைத் தீவகம் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தது.

இலங்கையில் 1915ல் சிங்கள - முஸ்லிம் இனக்கலவரமும் 'சுதந்திர' மடைந்த பின் 1958, 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் சிங்கள பேரினவாத அரசுகள் தமிழ் மக்கள் மீதான இனத் துவேசத்தைக் கக்கி, வெளிப்படையான இனவன்முறையைக் கட்டவிழ்த்து விட்டன. இதனால் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திரம் பற்றிச் சந்தேகமும் வெறுப்பும் கொண்டனர்.

1948ம் ஆண்டில் யூஎன்.பி.ஆட்சியில் தேசிய பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது. சிங்களத் தேசியப் பாதுகாப்பு என்ற ஒருமுனைவாத சிந்தனையில், தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமெனக் கருதப்படும் வட-கிழக்கில் பகிரங்கமாக யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது. தரைவழி - வான்வெளி தாக்குதல் முன்னெடுப்புகள் படைத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்டன. இன்றுவரை 1ம், 2ம், 3ம் கட்ட ஈழப்போர்கள் நடந்து முடிந்துள்ளன.

நான்காம் கட்ட ஈழப்போர் மீண்டும் என்று ஆரம்பமாகுமோ என்று அச்சமுற்று அமைதி சாத்தியமாகுமோ என்று சந்தேகம் கொண்டுள்ளனர் பொதுமக்கள்.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் விடுதலையைச் சரியான திசை மார்க்கத்தில் வழி நடத்தியுள்ளனரா? என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தேசியவாதத் தலைமையின் சாராம்சம் என்ன? எத்தகைய உலகக் கண்ணோட்டத்தை அவர்கள் உள்வாங்கியுள்ளனர்? நோக்கு எது?, போக்கு எது? இலக்கு எது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய வர்க்கச் சார்பில் கட்டியெழுப்பப் பட்டு ள்ளது? என்ற கேள்விகள் எழுப்பப்படும் போது தமிழ்த் தேசியத்தின் தவறான திசை மார்க்கங்களை கண்டறிய முடியும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கொலனித்துவ ஆட்சிகளுக்கெதிராக தமிழ்த் தரப்பில் நடந்த கிளர்ச்சிகள் எவை? சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆகிய வீரபாண்டிய கட்டபொம்மன் சினிமாப்பாணி நாடகங்களைத் தவிர்த்தால் வரலாற்று ஆதாரங்கள் எத்தகையவை? பூதத்தம்பி இசை நாடகத்தை விட்டால் கதி என்ன? யாழ்ப்பாண வைபவமாலை இதற்கு பதில் தருமா? மகாவம்சம் பாணியிலான ஆய்வு தமிழ்த் தேசியத்துக்கு உதவுமா?

மாறாக, கொலனித்துவ அரசுகளுடன் தமிழ் நிலவுடமையாளர்கள் கூடி மகிழ்ந்து உடையார், முதலியார். மணியகாரர் விதானையார்களாக தமிழ் மக்களை நிலமானிய நிலை நின்று மேய்ப்பர்பளாக வழி நடத்தினரா? சைவவேளாள அடையாளத்தை தமிழ் மக்களிடையே மேம்படுத்தினரா என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியம் முளை கொள்ளும் போதிருந்தே அதற்கெனத் தனிமைப் படுத்தப்பட்ட விசேட அம்சங்களை கொண்டிருந்தது. காலம், நேரம், சூழல் போன்ற சமூக யதார்த்தங்களை புறக் கணித்தது. அகவயப்பட்ட சிந்தனைக் குள் சிக்கியது. பழமைவாதத்தினுள் மூழ்கியது. கொலனித்துவ ஏகாதிபத்திய - பூகோளமயத்துடன் கள்ளக்கூட்டை வலுப்படுத்தியது. மனிதாபிமானத்தை நிராகரித்தது. ஜனநாயகத்தை சகித்துக் கொள்ள மறுத்தது.

இத்தனை கோளாறுகளுடன் பிறப்பெடுத்த தமிழ்த் தேசியம் சிங்கள மக்களை எதிரிகளாக கருதியது. எனவே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களப் பொதுமக்களை சி.ஐ.டி.க்கள் என கொன்றும், விரட்டியும் துரத்தியது. சிங்களப் பொதுமக்களுடன் உறவு கொண்டவர்களை துரோகிகளாகப் பட்டம் சூட்டியது. ஆனால் அதே சமயம் டி.எஸ்.சேனநாயக்கா முதல் சந்திரிகா. ரணில் வரையான சிங்கள பேரினவாதிகளுடன் தமிழ்த் தேசியம் ஒட்டுறவாடியது. "சிங்களத் தலைவர்கள் நல்லவர்கள்: சிங்களப் பொதுமக்களே பொல்லாதவர்கள்'' என பகிரங்கமாகவே பிரச்சாரம் செய்தது. எனவே நாற்பதுகள் முதல் இன்று வரை சிங்கள ஆட்சிகளுடன் சிங்கள மந்திரிசபை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கியது அடங்காத் தமிழர் சுந்தரலிங்கம் முதல் சந்திரிகா ஆட்சிக்கு முண்டு கொடுத்து ரணிலை ஆட்சிப்பீடமேற்றியது வரை தமிழ்த் தேசியத்தின் ஆண்ட பரம்பரைக் கண்ணோட்டம் பிரசித்தமானது.

ஒடுக்கப்பட்ட மக்களாகத் தமிழ் மக்களைக் கருதாமல் ஆண்ட பரம்பரையான சேர. சோழ. பாண்டியர்களின் வாரிசுகளாகத் தங்களைப் பாவனை செய்து கொண்டனர் தமிழர் தலைமைகள். இது தந்தை முதல் மைந்தர்களுக்கும் பொருந்தும். எனவேதான் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்ட விடுதலை இயக்கங்களும் வீரர்களும் அரசாங்கங்களுடன் இணைந்து கொண்டனவே தவிர சிங்களப் பொதுமக்களுடன் தமது உறவை வளர்க்கத் தவறியுள்ளன.

தமிழ்த் தேசியத்தின் அகராதியில், ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை, தேசிய இனம் என்ற பதங்கள் அபத்தமான முறையிலேயே பயன்படுத்தப்பட்டன.

தமிழ்த் தேசிய இனம் என்பதற்குப் பதிலாக ஆண்ட பரம்பரை என இறுமாப்படைந்தனர். சுயநிர்ணய உரிமை என்ற பதம் இடதுசாரிகளால் பயன்படுத்தப்பட்டமையால் அதனை இயன்றவரை தவிர்த்துக் கொண்டனர். மாறாக ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆளவேண்டுமென்று அகவயச் சிந்தனையில் அகமகிழ்ந்தனர்.

'சிங்கள ஏகாதிபத்தியம்' என இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுமைக்குமான எதிரியாக சிங்கள அரசை விவரித்து. யதார்த்தத்திற்கு விரோதமாக-முடிந்த முடிவாகத் தமிழ் தேசியம் கருதியது. எனவே உலக ஏகாதிபத்தியமான அமெரிக்காவையும், வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளை நட்பாகக் கொண்டு அந்நாடுகளை இரட்சகர்களாகக் கொண்டனர். தமிழ்த் தேசியத்தின் உலக கண்ணோட்டம் ஏகாதிபத்தியம் சார்பாகவே தந்தை, முதல் மைந்தர் வரை அண்ணன் முதல் தம்பிமார் வரை அமைந்தது.

சிங்களப் பேரினவாதம் என இடதுசாரிகள் பாவித்த பல வருடங்களின் பின்னரே தமிழ் தேசியம் அப்பதத்தினை ஏற்றுக்கொண்டது. தற்போது தான் தேசிய இனம், சுயநிர்ணய உரிமை பற்றிய வெறும் சொற்களை மட்டுமே உள்வாங்கிக் கொண்டனரே தவிர அதன் உள்ளடக்கத்தை வரலாற்றுடன் புரிந்து கொண்டதாக இன்றுவரை தெரியவில்லை.

தமிழ் தேசியத்தின் குறுநலப் பித்தம் சுகப்படும் என் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அது வர்க்க உறவுகளோடு பிணைப்பற்ற ஒன்றாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# வாக்குறுதிகள் இல்லை! கோரிக்கைகள் இல்லை!

## மலையகத் தலைவர்கள் அமோக வெற்றி!!

தேர்தல் என்றாலே வாக்குறுதிகள் இல்லாமல் இருப்பதில்லை. ஆனால் வழமைபோல் மலையக தலைவர்கள் தேர்தல் வாக்குறுதிகள் எதனையும் வழங்காமல் போட்டியிட்டனர். வழமையை விட அதிகமான வாக்குகளை பெற்றுள்ளனர். வாக்குறுதி அரசியல் என்பது முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல். லட்சணங்களில் ஒன்றாகும், அதற்கு எதிராக மக்களின் கைகளுக்கு அதிகாரத்தை கொண்டு செல்லும் அரசியலே புரட்சிகர அரசியலாகும். அவ்வரசியலில் வாக்குறுதிகள் இருக்காது. மாறாக புரட்சிகர பாதையில் மக்களை அணிதிரட்டுவதற்கான அரசியல் வேலைத்திட்டமே இருக்கும்.

ஆனால் மலையகத் தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்காமல், புரட்சிகர வேலைத்திட்டத்துடன் வாக்குகளை கேட்கவில்லை. மாறாக மிகவும் பிற்போக்கான நிலைப்பாட்டிலிருந்து கொண்டு அரசியல் எதனையும் பேசாமல் ஆறுமுகமும், சந்திரசேகரனும் ஐக்கியப்பட்டு விட்டதாக கூறி அதற்காக யானைக்கு வாக்களிக்கும்படியே பிரசாரம் செய்தனர். உயிர் யானை ஒன்றை கட்டி இழுத்துக்கொண்டு தோட்டம் தோறும் சென்று வாக்கு கேட்க மிகவும் மட்டமான பிரசாரத்தை இம் முறை மலையகத்தில் பார்க்க முடிந்தது.

மலையகத் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் எதுவுமே இல்லாதது போன்றும் அவர்களுக்கு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டியதில்லை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய விதத்தில்தான் மலையகத் தலைவர்கள் எனப்பட்டவர்கள் தொடர்ந்து செயற்பட்டுவந்துள்ளனர். மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆணையை மக்களிடமே கேட்கும்

## மலையக மக்கள் சிந்திப்பது எப்பொழுது!

புதிய தேர்தல் யுக்தியை அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. மாறாக ஆறுமுகத்தினதும் சந்திரசேகரனினதும் ஒற்றுமைக்காகவே வாக்களிக்கும்படி கேட்டும் கொண்டனர். அவர்களுக்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகள் கிடைத்தன. ஒன்பது பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஒருவர் அமைச்சர் இன்னொருவர் பிரதியமைச்சர் மற்றவர் கருத்திட்ட அமைச்சர். தேர்தல் முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் பாராட்டு விழாக்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன.

மலையகத் தமிழ் மக்கள் அதிகமாக பாவிக்கும் கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளது. தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளது. 2000ஆம் ஆண்டு எல்லோருக்கும் வழங்கப்பட்ட 400/- சம்பள உயர்வும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை 2001 வழங்கப்பட்ட 1200/- சம்பள உயர்வும் கிடைக்கவில்லை.

ஆறுமுகமும் சந்திரசேகரனும் ஒன்றிணைந்த பிறகு 400/- சம்பள உயர்வு காட்டிக்கொடுக்கப்பட்டது. பிந்துனுவெவ முகாம் படுகொலை களுக்கு எதிரான போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டது. இரண்டு பேரும் சேர்ந்து அதிகப்படியான வாக்குகளை பெற்றுக்கொண்டால் நுவரெலியா மாவட்டத்திலிருந்து மலையகத்தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் குறைந்ததெனவும் விமர்சனம் செய்யப்படுகிறது.

அவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்திய ஒற்றுமைக்கு பெரும் வெற்றி கிடைத்ததாக கூறிக்கொள்கிறார்கள். மலையகக் கூட்டமைப்புக்கு வெற்றி கிடைத்ததாக கூறப்படுகிறது. ஆறுமுகமும் சந்திரசேகரனும் இணைந்ததை மலையகக் கூட்டமைப்பு என்று கூறகிறார்கள். அவர்கள் இருவரின் இரண்டு அமைப்புகளைவிட அதிகமான அமைப்புகள் இருக்கின்றன. அவைகளை உள்ளடக்கி பொதுவேலை த்திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப் படாத எதுவும் மலையகக் கூட்டமைப்பு என்ற நாமத்தை பெற்றுக் கொள்ள தகுதி கொண்டதாக இருக்க முடியாது. ஆறுமுகமும் சந்திரசேகரனும் ஒன்றிணைந்ததை மலையகக் கூட்டணி என்று சில ஊடகங்களும் கூறிவருகின்றன.

எது எவ்வாறெனினும் ஆறுமுகமும் சந்திரசேகரனும் ஐ.தே.மு என்ற ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களாகிவிட்டனர். அவர்களினால் மலையக மக்களுடைய வாழ்க்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்படப்போவதாக பிரசாரம் செய்யப்படுகிறது. சௌமூர்த்தி தொண்டமான் சாகும்வரை 1977ல் இருந்து அமைச்சராக இருந்தார் என்பதும் அக்காலத்தில் சாதிக்கப்பட்டவை என்ன என்பதும் வரலாறு. அதே வரலாறுதான் தொடரப்போகிறது என்பதற்கு ஆராய்ச்சிகள் தேவை இல்லை.

தலைவர்களால் மக்களை ஏமாற்றி அதிகாரத்தை பெற்றக்கொள்ள முடியும் என்ற நிலை தொடரும்வரை மக்கள் அவ்வாறானவர்களை திரும்பத் திரும்ப நம்பி ஏமாந்து கொண்டிருக்கும் வரை வரலாற்றை மாற்றி எழுத முடியாது. வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தால் மாற்றி எழுதுவதற்கான வழியும் பிறக்கும்.

# மனோ பாவ அரசியல்

"கொழும்பு தமிழ் மக்களின் பிரதிநிதி" ஒருவர் மாயாஜால நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதற்காக குத்துவிளக்கேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. குத்துவிளக்கேற்றுவதற்கு பிரதம அதிதியை முதலில் அழைக்காமல் மலையக தேசியப் பட்டியல் தமிழ் பிரதிநிதியொருவரை அழைத்துவிட்டார்களாம் விழா ஏற்பாட்டாளர்கள். அங்கே பிரதம அதிதிக்கு மாலை மரியாதைகள் எல்லாம் நிறையவே கிடைத்துள்ள போதிலும் பிரதம அதிதியான மேல்மாகாண பா.உ.க்கு கோபம் வந்துவிட்டது.

குத்துவிளக்கேற்றுவதற்கு தன்னை முதலில் அழைக்கவில்லை என்ற கோபம் தணியாமல் முன்வரிசை யில் குடும்ப சகிதம் அமர்ந்திருந்த அவர் நிகழ்ச்சி தொடங்கி சில நிமிடங்களில் குடும்பத்துடன் வெளியேறிவிட்டாராம். என்னே அவருடைய சபை அடக்கமும் பொது நாகரீகமும். இத்தகையோர் தான் மக்கள் பிரதிநிதிகள்.

மேல் மாகாணத் தமிழ் மக்களின் பெயரால் பதவிகள், அந்தஸ்து, பணம் இவற்றைச் சுற்றியே இந்தப் பிரதிநிதி எப்பொழுதும் செயல்படுவார். மேல் மாகாணத்தமிழர் சார்பில் பாராளுமன்றப் பதவியை எத்தனையோ குறுக்கு வழிகளில் அடைந்த இந்த சீமான் அதே பேரில் பிரதி அமைச்சர் கேட்டு சதா புலம்பி வருவதாக சிறிகோதாவில் இருந்து சினக்கப்படுகிறது. அதற்கும் அப்பால் இப்போது மாநகரசபைப் பட்டியலில் தம்பியை போட்டுவிட அலுவல் அகோரமாக நடக்கிறதாம். அடுத்த மாகாணசபைப் பட்டியல். அரசியலில் பிழைக்கத் தெரிந்தவர்கள் இப்படியான மனோ பாவத்துடன் தான் இருக்க வேண்டும் என்றே கொழும்பு கடைகளில் பேசிக் கொள்கிறார்கள்.

# அமைச்சு ஒன்று அமைச்சர்கள் மூன்று

ஒரே விடயத்தை கவனிக்க மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் தோட்ட உட்கட்டமைப்பு என்ற விடயத்தை கவனிக்கவே மூன்று பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்காக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரும், கருத்திட்ட அமைச்சர் என்று ஒருவரும் பிரதி அமைச்சர் என்ற ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே தோட்ட உட்கட்டமைப்பின் என்னென்ன விடயங்கள் யார் யாருக்கு உரியது என்பது தெரியாமல் பெரிய குழப்பமாக இருக்கிறதாம். தான் ஐ.தே.கட்சியின் வெற்றிக்கு எவ்வளவோ உழைத்தும் அமைச்சரவை பொறுப்பற்ற கருத்திட்ட அமைச்சே தனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சந்திரசேகரன் சோர்வடைந்துள்ளாராம். அவரின் அமைச்சினால் தங்களுக்கு நன்மைகள் எதுவும் இல்லையே என்று அவரது கட்சியினர் அலுத்துக்கொள்கிறார்களாம்.

# மலையகத்தை ஏமாற்றும் அரசியல் தொடரும்

புதிய அரசாங்கத்தின் நூறுநாட்கள் வேலைத்திட்டம் மலையகத்திற்கு எவ்வாறு பிரயோசனப்படுத்தப்படும் என்பதற்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை பெரும் அதிர்ச்சியை தருவதாக மலையக மக்கள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் விநியோகம் ஒரிருவர்களுக்கு தொழிற்பயிற்சி. வேலை வாய்ப்பு என்பனவே அத்திட்டங்களாகும் துரித வேலைத்திட்டத்திற்கான 100 நாட்களில் 25 நாட்கள் கழிந்துவிட்ட நிலையிலேயே அமைச்சர் சந்திரசேகரனின் அறிக்கை வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனை பார்க்கின்றபோது மலையகத்திற் கென்று பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இருந்தாலும் பழைய தொழிற்சங்க தோட்டக்கமிட்டி தலைவர் களையே இன்னும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் தோட்டக்கமிட்டித் தலைவர்கள் ஒவ்வொரு புதன்கிழமையும் தோட்டத் துரைமாரை சந்தித்து தோட்டத் தொழி லாளர்களின் சார்பில் கோரிக்கைகளை முன்வைப்பார்கள். மினிட் புத்தகம் என்ற பெரிய கொப்பியில் பல கோரிக்கை களை எழுதி ஒப்படைப்பா. அவற்றில் மிகவும் சில்லறையான கோரிக்கை களையே தோட்டத்துரை செய்து தருவதாக ஒத்துக்கொள்வார். திருவிழாவின் போது தோட்டக் கோயிலுக்கு முன்னால் பந்தல்போட தகரங்கள், கவ்வாத்து சாமி கும்பிடுவதற்கு பணம் போன்றவற்றை வழங்குவதாகவே துரை ஒத்துக் கொள் வார். வயதடைந்தவர் களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது, தோட்டலயன்களை திருத்துவது, வீதிகள் போடுவது போன்ற பிரதான கோரிக் கைகளை நிறைவேற்றித் தருவதாக ஒத்துக் கொள்ளமாட்டார்.

அதேபோன்று தான் பல முக்கிய கோரிக்கைகள் தோட்டத்தொழிலாளர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட போதும் 1977ஆம் ஆண்டு முதல் இன்னும் பிறப்புச்சான்றிதழ் விநியோகிப்பதும் அடையாள அட்டை வழங்குவதுமே முக்கிய பிரச்சனைகளாக இருக்கின்றன. அதனை செய்து கொடுத்தாலேயே சராசரி மலையகத்தவர் மிகவும் மகிழ்ச்சி அடைவர். ஆனால் அவை கூட வெறும் வாய்ப்பேச்சில் தான் இருந்து கொள்ளும்.

# மேய்ப்பர்களின் கூற்றுக்கள்

யானையை நேரே பார்த்துக்கோ - இல்லாட்டி ஒட்டு போடுர அன்னைக்கு ஒனக்கெல்லாம் யானை சின்னம் மறந்துபோகும் என்று நிஜ யானையை காட்டி பேசினார் ஆறுமுகம்.
ஒனக்கெல்லாம் மாலையாகிட்டா மாலைக்கண் நோய் வந்திடும். அப்புறம் சின்னம் தெரியாமல் போயிடும். அதனால் காலையில் எழும்பின உடனேயே போய் யானைக்கு ஒட்டப் போட்டிடு.

– ஆறுமுகம்.

மலையகத்தின் ஐக்கியத்திற்காக யானைக்கு வாக்களியுங்கள் - இருபது வருடங்களுக்கு பிறகு மலையகம் எப்படி இருக்க வேண்டும் என்று நான் கனவு கண்டுகொண்டிருக்கிறேன். அந்த கனவு நனவாக வேண்டுமென்றால் யானைக்கு வாக்களியுங்கள்.

சந்திரசேகரன்

மயிலேறி வருகின்றான் கந்தன் மயிலுக்கு வாக்களித்து கந்தனை வெற்றிபெறச் செய்யுங்கள்.

கந்தசாமி

தமிழ்க் கூட்டமைப்பு கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெறாவிட்டால் குடிமுழுகிப் போய்விடாது. என்னை வெற்றிபெறச் செய்யாவிட்டால் மேல் மாகாணத்திற்கு தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும்.

மனோ கணேசன்

# மலையகத்தில் 12கோடி ரூபாய்களை ஏப்பமிட்டவர்கள் யார்?

வீடுகட்டுவதற்காக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினிலிருந்து 12-1/2 கோடி ரூபா தோட்டத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் தோட்டக் உட்கட்டமைப்பு அமைச்சின் ஆலோசகரும் தற்போதைய எம்.பியுமான எஸ்.சதாசிவம் கூறியுள்ளார்.

தேர்தல் காலகட்டங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சலிருந்து எடுக்கப்பட்ட 12-1/2 கோடி ரூபா பணத்துக்கு என்ன நடந்தது என்பது பற்றி பரவலாக கேள்வி எழுப்பப்பட்ட தற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்திற்கு விரோதமாக தேர்தல் காலகட்டங்களில் அபிவிருத்தி வேலைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவையாவும் சட்டவிரோதமானதும் செல்லுபடியற்றதுமாகும்.

ஆனால் தேர்தல்காலகட்டங்களில் வீடுகட்டுவதற்கென ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா படி 12-1/2 கோடி ரூபா பல தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக அவர் கூறிகிறார். அவ்வளவு பெருந்தொகையை தோட்டத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்ததால் தாம் பெருமைப் படுவதாக அவர் கூறியுள்ளார்.

பாஸ் புத்தகங்கள் கையில் கொடுக்கப்பட்டதேயன்றி குறிப்பிட்டபடி 30 ஆயிரம் பணம் அதில் வரவு வைக்கப்படவில்லை என்று பலர் முறைப்பாடு செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

தேர்தல் காலகட்டங்களில் வீடுகட்ட தகரங்களும், சீமேந்தும் கொடுக்கப்பட்டதாகவும் ஒரு வீட்டிலிருந்து பெருந்தொகை சீமேந்தும், தகரங்களும் கண்டுப்பிடிக்கப்பட்டு அது தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தியதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

யாரும் புரிகின்ற தேர்தல்மோசடி குற்றங்களுக்கும் தேர்தல் சட்டமீறல் களுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் இரையாக வேண்டியதில்லை. தோட்ட வீடமைப்பு என்பது சட்டபூர்வ மான ஒன்று அதற்கான பணத்தை சட்டவிரோதமாகவும், ஒளிவுமறைவாகவும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை. தேர்தல் காலத்தில் ஒரு சில அரசியல்வாதிகள் நன்மையடைவதற்காக செய்யும் தில்லுமுல்லுகளுக்கெல்லாம் தோட்டத் தொழிலாளர்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

எனவே பொதுத் தேர்தல் காலங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றி முறையான விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன் அப்பணம் எடுக்கப் பட்டதற்கு எதிராக தேர்தல் சட்டத்தின் கீழ் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக் கப்படவேண்டும். விடயங்கள் போர்த்து மூடப்படுமா? அல்லது வெளிக் கொணர ப்படுமா? இதே போன்று மலை யகத்தின் கல்வித்துறை யிலும் பலகோடி ரூபாய்கள் முறைகேடாகிக் கொண்ட செய்தி ஏற்கனவே வெளிவந்து கொண்டன.

மலையகத் தொழிலாளர்களின் பெயரால் என்னனெமோ எல்லாம் நடைபெற்று வந்துள்ளது. இன்னும் அவை தொடரும். அவற்றில் சில மட்டுமே வெளிவந்து கொள்ளும் மலையக மக்கள் தான் தாம் வாக்களித்த கனவான்களிடம் கேள்வி கேட்க வேண்டும்.

## வா(ழ்)ல்வு அறுந்த இருதயமும் கூன் விழுந்த முதுகெலும்பும்

இலங்கையின் இருதயம்
மத்திய மலை நாடாம்,
இந்நாட்டின் முதுகெலும்பு
மலையகத் தொழிலாளியாம்,
ஏனெனில் –
தேயிலை இறப்பரென்று
தேசிய வருமானத்தை
தேடவைத்தது மலை நாடாம்,
தேசிய இலங்கையின்
எல்லா நாடி நாளங்களிலும்
ஓடிக் கொண்டிருப்பது
மலையகத்தானின் வளமான
இரத்தமாம்,
அது மட்டுமா
மின்சாரம் தடையின்றிப் பாய
மலைநாட்டு அணைக்கட்டுக்கள்
தாம்
நிரம்ப வேண்டுமாம்.
தேசிய குடிநீர் சபைக்கு
மலைநாட்டு
ஆறுகள் தாம் நீர் சேர்க்குமாம்,
அது போலவே –
இறப்பரின் தரத்துக்கும்
தேனீரின் இரசத்துக்கும்
தேவையானது
மலையகத்தானின் இரத்தமும்
வியர்வையுமாம்,
அதனாலே தான் –
இலங்கையின் இருதயம்
மத்திய மலையநாடாம்
இந்நாட்டின் முதுகெலும்பு
மலையகத் தொழிலாளியாம்,
என்றெல்லாம் மேடைகள் பல
போட்டு
மணிக் கணக்காய் மீட்டிங்
வைத்து
மார் தட்டிப் பேசிடுவர்
எங்கள் தங்கத்
தலைவர்கள்.
ஆனால் –
வா(ழ்)ல்வு அறுந்து போன
இதயவதைகளாய்த்தான்
இன்னும்
மலைநாட்டுத் தோட்டத்
துறைகள்
மங்கி இருக்கின்றன.
கூன் விழுந்து குறுகிப்போன
முதுகெலும்புகளாய்த்தான்
இன்னும்
மலையகத் தொழிலாளர்கள்
முடங்கி இருக்கின்றனர்,
நூற்றாண்டுப் பழமையான
அவரிருக்கும் லயின்
காம்பிறாக்களில்
கரிபிடித்த லாம்புகள் தான்
இன்னும்
புகைகக்கிக்
கொண்டிருக்கின்றன,

நல்லசாமி ஜெயப்பிரகாஜ்
எட்டியாந் தோட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



புதியபூமி
புதிய பூமி PUTHIYA POOMI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
சுற்று 09 ஜன/பெப்ரவரி 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 43

S47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11.
இலங்கை. தொ.பேசி : 435117, 335844, பெக்ஸ் : 01-473757

# இரட்டை அதிகார நிலையும் அடுத்த அரசியல் நகர்வும்

கடந்த வருடத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் ஒரு வருட முடிவில் பொதுத் தேர்தல் இடம் பெற வேண்டிய தாயிற்று. அதுவே அண்மையில் நடைபெற்ற பன்னிரண்டாவது (டிசம்பர் 5, 2001) பொதுத் தேர்தலாகும். அதன் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் ஐக்கிய தேசிய முன்னணியின் கைகளுக்கு சென்றடைந்துள்ளது.

இதனால் அரசியல் யாப்பு ரீதியான நெருக்கடி முடிவுக்கு வந்து விடவில்லை. ஏனெனில் பாராளுமன்ற அதிகாரம் ஒரு கட்சியிடமும் நிறைவேற்று அதிகாரம் மற்றொரு கட்சியிடமும் இருந்து வருகின்றமையாகும்.

இந்த இரட்டை அதிகார நிலையானது எவ்வளவு காலத்திற்கு சுமுகமானதாக இருக்குமோ அந்தளவு காலம் மட்டுமே அரசியல் நெருக்கடி என்பது மேல் எழும்பாது இருக்கும். ஆனால் இவை ஒன்றை ஒன்று நிராகரிக்க முற்படும் போது மீண்டும் முறுகல் நிலை அதிகரித்து நெருக்கடி கொந்தளிக்கவே செய்யும்.

அங்வேளை இரண்டு சாத்தியங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஒன்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் திரட்டி ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை நிறைவேற்றி அவரைப் பதவியில் இருந்து அகற்றலாம். இரண்டாவது. ஜனாதிபதி மிகவும் அடக்கி வாசித்து முரண்படாதவாறு சமாளித்துச் சென்று ஒரு வருட முடிவில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைத்து அடுத்த பொதுத் தேர்தலை நடத்த முற்படலாம்.

இவ்வாறான அரசியல் நெருக்கடிச் சூழலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழர் கூட்டமைப்புக் கட்சிகளும் மலையக, முஸ்லீம் கட்சிகளும் கைகோர்த்துக் கொள்வார்கள். ஜே.வி.பி. பொதுசன முன்னணியுடன் இணங்கிச் சென்று தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள முயலும். இவற்றுக்கும் மேலால் தனி நபர்களாக விலை போகக் கூடியவர்கள் இருபுறத்திலும் இருக்கவே செய்வார்கள்.

எவ்வாறாயினும் அடுத்த ஒரு ஆறு மாதங்களில் இலங்கையில் மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடிக் கொந்தளிப்பு இடம் பெறக் கூடிய சாத்தியங்களே உள்ளார்ந்த ரீதியில் காணப்படுகின்றன.

அடிப்படைக் காரணம் இரண்டு ஆளும் வரக்க பேரினவாத கட்சிகளிடமும் நாட்டை வழி நடத்தக் கூடிய கொள் கையும் நடைமுறையும் அதற்கான ஆற்றலும் இல்லாமையேயாகும்.

இரண்டு கட்சிகளின் பின்னாலும் நிலவுடமை-முதலாளித்துவ நலன் பேணும் சொந்து சுகமுடைய உயர் மேட்டுக் குடி நலன்களே கெட்டியாகி நிற்கின்றன. அவற்றுடன் அந்நிய மூலதன சக்திகள் நாட்டு வளங்களைக் கொள்ளையிடுவதற்காக அணிசேர்ந்து நிற்கின்றன.

இந்த இரட்டை அதிகார நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள இந்திய பிராந்திய வல்லரசு ஒரு புறமாகவும் அமெரிக்க பெருவல்லரசு மறு புறமாகவும் திரை மறைவில் செயலாற்றி வருகின்றன. இதனால் இருபுறத்தி லிருந்தும் நாடு நவகொலனியாக்கம் பெறுவது முன் தள்ளப்படுகிறது.

சமாதான முன்னெடுப்புகள் தோற்றம் காட்டி நிற்கின்றன. அவை உண்மை யானதா? அன்றி நின்று நீடிக்குமா? என்பது தெரியவில்லை. எந்தளவுக்கு இதயசுத்தியோடு விடயங்கள் அணுக்கப்படுகின்றதோ அந்தளவிற்கே அது பலன் அளிக்கக் கூடியது. பிரதான இடமான தீர்வுத்திட்டம் எத்தகையது என்பதிலேயே யாவும் தங்கியுள்ளது.

மக்களது விருப்பம் போல் சமாதானப் பேச்சுவார்த்தையும் தீர்வு முயற்சிகளும் நெருங்கி வந்தாலும் அது பாராளுமன்ற எல்லைகளுக்கு அப்பால் செல்வதற்கு நிறைவேற்று அதிகாரபீடம் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பது மிகப் பெரும் கேள்வியை எழுப்புகிறது.

அவ் விடத்தில் ஜே.வி.பி உட்பட சிஹல உறுமய வரையான சிறிய பெரிய பேரினவாதக்கட்சிகளும் யுத்தத்தால் ஆதாயம் பெற்ற பெரும்பெரும் தரகு வர்த்தகப் புள்ளிகளும் சமாதானத்தை நோக்கிய வழிப்பயணத்தை சீர்குலைக்க வே முற்படுவார்கள். அதற்கு அந்நிய சக்திகளும் துணை புரியவே செய்வார்கள்.

மறு புறத்திலே பொருளாதார நிலை மாற்றம் பெறுவதற்கு புதிய அரசாங்கத் திடம் எதுவும்,இல்லை. அப்படி இருந்தும் வாழ்க்கைச் செலவால் அவதியுற்ற மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி அள்ளித் தந்துவிடும் என்று நம்பிக் கொண்டனர். ஆனால் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

நமது பொருளாதாரத்தின் கூடிவாளம் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றிடம் தான் இருந்து வருகிறது. பல்தேசியக் கம்பனிகளும் அவற்றின் கொள்ளையிடும் சுரண்டல் வர்த்தகமும் நமது பொருளாதாரத்தை உறுஞ்சி வருகின்றன.

எஞ்சியுள்ள பொதுத் துறைகள் தனியார் மயம்பெற வேண்டியதன் அவசியத்தை உலகவங்கித் தூதுக் குழு வற்புறுத்தி நிற்கிறது. தபால், மின்சாரம், புகையிரத, கல்வித்துறை, சுகாதாரத் துறை போன்ற யாவும் தனியார் மயப் படுத்தலுக்கு தயார்படுத்தப் படுகிறது. கல்விக்கு ஒரு அந்தஸ்து உள்ள அமைச்சரே நியமிக்கப்படவில்லை.

இதுவரையான இரண்டு தசாப்த காலத்தில் இலங்கையின் இரண்டு ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளும் யுத்தத்தை முன்னிறுத்தி அதன் மறைவிலும் அதன் சாட்டிலும் நாட்டையும் மக்களையும் நாசகாரப் பாதையிலேயே இட்டு வந்தன. அது ஏகாதிபத்திய நலன்களுக்கு கை கொடுத்தும் வந்தது. இனி மேலும் அரசியல் நெருக்கடி, அரசியல் தீர்வின்மை, யுத்தத்தை விட வேறு வழி இல்லை எனக் கூறி பழைய பாதையில் தானா? அல்லது ஏதாவது புதிய பாதைகள் திறக்கப்படுமா?

புதிய பாதை திறக்கப்பட வேண்டுமாயின் புதிய அரசியல் தலைமைத்துவம் அவசியம். மக்களை விழிப்புற வைப்பதும் மாற்று அரசியல் வழிமுறைகள் கையா ளப்பட வேண்டியதும் நம் அனைவரு க்கும் முன் உள்ள மாபெரும் கடமை. அதனை நம்பிக்கையோடு நோக்கி சரியான பொறிகளை உரிய இடங் களில் வைத்து பற்ற வைக்க வேண்டும். அதுவே மாபெரும் மக்கள் திரள் எழுச்சியாக மாற்றம் பெறும் வல்லமை கொண்டதாக அமையும்.

~ ஆசிரியர் குழு ~

# அமெரிக்கப் பெரு வல்லரசும் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும்

அமெரிக்கப் பெரு வல்லரசு உலக ஆதிக்கம் என்னும் மாபெரும் கனவை நனைவாக்கும் பாதையில் தன்னை வேகப்படுத்தி நிற்கிறது. பொருளாதார அரசியல் ராணுவ சமூக கலாச்சாரத் துறைகள் அனைத்தினதும் ஊடாக ஊடுருவி உலக நாடுகளில் தனது செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இவை ஒவ்வொன்றும் விரிவான விளக்கங்களுக்கு உரியன வாயினும் அதற்குரிய பக்கங்கள் போதுமானவை அல்ல.

அமெரிக்காவின் அடிப்படை அரசியல் நிலைப்பாடு ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமை என்பனவற்றின் ஊடாக தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாத்து நிலை நிறுத்துவதே என மிகச் சுருக்க விளக்கத்தை அமெரிக்க ஆளும் வர்க்கப் பிரசாரகர்கள் பரப்புரை செய்து வருகின்றனர். இன, வர்க்க நிற பெண்ணிய, சமூக, பிரதேச மற்றும் பல்வகை சுதந்திரங்கள் அவற்றுடனான சமூக நீதி என்பனவெல்லாம் அமெரிக்கா ஆளும் வர்க்க அகராதியில் இடம் பெறுவதில்லை. அவை அரத்த மற்ற வெறும் சொற்பிரயோகங்கள்.

தனி மனித சுதந்திரம் என்பதை முதலாளித்துவ அமைப்பு முறையின் கீழான ஒன்றாகவும் ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமை என்பன வற்றை முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு முறையினை உறுதிப்படுத்தி நிலை நாட்டிக் கொள்வதாகவும் தான் அமெரிக்க கொள்கை வகுப்போர் தொடர்ச்சியாக மையப்படுத்தி பின்பற்றி வந்துள்ளனர்.

இந்த அடிப்படையில் அமெரிக்காவின் தோற்றம் வளர்ச்சியைப் பின் நோக்கிப் பார்ப்போமாயின் அதன் ஆரம்பம் தொட்டு கொலைகள் கொள்ளையிடல் நிலங்களை அபகரித்தல் பாலியல் வல்லுறவுகள் போன்ற எண்ணற்ற மனித உரிமை மீறல்கள் மூலமே அமெரிக்கா உருவாக்கப்பட்டது.

அந்த வட அமெரிக்க நிலப்பரப்பின் பரந்த பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வீக மக்களுக்கு இழைத்த கொடுமைகளும் அழிவுகளும் என்றுமே வரலாற்றில் அழிக்கப்பட முடியாத இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாற்றுச் கறைமிக்க செய்திகளாகும். நேர்மையான அமெரிக்க வரலாற்று ஆசிரியர்களின் எழுத்துக்களில் அவற்றைக் காண இயலும்.

அவ்வாறு பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட நிலங்கள் விலைமதிப்பற்ற சொத்துக்கள் மூலமும் ஆபிரிக்காவில் இருந்து மிருகங்களைப் போன்று கட்டி இழுத்துச் செல்லப்பட்ட கறுப்பின அடிமைகளின் கட்டாய உழைப்பின் மூலமாகவுமே அமெரிக்கா செல்வந்த நாடாகக் கட்டியெழுப்பப்பட்டு முதலாளித்துவம் நிலை நிறுத்தப்பட்டது. அந்த முதலாளித்துவமே முதலாவது இரண்டாவது உலக யுத்தங்களின் பின் ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டது. சோவியத் யூனியனது வீழ்ச்சியுடன் சோஷலிசம் தற்காலிகப் பின்னடைவைப் பெற்ற பின் உலகின் தனியொரு ஆதிக்க பெரு வல்லரசாக இன்று தன்னை அமெரிக்கா முன்நிறுத்தி நிற்கிறது.

கடந்து சென்ற நூற்றாண்டில் அமெரிக்க பெரு வல்லரசு விடுதலைக் காகப் போராடி வந்த உலகின் ஒவ் வொரு நாட்டு மக்களினது போராட்டங் களில் எவ்வாறு நடந்து கொண்டது என்பது ஊன்றி அவதானிக்க வேண்டிய தாகும். கொலனித் துவத்தில் இருந்து விடுதலை பெறவும், உள்நாடுகளில் பிரபுத்துவ - முதலாளித்துவ ஆளும் வர்க்கப் பிடிகளில் இருந்து விடுதலை யடையவும் போராடிய மக்களின் பக்கம் அமெரிக்கா ஒரு கணம் தானும் நின்று கொண்டதாக வரலாற்றில் எங்கும் காண முடியாது.

கொலனித்துவத்தில் இருந்து அரசியல் சுதந்திரம் பெற்று உள்ளூர் அதிகார சக்திகளின் ஆளும் வர்க்கப் பிடிகளின் கீழ் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்கா நாடுகள் வந்த போது அமெரிக்க அந்நாடுகளில் தனது கைக்குள் இருக்கக் கூடிய அதிகாரசக்திகளுட னேயே நின்று வந்தது. தேசிய அபிலாஷைகளைக் கொண்ட சக்திகளை ஓரம்கட்டி அழித்தது. அதன் பின் வந்தவர்களைத் தமதாக்கிக் கொண்டது. யாவற்றையும் மீறி நின்ற வர்களுக்கு எதிராக நேரடியாகவும் மறைமுகமாகவும் சதி, ஆட்சிக்கவிழ்ப்பு, ராணுவ சர்வாதிகாரம், நேரடியுத்தம் என பல முகங்களில் செயல்பட்டது.

இன்று பல மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் உயர்ந்த பட்சக் கோரிக்கை பிரிந்து செல்வதாகவும் குறைந்தபட்சக் கோரிக்கை அதிக அதிகாரம் கொண்ட சுயாட்சியாகவும் காணப்படுகின்றன. இத்தகைய தேசிய இனங்களின் தனித்துவங்கள் பாதுகாக்கப்படுதற்கான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை யானது முற்றிலும் ஜனநாயகம் சம்மந்தப்பட்டதேயாகும்.

**வெகுஜனன்**

ஆனால் இந்த ஜனநாயகக் கோரிக்கையை அமெரிக்கப் பெரு வல்லரசு உலகின் எப்பாகத்திலாவது தனது உலக ஆதிக்க சூழ்ச்சித்திட்ட நோக்கத்திற்கு அப்பால் நின்று ஆதரித்து வந்துள்ளதா? கொலனித்து வத்திலிருந்து விடுபட்டு நாடுகளுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுதந்திரம் பெற்றுக் கொண்டவை இன்றைய மூன்றாம் உலக நாடுகள். அத்தகைய நாடுகளின் தேசிய வளங் களைக் கொள்ளையிட்டு தமது இராட் சத பல்தேசியக் கம்பனிகள் ஊடாக உலகமயமாதல் மூலம் நவகொலனி களாக்கி வருவதில் அமெரிக்கா தலைமை தாங்கி நிற்கின்றது. உலகக் கிராமங்கள் தான் அமெரிக்காவின் நிலைப்பாடு. அதன் ஆதிக்கத் தலைவன் தான் மட்டுமே. நாடுகளின் தனித்துவங் களை மறுக்கும் அமெரிக்கா இனங் களின் தனித்துவங்களையும் அதற்கான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையி னையும் தூசாகக் கூட மதிக்கமாட் டாது. தனது பெரு வல்லரசு நலனும்

**அமெரிக்கப் பெரு வல்லரசை நம்பி உலகில் தேசிய விடுதலைப் போராட்டங்களோ சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களோ முன்னெடுக்கப்பட்டதாக வரலாறு இல்லை.**

அதற்கு அடிமை சேவகம் செய்யக் கூடிய ஆளும் வர்க்க் விசுவாசிகளுமே அமெரிக்காவிற்குத் தேவையானதாகும்.

எனவே ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் அதிலிருந்து விடுபடுவதற்கு சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை விட்டுக் கொடுக்காது முன்னெடுக்க வேண்டும். அத்தகைய சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது எவ்வகை யிலும் அமெரிக்கப் பெரு வல்லரசின் மீது நம்பிக்கை கொள்ளு மாயின் அதைவிட்ட அறிவீனமும் முட்டாள் தனமும் வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

தந்திரோபாய ரீதியாக பெருவல்லரசு களை அல்லது பிராந்திய வல்லரசுக ளைப் பயன்படுத்துவது என்னும் கொள் கையானது எந்த வொரு விடுத லைப் போராட்டத்திற்கும் இறுதியில் தீங்கான தாகவே அமையக் கூடியதாகும். இலங் கையில் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் இதற்குரிய மிகத் தெளி வான பட்டறிவு ஏற்கனவே உண்டு.

இத்தகைய வல்லரசுகள் தமது மூல உபாய நோக்கத்திற்கு தேவையான போது சுயநிர்ணய உரிமைப் போரா ட்டங்களை ஆதரிப்பது போன்று பாசா ங்கு செய்து கொள்வதும் குறிப் பிட்ட தூரத்திற்கு அப்பால் நேர் விரோத மாக நடந்து கொள்வதும் தான் வரலாற்றில் இடம் பெற்று வந்திருக்கிறது.

மேலும் கடந்த வருடம் செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல்களுக்குப் பின் அமெரிக்கா உலகின் விடுதலைப் போராட்டங்கள் மீது பாய்வதற்கு சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு என்னும் கவசத்தை அணிந்து நிற்கிறது. பயங்கரவாதத்திற்கு எதிராக எங்கும் யாருடனும் இணைந்து செய லாற்றத் தயார் எனக் கூறுகின்றது. ஆனால் பயங்கரவாதத்திற்கு என்ன அளவு கோல் என்பதை அமெரிக்காவே தனது நலன்களைக் கொண்டு தீர்மானிக்கிறது.

எனவே உலகின் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை நடாத்தி வரும் தேசிய இனங்கள் புதியதோர் அபாயத்தை எதிர்நோக்கி நிற்கின்றன. ஏனெனில் அமெரிக்க பெருவல்லரசு நியாயத்தின்படி சுய நிர்ணய உரிமைக் கான ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் அனைத்தும் பயங்கரவாதமேயாகும். அவ்வாறானால் பெரு வல்லரசை தமது நண்பனாகவோ மீட்பராகவோ நம்ப முடியுமா?

எனவே ஒடுக்கப்படும் எந்தவொரு தேசிய இனமும் அல்லது சமூகமும் பெரு வல்லரசுகளை நம்பி அல்லது அவர்களது தயவில் தங்கி இருந்து எத்தகைய விடுதலைப் போராட்டத்தை யும் நடாத்த முடியாது என்ற வர லாற்று உண்மையை புரிந்து கொண்டு தமது நிலையை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

எனவே சுயநிர்ணய உரிமைக்கான நீண்ட விட்டுக்கொடுக்காத போராட்டத் தில் உண்மையான எதிரி யார்? உண்மையான நண்பர் யார்? என்பது வரையறை செய்யப்பட வேண்டிய பிரதான அம்சமாகும். ஒடுக்கப்படும் மக்களை முற்று முழுதாகச் சார்ந்து நின்று அவர்களின் முழுமையான ஆதரவு ஒத்துழைப்பு பங்களிப்பை கொள்கை நடைமுறை வழிகளில் பெற்று மக்கள் போராட்டமாக்கிக் கொள்வதே அடிப்படையானதாகும். அடுத்து ஒடுக்குமுறையை ஏவிநிற்கும் பேரினவாத யுத்த வெறி பிடித்த ஆளும் வர்க்க சக்திகள் சார்ந்து நிற்கும் பெரும் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள சாதாரண மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய வழிவகைகள் கண்டறியப்படல் வேண்டும். அம்மக்கள் பெரும் திரள் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை நியாயமானது, அது தமிழர்கட்கு வழங்கப்படல் வேண்டும் என்னும் கருத்து வலுப்பெறத்தக்க ஒரு அரசியல் சூழலைத் தோற்றுவிப்பது அவசியமான தாகும். மேலும் பெருவல்லரசையோ அன்றிப் பிராந்திய வல்லரசையோ பற்றிய மயக்கம் அல்லது நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டு அவற்றுக்கு எதிரான நிலைப்பாடு முன்தள்ளப்படல் வேண்டும். அதன் மூலம் மக்கள் பல மட்டங்களிலும் ஐக்கியப்படுத்தப்படுவார்கள்.

இவ்வாறான அடிப்படைகளில் சுய நிர்ணய உரிமைக்கான தேசிய இன விடுதலைப் போராட்டம் நீடித்த மக்கள் யுத்தப்பாதையில் முன்னெடு க்கப்படுவது தான் ஒரு தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை முற்று முழுதாக வென்றெடுக்கக் கூடியதாகும். அதன் சரியான படிப்பினைகளும் முன் அனுபவங்களும் முழு நாட்டினது விடுதலைக்கு ஒளிபாச்சி வழி காட்டக் கூடியதாகவும் அமைந்து கொள்ளும்.

இதனை விடுத்து அமெரிக்கப் பெருவல்லரசின் கால்களில் வீழ்ந்து சுயநிர்ணய உரிமை போராட்டத்திற் கான கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது வோ அன்றி அதன் ஆதரவு ஒத்துழைப் பைக் கோருவதோ எதிர்காலத்தில் சரியான வழிக்கு வந்தேறக் கூடிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை திசை திருப்பி அதற்கு துரோக மிழைப்பதாகவே அமைந்து கொள்ளும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி சாதிக்கப் போவது என்ன?

பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் ஜனநாயகம் சுதந்திரம் வாக்குரிமை போன்ற மகுடங்களின் கீழ் நடைபெற்று முடிந்துள்ளது. தேர்தல் படுகொலைகள் வன்முறைகள் வாக்கு மோசடிகள் மிரட்டல்கள் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றின் ஊடாகவே இத் தேர்தல் நடந்தேறியுள்ளது. இத்தேர்தல் நீதியாக நேர்மையாக நடாத்தப்பட்ட தேர்தல் என எவரும் கூறமுடியாத அளவுக்கு மோச மான ஒரு தேர்தலாகும்.

இத்தேர்தலில் அரசியல் கட்சிகளின் கொள்கை கோட்பாடுகள் பெருமளவிற்கு முன்னுரிமை பெறவில்லை. வழமை போன்று பணவலிமை, பரம்பரை ஆதிக்கம், அந்தஸ்து, சாதி இனம் மதம் பிரதேசம் அடாவடித்தனம் போன்றனவே வெற்றி தோல்விகளுக்கு பெரும் பங்காற்றி உள்ளன. நாடு முழுவதும் இவை பொதுப்படையான ஒரு பண்பாகவும் அவை நிலவுடமை முதலாளித்துவ கருத்தியல் சிந்தனை வழிபட்டதாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ ஆதிக்க சக்திகளின் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறி ஆட்சி ஆதிகாரத்தில் இருந்து வந்துள்ளன. அதன் வழியில் தான் ஏழு வருட பொதுசன முன்னணி ஆட்சிக்குப் பின் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற அதிகாரத் திற்கு வந்துள்ளது. இருந்த போதிலும் நிறைவேற்று அதிகாரத்தை யுடைய ஜனாதிபதியாக அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகாவே பதவி வகிக்கப் போகிறார். இதன் மூலம் பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடும் அரசியல் நெருக்கடியும் உருவாகுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒரு வருட காலத்திற்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்படலாம். அல்லது ஒருவருட முடிவில் பாராளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்படலாம். இரண்டில் ஒன்று நடைபெறக் கூடிய சாத்தியங்களே அதிகம் காணப்படுகின்றன.

அவை ஒருபுறத்தில் இருக்க பதவிக்கு வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி எவற்றை சாதிக்கப் போகின்றது என்பது உடனடியாக எழும் கேள்வி யாகும். யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச் சினைக்குத் தீர்வு. பொருளாதாரத்தை சீர்செய்து மீளக் கட்டியெழுப்புவது. ஜனநாயகத்தை நிலைநாட்டுவது. இவை மூன்றுமே ஐக்கிய தேசியக் கட்சியின் பிராதன தேர்தல் வாக்குறுதி யாக உரத்துக் கூறப்பட்டவைகளாகும்.

மேற் கூறிய மூன்று வாக்குறுதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கண்டு பிடிப்புகள் அல்ல. 1994ல் பொதுசன முன்னணியும் சந்திரகா அம்மையாரும் இதே வாக்குறுதிகளை மக்கள் முன் வைத்துத்தான் அமோக வெற்றி பெற்றுக்கொண்டனர். அன்று பதினேழு வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட ஆட்சியை வெறுத்து எதிர்த்தே அதற்கு மாற்றாக பொது சன முன்னணியைப் பதவிக்கு மக்கள் கொண்டு வந்தனர். ஆனால் பொதுசன முன்னணியும் சந்திரிகா அம்மையாரும் மக்களுக்கு தமது புற முதுகைக் காட்டி ஏமாற்றி யுத்தத்தை முன்னெடுத்து பொருளாதாரத்தை நாசப்படுத்தி ஜனநாயக மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்தனர். அது ஐக்கிய தேசியக்கட்சி 1994ல் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து தொடர்வ தாகவே அமைந்துகொண்டது. ஆட்கள் மாறினார்களே தவிர யுத்தத்தின் மறைவில் நாட்டை நவகொலனியாக்கும் கைங்கரியம் தொடரவே செய்தது.

அதன் எதிர் விளைவுகளால் வெறுப்புற்ற மக்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை அரங்கில் கொண்டு வந்து விட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி எதனைச் சாதிக்கப் போகிறது. ஆரம்ப நடவடிக்கைகள் எனக் கூறி யுத்த நிறுத்தத் திற்கு சாதகமான வகையில் மோதல் தவிர்ப்பைச் செய்துள்ளது. வரையறுக்கப்பட்ட பொருட்களை வன்னிக்கும் கிழக்கிற்கும் அனுப்புவதில் தாராளம் காட்டலாம். மற்றும் பொலீஸ் ராணுவக் கெடுபிடி களை தற்காலிகமாகத் தளர்த்தி ஒரு வகைத் தோற்றம் காட்ட லாம். பேச்சு வார்த்தைக்கு இந்தியா வழியாக சமாதான மேசையையும் தயார்படுத்தலாம். இவற்றை நாட்டின் மீது அக்கறைஉள்ள எவரும் எதிர்க்க மாட்டார்கள். பேரினவாத யுத்த வெறியர்கள் மட்டுமே கூக்குரல் வைப்பார்கள்.

இவ்வாறு நகர்த்தப்படும் பேச்சு வார்த்தைக்கான பாதையில் அதற்குரிய பிரதான இடமான பேச்சுவார்த்தை மேசையில் எதனை முன் வைத்து எந்த அடிப்படையில் பேசுவது என்பதே மிக முக்கிய பிரச்சினையாகும்.

இவ்விடத்திலே தான் ஐக்கிய தேசியக் கட்சியின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எத்தகையது என்பது தெளிவாகும். அத்தகைய ஒரு கட்டம் உடனடியாக வரும் என எதிர்பார்க்க முடியாது. பிரதமர் ரணில் கூறியது போன்று படிப்படியாகவே விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு ஒருவருடத்திற்கு மேல் ஆகலாம் என்பதன் பொருளும் இழுத்துச் செல்லலாகவே இருக்கும்.

அடுத்து பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உள்ளன என்பது மூடு மந்திரமாகவே உள்ளது. பொத்தம் பொதுவான அபிவிருத்தி திட்டங்கள் எனக் கூறி நூறு நாட்கள் வேலைத் திட்டங்கள் பற்றி விரித்து வாசிக்கப் படுகிறது. விவசாயம் கைத்தொழில், ஏற்றுமதி உற்பத்தி, வர்த்தக விரிவாக்கம் என்றெல்லாம் பேட்டிகளும் அறிக்கைகளும் அமைச்சர்களிடமிருந்து வந்து கொண்டே இருக்கின்றன.



ஆனால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தாராள பொருளாதாரக் கொள்கையாலும் தனியார் மயத்தின் விளைவாகவும் பல்தேசியக் கம்பனிகளின் இராட்சதப் பிடிகளாலும் உள்நாட்டுப் பெரு முதலாளிகளின் உறுஞ்சல்களாலும் சின்னா பின்னமாகி நிற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கு மாற்றுத் திட்டம் யாது? உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பன வற்றை மீறிச் செயல் பட முடியுமா? இந்தியப் பெரு முதலாளியத் தோடு உறவு பூண்டு அவர்களது வர்த்தக நலன்களுக்கு பாத பூசை செய்வதற்கு முன்வந்ததை அண்மைய இந்தியப் பயணத்தில் காண முடிந்தது. பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சரான மிலிந்த மொரகொட இலங்கையை ஹொங்கொங் ஆக மாற்றப்போவதாக இந்தியாவிற்கு உறுதி கூறித் திரும்பியுள்ளார் அது மட்டுமன்றி இராமேஸ்வரம் தலைமன்னார் பாலம் அமைக்கும் திட்டமும் முடிவாக்கப்பட்டுள்ளது. இதன் அபாயம் பன்முகப்பட்டதாகும். ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதுமாகும்.

எனவே பொருளாதார மீள் கட்டமைப்பு என்பதில் புதிய திட்டங் கள் எதுவும் இல்லை. அன்று ஜே.ஆர். தொடக்கி வைத்த ஏகாதி பத்திய பூகோளமயமாதலுக்கு குடை விரித்துக் கொடுத்து பல்தேசியக் கம்பனிகளின் நிழலில் ஆட்சி நடத்துவதே கொள்கையாகும். இது மக்களது எதிர்பார்ப்புகளுக்கு மாறானதும் மோசமானதுமான பொருளாதார நெருக்கடிகளுக்கே இட்டுச் செல்லக் கூடியதாகும். இவையனைத்தையும் இவ் அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் போது வெளிச்சமாகி விடும்.

இவ்வாறே ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் எதிர் கொள்ளும் ஜனநாயக வேஷமாகும். பதவிக்கு வந்தவுடன் இவை சுகம் போன்றுதான் தெரியும். பிரச்சினைகள் எதிர்பார்த்த தீர்வு களைக்காணத் தவறும் சந்தர்ப்பங்களில் தான் ஜனநாயக வேடங்கள் கழற்றி வைக்கப் பட்டு மறுப்புக்கள் மீறல்கள் அடக்கு முறைகளாக வளர்ந்து கொள்ளும்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவிக்கு கொண்டு வர வாக்களித்த மக்கள் அனைவரும் ஏமாற்றப்பட்டு பல முனைகளாலும் கடும் பாதிப்புக்களைப் பெறுவார்கள். அதே நேரம் ஆட்சியை அமைக்க தமது பணம் பொருள் செல்வாக்கு அனைத்தையும் வழங்கிய பெரு முதலாளிகள் பண முதலைகள் அந்நிய உள்ளூர் பிற்போக்கு சக்திகள் தமக்குரிய சகலவற்றையும் பெற்றுக்கொள்வர்.

# தமிழர் கூட்டமைப்பின் பின்னால்..?

தமிழ் மக்கள் வரலாறு காணாத துன்பதுயரங்களை பல்வேறு இழப்புகள் மத்தியில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கு அடிப்படைக் காரணம் பேரினவாத ஆளும் வர்க்க ஆட்சிஅதிகார சக்திகள் பின்பற்றி வந்த இன ஒடுக்கு முறைக் கொள்கைகளேயாகும். இரண்டு பேரினவாதக் கட்சிகளும் ஒன்றிற்கு மற்றயது எவ்விதத்திலும் சளைத்தவையல்ல.

அதேவேளை இப்பேரினவாத ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்ட இயக்கங்களை முன்னெடுத்த தமிழ் தேசியவாதத் தலைமைகள் உரிய கொள்கை வழி நின்று இன்றுவரை தலைமை தாங்கிச் செயல்படவில்லை. காரணம் அத்தலைமைகளது வர்க்க நிலைப்பாடேயாகும். இத்தகைய தலைமைகள் செய்து வந்த பாரிய அரசியல் தவறுகளால் தமிழ் மக்கள் இழப்புகள் அழிவுகள் இடப்பெயர்வுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுமை களையும் அனுபவித்துக் கொண்டுள்ளனர்.

இத்தனைக்கும் மத்தியில் காணப்படும் ஓர் அதிசயம் என்னவெனில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் தமிழ் மக்களின் தலைகளில் பழமைவாத அரசியல் ஆதிக்க சக்திகள் எந்தளவுக்கும் மிளகாய் அரைத்துக் கொள்ளலாம் என்பது தான். இனம் மொழி பற்றியும் பழமைப் புகழ் பற்றியும், புகழ்த்தன மாகவும் வெறித்தனமாகவும், பூசாரி வேடத்தில் நின்று பேசினாலும் சரி, கசாப்புக் கடைக்காரனாக நின்று உரத்து சத்தமிட்டாலும் அவர்களை வாரி அணைக்கும் பழமைவாதக் கருத்தியலால் கட்டுண்டு காணப்படும் ஒரு தமிழ்ச் சமூகத்தையே வடக்கு கிழக்கில் காணமுடிகின்றது.

இத்தனைக்குப் பின்பும் கடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரையும் வடக்கு கிழக்கில் பதினைந்து தமிழர் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பதினைந்து பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் எதனைக் காட்டுகின்றது? தமிழ் மக்களை பழமைவாத பிற்போக்கு ஆதிக்கவாத அரசியல் சக்திகள் எப்படியும் ஏமாற்றித் தமது காலடிகளில் வைத்திருக்கலாம் என்பதையே கடந்த தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

தேர்தல் நியமனத்திற்கு சில வாரங்கள் முன்புவரை ஒருவரை ஒருவர் எதிர்த்து வந்த நான்கு தமிழ்க் கட்சிகள் அவசர அவசரமாக கொழும்பில் வைத்துப் பிணைக்கப் பட்டு தமிழர் தேசியக் கூட்டமைப்பு என நாம கரணம் சூட்டப்பட்டது. இதன் பின்னால் இருந்தவர்கள் பெரும் தமிழ் முதலாளிகள் மேட்டுக்குடிப் பழமைவாத ஆதிக்க சக்திகளின் பிரதிநிதிகள். இந்து கிறிஸ்தவ மத நிறுவனத் தலைமைகள் உட்பட இந்திய அமெரிக்கத் தூதுவர்கள் என்போர் தமிழர் கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்றனர். இவர்கள் அனைவரும் பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத் தமிழர் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் என்பது முதன்மையான உள்ளார்ந்த நிபந்தனையையாகும்.

இங்குதான் பெருமுதலாளித்துவ பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சியுடனான வர்க்க பாசமும் உறவும் தெளிவாகின்றது. இன மொழி பிரதேச உரிமைகளோ அன்றி ஏகப் பெரும்பான்மையான தமிழ் மக்களின் நலன்களோ தமிழ்த் தலைமைகளுக்கு முக்கியமானவை அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கொலு வேற்றி தமது வர்க்க ஒருமைப் பாட்டைத் தெரிவித்துக் கொள்வதில் தான் அவர்களது முழுக் கவனம் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. இப் பொழுதும் அது தான் நடந்திருக்கிறது.

நான்கு கட்சிகளின் கூட்டமைப்பின் தமிழர் கூட்டணியானது தமிழ் மக்களை அரசியல் வனாந்தரத்திற்கு இட்டுச் சென்ற மோசமான கட்சியாகும். தானே தோற்றுவித்த தமிழீழக் கோரிக்கையை தூக்கி வீசிவிட்டு பாராளுமன்றத்திற்கு வெட்க ரோசமின்றி சென்றது மட்டுமன்றி தமிழ்மக்களை பன்முக அழிவுகளுக்கும் தலை குனிவுகளுக்கும் உள்ளாக்கிய கட்சியாகும்.

தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணத்து உயர் சைவவேளாள மேட்டுக்குடியினருடன் கைகோர்த்து அகில இலங்கை நியாயம் பேசி வந்த கட்சியாகும். ஜி.ஜி.பொன்னம்பலம் வகித்த அரசியல் பிற்போக்குப் பாத்திரம் நாடறிந்தாகும். அவரது மகன் குமார் பொன்னம்பலம் தமிழர் கூட்டணியால் துரோகி என வர்ணிக்கப்பட்டு வந்தவர். தனது இறுதிக் காலத்தின் ஒரு ஐந்து வருடங்களில் தான் அவரது புலி ஆதரவு நிலைப்பாடும் தமிழர் சார்பான கடுமையான அறிக்கை களும் அவருக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கவனிப்பை ஏற்படுத்தியது. இருப்பினும் அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரை ஒருபோதும் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க தமிழர்கள் முன்வரவில்லை. இன்று அவரது கொடூர இறப்பைத் தமதாக்கிக் கொண்டு அரசியல் செய்து வருகின்றமை புதுமையான ஒன்றல்ல. எவ்வாறாயினும் தமிழ் காங்கிரஸ் தமது குடும்ப ஆதிக்க அரசியலையும் உயர் சைவவேளாளர் ஆதிக்கத்தையும் மீளப் பெற்றுள்ளமை குறிப்பானதாகும்.

ஏனைய தமிழ்த் தீவிரவாத இயக்கங்களான ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும் இரத்தத்தால் கறைபடிந்து போன கொலை கொள்ளை அவர்களது செயற்பாடுகளில் முதன்மை வகித்தன. இந்திய மேலாதிக்கத்திற்கு தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்தவர்கள். இவர்களால் அழிந்து போன தமிழ்க் குடும்பங்கள் பலநூற்றக் கணக்கில் கணக்கிடலாம். ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்து விட்டதாகக் கூறிக் கொண்டே தற்பாதுகாப்பு என்னும் பெயரில் ஆயுத அடாவடித் தனம் புரிந்து கொண்டே இருப்பவர் களும் இவர்கள் தான். இவர்களது ஐக்கிய தேசியக்கட்சி - இந்திய விசுவாசம் கூட்டமைப்புக்கு உகந்தாகிக் கொண்டது.

இத்தகையோர் இணைந்து அடிப்படை வேலைத்திட்டமோ தீர்விற்கான வழிமுறைகளோ எதுவும் முன்வைக் காது புலிகள் இயக்கத்தை முன் நிறுத்தி அதன் மறைவிலேயே வாக்குக் கேட்டனர். புலிகள் இயக்கத்திற்கு வேறு வழியின்றி இக் கூட்டமைப்பை மறைமுக வழிகளில் ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதில் பெரு முதலாளித்துவ பழமைவாத ஆதிக்க அரசியல் சக்திகளுக்கு புலிகள் இயக்கம் படியிறங்கிச் சென்றதா? அல்லது தமது நிலைப்பாட்டிற்கு ஒரு தற்காலிகத் தந்திரோபாயத்தைப் புலிகள் இயக்கம் பயன்படுத்திக் கொண்டதா? காலம் பதில் கூறிக்கொள்ளும்.

இதன் வழியில் தான் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஈ.பி.டி.பியை முற்றாகத் துடைத் தெறியும் வகையில் தமிழர் கூட்டமைப்பிற் காகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் வாக்கு வேட்டையில் இறங்கியது. ஒரு பிசாசைக் கலைப்பதற்கு இரண்டாவது பிசாசைக் கட்டியணைத்த செயலைத் தான் பல்கலைக்கழக மாணவர்கள் செய்து கொண்டனர்.

அவர்களது அரசியல் அறியாமையின் விளைவை அவர்களே கண்டு கொள்ளும் சூழல் வந்து கொள்ளவே செய்யும். ஆனால் மீண்டும் மீண்டும் தவறிழைப்பதும் அதிலிருந்து படிப்பினை பெறாமையும் தமிழ்த் தேசியவாதம் பின்பற்றி வந்த நடைமுறை என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

ஈ.பி.டி.பி. கட்சி பொதுசன முன்னணியின் எழு வருடகால ஆட்சியின் பங்காளி. தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமையான யுத்தத்திற்கு ஆதரவு கொடுத்து வந்த கட்சி. அதனுடன் தமிழ் மக்களின் மத்தியில் அறியாமையும் வறுமையும் கொண்ட மக்களை பேரினவாதத்தின் நவீன அடிமைகளாக்கிய செயற்பாடுகளும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவைகள் அல்ல. அவை அரசியல் ரீதியில் மக்களுக்கு புரிய வைத்து மக்களால் நிராகரிக்க வைப்பதே சரியான வழிமுறையாகும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தமிழர் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்த செயற்பாடானது மிகவும் பிற்போக்கான அரசியல் சூழலை மீளமைத்துக் கொள்ளவே வழி சமைத்துள்ளது. ஆளும் பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் உள்ளார்ந்த உயர்வர்க்க நிலைப்பாட்டுடன் இணங்கிப்போகக் கூடிய ஒரு தமிழ்க் கூட்டமைப்பையே வலுப்படுத்தியுள்ளது. அதேவேளை தமிழ் மக்களை பழமைவாத ஆதிக்க அரசியல் சக்திகளின் பிற்போக்குப் பிடிக்குள் சிக்க வைப்பதில் இத்தேர்தல் உதவியிருக்கின்றது.

இவற்றின் ஒட்டுமொத்த அபாய விளைவுகளைத் தமிழ் மக்கள் விரைவாகவே சந்திக்க வேண்டிய சூழல்களே எதிர்காலத்தில் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

முருகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்து அரபாத்: இன்னொரு தீர்க்கதரிசி

இமயவரம்பன்

தமிழ் இளைஞர்களின் ஆயுதமேந்திய நடவடிக்கைகள் ஒருபுறம் நியாயமான கோபஉணர்வுகளால் நியாயப்படுத்தப் பட்டாலும், மறுபுறம், வெகுஜன அரசியல் சாராத வீரதீர சாகசக் குழுக்களின் முறையிலேயே அமைந்தன. அவர்களது குற்றச்செயல்களின் ஒரு பகுதி அரச வன்முறையின் கருவிகளாகவும் முகவர் களாகவும் கருதப்படக்கூடிய தனிமனி தர்கட்கு எதிரானது. அதுபற்றிப் பொது மக்களிடம் உற்சாகம் இல்லாதபோதும் அதை ஏற்கும் மனநிலையாவது இருந்தது. ஐமிச்சத்தின் பேரில் பிடிக்கப்பட்ட இளைஞர்கள் தேடப்பட்டுத் தலை மறைவாகியவர்கள் போன் றோரது நிலைமைகளால் மக்கள்மனதில் கொதிப்பு மிகுந்து வந்தது. அதை விட முக்கியமாக பொலிஸ் ராணுவக் கெடுபிடிகளும் பொதுமக்களுடன் அரச படையினரும் பொலிசாரும் பொது வாகவே நடந்து கொண்ட விதங்களும் நிலைமைகளை மோசமாக்கி வந்தன.

இயக்கங்களின் பேரில் சுயலாபத்துக் காகக் கொள்ளையடித்தல் தனிப்பட்ட கோபதாபங்களைத் தீர்த்தல் போன்ற வையும் நிகழ்ந்தன. இயக்கங்களின் ஆணையின் கீழ் நடத்தப்பட்ட பல கொள்ளைகளும் கொலைகளும் மக்களது அங்கீகாரத்தைப் பெற்றதாகக் கூற இயலாது. வட-கிழக்கின் தமிழ்ச் சமுதாயம், குறிப்பாக யாழ் குடா நாட்டையும் அதை அண்டிய பகுதிக ளையும் சேர்ந்த சமுதாயம் முன் கண்டி ராதளவில் வன்முறையையும் வன்முறை சார்ந்த சமூக நெருக்குவாரங்களையும் எதிர்நோக்கியது. அதேவேளை, இவற்று க்கு எவ்வாறு முகங் கொடுப்பது என்பது பற்றிய வழிகாட்டலை வழங்க இயலாத நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலிழந்து கிடந்தது.

1983ல் நடந்த புகையிரதப் பாதை தகர்ப்பு அரசாங்கத்தைப் பொறுத்த வரை ஒரு பெரிய சவால் எனலாம். பிரச்சினையை வெறும் வன்முறை யாகவும் பயங்கரவாதமாகவும் காணுகிற தற்கு மேலாக இந்த வன்முறையில் ஆழ்த்திக்கிடந்த சமூகப் பிரச்சனை எது என்று அறிந்ததும், அதைத் தீர்ப்பதற்குப் பதிலாக இன ஒடுக்கல், பாதையிலேயே அரசாங்கம் தொடர்ந்தது. அரசாங் கத்தின் இந்தவிதமான அணுகுமுறை, தமிழ் மக்கள் மனிதிற் கொதிப்பை எழுப்பிய அதே வேளை, அரசின் அடக் குமுறைக் கருவிகளான ராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் அதிகாரிகளிடம் மட்டுமன்றிக் கீழ்மட்ட ஊழியர்கள் நடுவிலுங்கூடப் பேரினவாதத்திமிருடன் கூடிய நடத்தையை ஊக்குவித்தது. வடக்கில் நிலவரங்கள் உக்கிரமாகி வந்த அதேவேளை கிழக்கிலும், வன்னியிலும், மாவலி அபிவிருத்தி என்ற பேரிலும் வேறு முகாந்திரங்களிலும் திட்ட மிட்ட நிலப்பறிப்பும், சிங்களக் குடியேற்றமும் தொடர்ந்தன. தமிழ் மக்கள் வெளி வெளியாகவே அச்சுறுத்தலுக்கு உள்ள ாயினர். உதிரியான எதிர்ப்பு நடவடிக் கைகளாகவே ஒடுக்கு முறைக்கு எதிரான நடவடிக்கைகள் நடந்தது முக்கியமான ஒரு அம்சமாகும்.

**அண்ணன் காட்டிய வழி - 10**

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை பற்றிப் பேசுவதைக் கூட மிகவும் கவனமாகவே செய்யும் நிலைக்குக் கீழிறங்கிவிட்ட த.வி.கூ. தலைமை இளைஞர்களின் வன்செயல்களையோ கொலை, கொள்ளை உட்பட்ட குற்றச் செயல்களையோ கண்டிக்க ஆயத்த மாக இருக்கவில்லை. அவர் களது இரு தலைக்கொள்ளி எறும்பின் நிலைக்கான காரணங்களை அவர்கள் அறிந்திருந் தாலும் அதிலிருந்து மீளுவதற்கு அவர்கள் தமக்காக உருவாக்கிய அரசியற் சூழல் சுவரெழுப்பி அதனுட் கைதிகளாகச் செயலற்றுப் போனதற் கான காரணங் களைக் கூறுவதனால், பாராளுமன்ற மூலம் தமிழீழத்தைப் பெற்றுத் தருவோம் என்ற பொய் வாக்குறுதி, பாராளுமன்ற மூலம் தமிழ் மக்களின் குறைந்தபட்சத் தேவைகளை யேனும் வென்றெடுக்க இயலாது என்று தெளிவாகிய பின்னரும் எதுவிதமான மாற்று வேலைத்திட்டமோ போராட்ட வழிமுறையோ இல்லாது ஜே.ஆர்.ஜயவர்த்தனவை அறிந்தும் அவருடைய அரசியற் பேரங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டது. சாத்வீகப் போராட்டமே தமது வழிமுறை என்று கூறிக் கொண்டே சில வன் முறைக் குழுக்களை ஊக்குவித்ததும் மாற்றுக் குழுக்கள் வளரக் கூடாது என்ற கவனிப்பை விட வேறெதுவும் இன்றி அணிந்த இரட்டைவேடம், தம்மைமீறி வளர்ந்த ஆயுதக் குழுக்கள் பற்றிய அச்சம், அக் குழுக்களின் பொது வான விரோதக் குற்றச் செயல்களைக் கூடக்கண்டிக்க இயலாத துணி வின்மை, அரசாங்கம் 'பயங்கரவாத த்துக்கு' எதிரான நடவடிக்கைகள் எடுத்த போது அரசாங்கத்தைத் துணிந்து எதிர்க்கவோ வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவோ விளக்க வோ நியாயப்படுத்தவோ இயலாத குழப்பம், பாராளுமன்ற பதவியுடன் கூடிய சொகுசுகளையும் அதனால் கிட்டக்கூடிய பல வேறு சலுகை களையும் கைவிட மனமின்மை, அயலார் தலையீட்டைப் பற்றி வைத்திருந்த நம்பிக்கை, மக்கள் நடுவே சென்று தமது அரசியலை கொள்கை மட்டத் திலோ வேலைத்திட்ட மட்டத்திலோ விளக்குவதற்கு தயக்கம், பதவிகட்கான போட்டா போட்டிகள்.

இன்னமும் சொல்லிக் கொண்டே போகலாம். சுருங்கக் கூறினால் பாராளு மன்றப் பதவிக்கு முதன்மை கொடுத்து வெகுசன அரசியலை நிராகரித்து மேட்டுக்குடிகளின் நலன்களைப் பேணத் தமிழ்த் தேசியவாதம் பேசிய ஒரு அரசியலின் பல்வேறு அம்சங்களே த.வி.கூட்ட ணியின் பல வேறு நெருக்கடிகட்குக் காரணமாயின.

தனது தனிப்பட்ட ஆளுமை மீதும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியின் முக்கியத்தை மிகைப்படுத்தியதும் அமிர்தலிங்கத்தின் தலைமையை உள்ளிருந்து அறிந்த விடயங்கள். துரையப்பா கொலை முயற்சியை கண்டிக் காத அமிர்தலிங்கத்தின் சாத்வீகம் என்றுமே நம்பிக்கைக்கு உரியதாக இருக்க வில்லை. அது மட்டுமன்றிக் கட்சி மாறிய கனகரத்தினத்திற்கு இயற்கை மரணம் கிட்டாது என்று அவர் போட்ட சாபம் பொது மேடை களிலும் அவரது கட்சிக் காரர்களால் மிரட்டலாகக் கூறப்பட்டி ருக்கிறது. த.வி.கூட்டணியின் சாத்வீக அரசியல் மேடைகளிலே தான் சிங்கள இரத்தம் குடிப்பது பற்றியும் சூளுரைக்கப்பட்டது.

த.வி.கூட்டணியின் இரட்டை வேடம் தமிழ் மக்களிடையே அவநம்பிக்கை யையும் பேரினவாத ஆட்சியாளர்கள் நடுவே த.வி.கூட்டணி தலைமை பற்றிய இழிவான மதிப்பீட்டையும் அதே தலை மையால் தட்டிக் கொடுத்து வளர்க்கப் பட்டு நம்பிக்கை இழந்து தீவிரச் செயல் முறைக்குத் திரும்பிய இளைஞர்கள் நடுவே வெறுப்பையும் வளர்த்தது. 1981க்குப் பின்னர் பொது மேடைகளிற் பேசுவதற்குக் கூட த.வி.கூட்டணித் தலைவர்கள் அஞ்சி ஓடுகிற நிலைமை உருவாகி விட்டது. இதையெல்லாம் எண்ணும் போது பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தின் நினைவு வராமலில்லை. அரபாத் தனது வாழ்நாளிற் சிலகாலமாவது தனது மக்களுக்காக ஆயுதமேந்திப் போராடிய ஒரு இயக்கத்தின் தலைமைப் போராளி. ஆயினும் அயலார் தயவில் அரசியல் நடத்த முற்பட்ட காலம் முதலாக, குறிப்பாக பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ.நா. சபையில் அங்கீகாரம் பெற்றபின், சிறப்பாக 1980களிலிருந்து, அவரது தலைமை சீரழியத் தொடங்கியது. அவரைச் செல்லாக்காசாக்கிய காரணங்களில் இஸ்ரேலிய அரசாங்கங்கள் அவரை வஞ்சித்து ஏமாற்ற அவர் இடமளித்ததும் அடங்கும். அமெரிக்கா மீதும் ஐ.நா.சபை மீதும் அவர் வைத்த நம்பிக்கை அதிகம். 2001ல் தன்மீது தனிப்பட்ட முறையிலும் தாக்குதல்கள நடந்த பின்னரே அவருக்குத் தான் ஏமாந்து விட்டதாக ஞானம் பிறந்தது. எனினும் இது காலம் கடந்து பிறந்த ஞானம். இன்றும் இஸ்ரேலை மீறுவதற்குத் தயங்குகிற அரசியல் தான் அவரது அரசியல்.

1970களில் அமிர்தலிங்கம் ஈழத்து முஜிப் என்றும் பின்பு அரபாத் என்றும் த.வி.கூட்டணித் தொண்டரடிப் பொடிகளால் போற்றப்பட்டவர். அமிர்தலிங்கத்தின் ராசியோ அரபாத்தின் ராசியோ முஜிபுர் ரஹ்மானின் ராசியோ தெரியாது, எல்லாமே அற்புதமாகப் பொருந்தி வந்த உருவங்களாகிவிட்டன. வெகுஜன ஆரதவு அலையில் மேலெழுந்து திமிர்த்தனமான போக்கும் மக்கள் விரோத அரசியலும் சரிவும் என்று பார்த்தால் இந்த உருவங்கள் மிகவும் தீர்க்க தரிசனமுடையன, என்றாலும் அமிர்தலிங்கத்தை ஈழத்து அரபாத் என்பது ஒரு கௌரவிப்பு. அரபாத்தை பலஸ்தீன அமிர்தலிங்கம் என்பது அப்படியானதல்லவே!

# போர்ப்பிரகடனமும் இனஒழிப்பு வன்முறையும்

1983யூலை வன்முறையைத் தூண்டி விட்டது யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ த்தினரை பலி கொண்ட கண்ணி வெடி த்தாக்குதல் என்று யாரும் சொன்னால் அதைவிடப் பெரிய அரசியல் வெகுளித் தனம் கிடையாது. 1977முதல் திட்டமிடப் பட்டு வளர்க்கப்பட்டு வந்த ஒரு இன வாத அரசியற் போக்கின் முதிர்ச்சியை 1980ல் மலையகத்தில் நடந்த பரவலாகக் காணப்பட்ட அரச அடக்குமுறைச் செயல்களும் தெளிவாகவே இனங் காட்டி வந்தன. தமிழர் மீதான சந்தேகங் களும், குறிப்பாக படித்த, தொழில் பார்க்கிற சிங்கள நடுத்தர உயர் நடுத்தர வகுப்பினர் நடுவே வளர்ந்து வந்த தமிழர் விரோதம் 1983க்கு முன்பே வலுப் பெற்று வந்தவைதாம். தமிழ்ச் சக ஊழியர் களைக் கொட்டியா, கொட்டிச்சி என்ற விதமாகப், பகுதி கேலியாகவும் பகுதி சந்தேகத் துடனும், குறிப்பிடும் சம்பவங்கள் 1981க்குப் பின் அதிகரித்து வந்தன. இதன் விளைவாக கத்தோலிக்கத் திருச்சபைக்குள் முதல்முறையாக மொழிவாரியான முரண்பாடுகள் ஒரு நெருக்கடியைத் தோற்று வித்தன. சமூகங்கள் நடுவே நல்லுறவுக்கான முயற்சிகளில் கத்தோ லிக்கத் திருச்சபை மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத போதும், அவற்றை மேற்கொண்டு வந்ததற்கான காரணம், மத அடிப்படையில் ஒரு காலத்தில் ஒன்று படுத்தப்படக்கூடிய தமிழர்களையும் சிங்களவர்களையும் இணைத்துக்கொண்டு செல்ல முடியா தளவுக்குச் சிங்களப் பேரினவாத அரசியல் சமூகப் பகையாகி விட்டதைத் திருச்சபையின் மேலிடம் கண்டு கொண்டதுதான்.

சிங்கள-தமிழ் தேசியவாதிகளிடை யே உரையாடலுக்கு ஒரு நடுத்தர வர்க்கம் சார்ந்த புரட்டஸ்தாந்து மதப்பிரி வினரிடையே இவ்வாறான முயற்சிகள் பிரச்சினையின் தீவிரம் பற்றிய போதிய புரிதலின்றியும் வசதிபடைத்த அல்லது சமூக மேம்பாடுபற்றிய எதிர்பார்ப்புடைய நடுத்தர வர்க்கம் கண்ணோட்டத்து டனுமே மேற்கொள்ளப்பட்டன. கிறிஸ்து வத்தால் சாதியத்தை முறியடிக்க இயலாது போனதை விட மோசமாகப் பேரினவாதத்தின் விளைவாக இனப் பகைமையை எதிர்த்து நிற்கவும் இயலா மற் போனதை 1983யூலை வன்முறை யின்போதும் பின்னரும் காண முடிந்தது.

1983வன்முறை அரச அனுசரணை யுடனும் திட்டமிட்ட முறையிலும் நடந்தேறியது மட்டுமின்றி அதை நியாயப்படுத்தும் நோக்குடனேயே முழு அரசாங்கமும் நடந்து கொண்டது. அரச ஊடகங்கள் இவ்வன் முறையை நியாயப்படுத்தும் ஏற்படுத்திய அதிர்ச்சியும் கண்டனமும் அரசாங்கத் தைச் சிறிது சிந்திக்கத் தூண்டினாலும் யூ.என்.பி. ஆட்சி பேரினவாத அரசியலை மறுதலிக்க இயலாது போனதற்குக் காரணம், அது யூ.என்.பி. விதைத்த இனவாத அரசியலினதும் ஒடுக்குமுறைக் கொள்கையினதும் பெரும்போக அறுவடையே என்பது தான். இனஒழிப்பு அரசியலாகவும் போராகவும் இந்த வன்முறை வளர்ந்தது என்றால் அதற்கான அத்திவாரம் எப்போதோ யூஎன்.பி. அரசால் இடப்பட்டுவிட்டது என்பதைப் பலரும் உணர்ந் திருந்தனர். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை உணர்ந் திருந்ததா? இல்லை யென்றே சொல்ல வேண்டியுள்ளது?

**அண்ணன் காட்டிய வழி - 11**

1983 வன்முறையின் உக்கிரம் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது உண்மை. ஆயினும், அதற்கான காரணங்களை ஆராய்வதில் மாக்சிய லெனினியச் சிந்தனை வழிப்பட்டோரின் அணுகுமுறைக்கும் தமிழ்த் தேசியவாத அணுகு முறைக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. அதுவரை ஆதிக்கம் செலுத்தி வந்த தமிழ்த் தேசிய உணர்வு, 1983க்குப் பின்னர் அரசியலினதும் போரினதும் விருத்தியை வழிநடத்துவதில் முக்கியமான பங்களித்தது. ஆயுதமேந்திய போராட்டத் தின் தேவையை மாக்ஸிய-லெனினிய வாதிகளிடமிருந்து, குறிப்பாக சாதிய எதிர்ப்புப் போராட்டத்தினின்று, கற்ற இளைஞர் இயக்கங்கள் மக்கள் போரா ட்டம், வெகுசன அரசியல் போன்ற பாடங்களைக் கற்கத் தவறியதன் விளைவுகளை இன்று வரையிலான போராட்ட வரலாறு பதிவு செய்துள்ளது.

த.வி.கூட்டணித் தலைமையின் இயலாமையின் முழுமையான வெளிப் பாடு, 1983யூலை வன் முறைக்குப் பிறகு இலங்கையி லிருந்து தப்பிச்சென்று இந்தியாவிலே கூடாரமடித்து முக்கிய தலைவர்களது நடத்தை எனலாம். தம்மால் தமது 'இலட்சியங்களை' நிறைவேற்றவோ அவற்றை நோக்கித் தம் ஆதரவாளர்களையோ மக்களை யோ வழிநடத்த இயலாது என்ற நிலையில் த.வி.கூட்டணி தலைமை செய்திருக்கக் கூடிய நல்ல காரியம் தமது கட்சியைக் கலைத்துவிட்டு அரசியலிலிருந்து ஒதுங்குகிற தாயிருந்திருக்கும். ஆனால் த.வி.கூ. என்ற பேர்ப்பலகைக்கு ஒரு பெறுமதி இருத்தது. குறிப்பாக, அதனை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்துடன் பேரம் பேசி தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்கிற சாட்டில் இந்தியாவின் பிராந்திய நலன்களை விரிவுசெய்யத் திட்டமிட்ட இந்திய ஆளும் வர்க்கமும் அரசும் அப்பெறுமதியை நன்கு அறிந்திருந்தது. எனவே தான் 1983 வன்முறைக்குப் பின்பு பார்த்தசாரதியை அனுப்பி இந்திரா காந்தி ஜே.ஆர்.ஜயவர்த்தன மீது அழுத்தம் செலுத்த முயன்ற போது முதல் திம்பு பேச்சுவார்த்தைகள் வரை த.வி.கூட்டணிக்கு அதன் தகுதிக்கு மீறிய முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகளையும் இந்திய அரசாங்கத்தின் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதையும், காரணமாக முன்வைத்து அமிர்தலிங்கம், சம்பந்தன், சிவசிதம்பரம் ஆகிய பெரிய தலைவர்கள் எல்லாரும் இந்திய அரசின் சிறப்பு அதிதிகளாக இருந்து வந்தனர். இந்திய அரசு தனது பல்வேறு கரங்கள் மூலம் ஈழத்தமிழர் சார்பாகப் பேசவோ போராடவோ முன்னின்ற ஒவ்வொரு இயக்கத்தி னுள்ளும் தனது செல்வாக்கை நிலைநிறுத்த முற்பட்டது. இந்தியாவின் தயவில் வளர்ச்சி கண்ட இயக்கமும் இந்திய ஆட்சியாளர்கள் நேரடியாகவோ றோ போன்ற முகவர்கள் மூலமோ தமிழக அரசின் மூலமோ பலவேறு நெருக்கு வாரங் களைச் சந்தித்தன.



தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் அது முற்று முழுதாகவே இந்திய அரசின் முகவராக வே அது தன்னை அமைத்துக்கொண்டது. ஆனால் 1970களில் தொடங்கி இந்திய ஆளும் வர்க்கத் துடன் வளர்க்கப் பட்ட உறவுகள் மூலம் தன்னையே ஈழத் தமிழ் மக்களுக்கான ஒரே இந்திய முகவரா க்கிக் கொள்ளும் முயற்சிக்கு 1980 அளவிலேயே ஆப்பு வைக்கப்பட்டு விட்டது. இந்திய ஆட்சியாளர்களைப் பொறுத்த வரை, தன்னாற் கட்டுப்படுத்தக் கூடிய முகவர்களாக உள்ள வரை, எத்தனை முகவர்களையும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாகவே இருந்தனர்.

விடுதலைப் புலிகளும் மாக்ஸிச லெனினிய முனைப்புள்ள சிறு இயக்கங்கள் சிலவும் இந்திய அதிகார வர்க்கத்தால் கட்டுப்படுத்த இயலாத னவாக இருந்தன. அவற்றைக் கட்டுப் படுத்துவதற்கு இந்திய ஆட்சியாளர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். ஒரு போட்டி இயக்கத்தைக் கொண்டு விடுதலைப்புலிகளை மடக்கும் முயற்சி தோல்வி கண்ட பின்பு, இலங்கையின் தமிழ் விடுதலைப் போரா ட்டத்தின் முனைப்பைக் கட்டுப் படுத்துவது இந்திய ஆட்சியாளர்களுக்குக் கடினமாயிற்று. இச் சூழ்நிலையிலேயே இந்தியக் குறுக்கீட்டை நியாயப்படுத்தக் கூடிய முறையில் சிங்களப் பேரினவாத யூஎன்.பி. அரசு தனது 'பயங்கரவாத விரோத' நடவடிக்கைகளில் மும் முரமானது. யாழ் குடாநாட்டு மக்களைப் பட்டினிபோட்டுப் பணியவைக்கும் முயற்சி பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியால் மேற்கொள்ளப் பட்டது. இந்த நிலைமைகளின் கீழ் 'மனிதாபிமான' முறையில் இந்தியா உணவை அனுப்ப முயன்றதும் அதைக் கடற்படையினர் தடுத்த பின் வான் வழி போடப்பட்டது அதன் பின்பு துரிதமாக உருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையும் இலங்கையின் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளை இந்திய ஆட்சியாளர்கள் எவ்வளவு தூரம் தமது எடுபிடிகளாகக் கருதினார்கள் என்பதையே காட்டியது.

எந்த முரண்பாட்டின் விளைவாக இலங்கையில் ஒரு போராட்டச் சூழல் உருவானதோ, அதில் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக யார் போராடினார் களோ அவர்களுடைய கருத்தை நேரடியாகக் கணிப்பிற் கொள்ளாமலே ஒடுக்குமுறையாளனான பேரினவாத அரசும் அயலிலுள்ள ஒரு பெரு வல்லரசும் ஒரு தீர்வுப் பொதியைப் பற்றி உடன்பாடு காண்பது ஒடுக்கப்பட்ட மக்களது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஜே-வி-பி- ஒரு இடதுசாரிக் கட்சி அல்ல!

ஜே.வி.பி. தான் ஒரு இடதுசாரிக் கட்சி இல்லை என்பதையும் சிகப்புப் போர்வை போர்த்திய இனவாதக் கட்சி என்பதையும் கடந்த தேர்தலின் மூலம் முழுமைப்படுத்திவிட்டது. 1994ம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் முற்போக்கு முன்னணி என்ற பெயரில் ஒரு ஆசனத்தை மட்டும் பெற்ற ஜே.வி.பி. 2000 ஆண்டில் இடம் பெற்ற தேர்தலில் பத்து ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இப்போது நடந்து முடிந்த தேர்தலில் பதினாறு ஆசனங்களைப் பெற்று மூன்றாவது சக்தி என மார்தட்டி நிற்கிறது.

தொகுதிவாரியான வெற்றி இல்லாத விடத்தும் மாவட்ட ரீதியில் பெற்றமொத்த வாக்குகளின் அடிப்படையிலேயே அதற்கு எட்டு லட்சம் வாக்குகளும் பதினாறு பாராளுமன்ற ஆசனங்களும் கிடைத்திருக்கிறது. இத்தகைய வெற்றி ஜே.வி.பி. ஒரு இடதுசாரிக் கட்சி என்பதால் கிடைத்ததாகக் கூறிக் கொள்ள முடியுமா? என்பதே பிரதான வினாவாகும்.

உண்மையில் ஜே.வி.பி. பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பாதையில் முக்கியமாக பேரினவாதக் கருத்துக்களை முன்வைத்தே தமது தேர்தலில் பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்துள்ளது. அது ஒரு இடதுசாரிக் கட்சிக்குரிய நிலையில் நின்று கொள்கை ரீதியாக நாட்டின் அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கு உரிய கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்பது தெளிவானதாகும்.

நாட்டின் பிரச்சினைகளை மேலோட்டமான வழிகளில் அணுகி ஒரு வகைக் கவர்ச்சிகரமான பிரச்சாரப் பேச்சுக்களை முன்னெடுத்து மூன்றாவது சக்தி என்னும் தோற்றத்தை கொடுத்துக் கொண்டது. அதற்காக இரண்டு பேரினவாதக் கட்சிகள் செலவு செய்த அளவுக்கு பிரச்சாரச் செலவு செய்தும் கொண்டது. அது மட்டுமன்றி ஜனாதிபதியுடன் இரகசிய இணக்கப்பாட்டிற்கு வந்து லண்டனில் இருந்து அதன் தலைவரான சோமவன்ஸ அமரசிங்காவையும் தேர்தல் பிரசாரத்திற்காக வரவழைத்தும் கொண்டது ஜே.வி.பி.

அவர்களது தேர்தல் பிரசாரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்போ, உலகமயமாதல் விரோதமோ, தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான கொள்கையோ பிரதானப்படுத்தப்படவில்லை. அவர்களது இலக்கு எப்படியும் இருபத்தைந்து ஆசனங்களைப் பெற்றுக் கொண்டால் அதனை வைத்து பொதுசன முன்னணியுடன் பேரம்பேசி ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ளலாம் என்பதேயாகும்.

**பேரினவாதக் கட்சிகளில் தமிழ் முஸ்லீம் பிரதிநிகள் உள்ளனர்**

எனவே அந்த இலக்கை அடைய அவர்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு இடதுசாரி வேலைத் திட்டம் அல்ல. முழுக்க முழுக்க இனவாத விஷக்கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதாகவே இருந்தது. தேர்தல் பிரச்சார மேடைகள் அனைத்திலும் இனப்பிரச்சினையை வைத்து தமது வாக்கு வங்கியை விஸ்தரிப்பதற்கான பேச்சுக்களையே பேசினர்.

புலிகள் வரப்போகிறார்கள், நாடு பிரியப் போகின்றது என்றும் பௌத்தமதமும் சிங்கள மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே பேசினார்கள். தாங்கள் யுத்தத்திற்கு ஐம்பதினாயிரம் பேர்களைத் தரத் தயார் என்றும் சூழுரைத்தனர். எவ்வளவு மோசமாகவும் கேவலமாகவும் இனவாதம் பேசமுடியுமோ அந்தளவிற்கு உச்சகட்டமாகப் பேசிக்கொண்டனர். அதனாலேயே தேர்தலுக்குப் பின் சிஹல உறுமய வெளியிட்ட அறிக்கையில் தமது வாக்கு வங்கியை ஜே.வி.பி. கைப்பற்றிக் கொண்டது எனக்குறிப்பிட்டு இருந்தது அதன் அர்த்தம் சிஹல உறுமயவின் பேரினவாதப் பிரசாரத்தையும் விஞ்சி ஜே.வி.பி நடந்து கொண்டது என்பதாகும்.

தேசிய இனப்பிரச்சினை காரணமான யுத்தம் உச்ச நிலையில் இருப்பதை ஜே.வி.பி பிரவினைக்கான புலிகளின் யுத்தம் என்றே காண்கின்றது. பேரினவாத ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறை யுத்தத்தை இனவாதிகள் நடாத்தும் யுத்தம் எனக்கூறி ஒடுக்குமுறையையும் அதற்கு எதிரான போராட்டத்தையும் சமப்படுத்துகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்றும் அப்படி ஏதாவது பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு இருந்தால் அவை சோஷலிசத்தின் கீழ் தீர்த்துவைக்கப்படும் எனக் கூறுகின்றது.

இப்போது தேர்தல் முடிவடைந்த பின்பும் யுத்த நிறுத்தம் வேண்டாம், பேச்சுவார்த்தை வேண்டாம், நாட்டைப் புலிகளிடம் பிரித்துக் கொடுக்காதே என்ற முழக்கங்களையே முன்வைத்து வருகின்றது ஜே.வி.பி. இவற்றின் மத்தியில் ஒரு தமிழரை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நுழைத்தும் கொண்டுள்ளது. தங்களிடம் இனவாதம் துளியளவும் கிடையாது என்பதற்கு சாட்சியம் கூற ஒரு தமிழர் ஒரு முஸ்லீம் பெண்மணி பாராளுமன்றத்தில் இருப்பதாகக் கூறிக் கொள்கிறது.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணியில் பல தமிழ் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அக்கட்சிகளை பேரின வாதக் கட்சிகள் இல்லை எனக் கூறமுடியுமா?

ஜே.வி.பி. தனது கொள்கையாலும் நடைமுறையாலும் தான் சிகப்புப் போர்வை போர்த்திய இனவாதக் கட்சிதான் என்பதை மிகத் தெளிவாக நிரூபித்துக் கொண் டுள்ளது. இதற்கு மேலும் அதனை ஒரு இடதுசாரிக் கட்சி தான் எனக் கூறி சிகப்பு அடையாளத்தை எதிர்பார்ப்பது அறியாமை கொண்ட அரசியல் வறுமைத்தனமேயாகும்.

*அசோகன்*

# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முன்பு சிங்கப்பூர் இன்று ஹொங்கொங்

1977ம் ஆண்டு இலங்கையை இன்னொரு சிங்கப்பூராக்கப் போவதாக ஜே.ஆர். ஜயவர்த்தன சூளுரைத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் இறைமையையும் அமெரிக்க எசமானர்களுக்கு தாரைவார்க்கத் தொடங்கினார். போர் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்பி நாட்டின் பொருளாதாரத்தை உலகமயமாதலுக் இரையாக்கிய யூஎன்.பி. தொடங்கி வைத்த சீரழிவிலிருந்து நாடு இன்னமும் மீளவில்லை.

மறுபடியும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் 'தலைவர்கள்' உதவியுடன் அதிகாரத்தைப் பிடித்திருக்கிற யூஎன்.பியின் புதிய தலைமை இந்த நாட்டை அமெரிக்காவின் புதிய அடியாளாகிவிட்ட இந்திய எசமானர்கட்கு அடமானம் வைக்க ஆயத்தமாகி விட்டது. இதற்கு யூஎன்.பி. மட்டுமன்றி பொதுசன முன்னணியும் ஜே.வி.பியும் சிஹல உறுமயவும் கூட உடந்தையாகவே இருந்து வந்துள்ளன. என்றாலும் யூஎன்.பி. அணியில் உலக விவகார, பொருளியல், அரசியல் ஆய்வு நிபுணராக ஹோராஹா நிறுவனத்தினரால் கட்டியெழுப்பப்பட்டுள்ள மிலிந்த மொறகொடவின் பிரகடனம் எவரையும் அதிர வைக்கும்.

இலங்கையைத் தென்னாசியாவின் ஹொங்கொங் ஆக்கப் போகிறார்களாம். இவர்களுக்கு ஹொங்கொங்கின் பளபளப்பும் வானளாவிய கட்டடங்களும் தெரிகிற அளவிற்கு சிறு பகுதியேனும் ஹொங்கொங்கின் வரலாறு தெரியாது. ஹொங்கொங் சீனாவின் ஒரு பகுதி. ஒரு நூற்றாண்டுக்குச் சிறிது முன்னம் பிரித்தானிய கொலனித்துவம் கைப்பற்றித் தனக்குக் கீழ் வைத்திருந்த ஒரு சிறு பிரதேசம். அது மூன்று ஆண்டுச முன்னரே சீனாவிடம் மீளக் கையளிக்கப்பட்டது. சமூக பொருளாதார முறைகளில் உள்ள வேறுபாடு காரணமாக ஹொங்கொங்கிற்குச் சீனாவில் உள்ளது போலல்லாத அரசியல் பொருளாதார முறைகளைத் தொடர்ந்து பேணச் சீனா உடன்பட்டதேயொழிய, சீனாவின் ஒரு பகுதியே ஹொங்கொங் என்பது தான் இன்றைய உண்மை நிலை.

இப்படியிருக்க, இலங்கையை தென்னாசியாவின் ஹொங்கொங் ஆக்குவது என்பதன் கருத்து என்ன? இலங்கை சர்வதேச அரசியலில் எது விதமான ஆளுமையும் அற்றுத் தென்னாசியாவின் மெய்யாக இந்தியாவின், வணிக நலன் பேணும் ஒரு சிறு நிலப்பரப்பாக மாற்றப்படும் என்பதல்லவா? சேது சமுத்திரத்தை ஆழப்படுத்துகிற கதை போய்ச் சிங்களத் தீவினிற்குப் பாலம் போடுகிற கதை இப்போது உரக்கப்பேசப்படுகிறது. இது பற்றிய புதிய பூமி இவ்வருட முதலில் எச்சரித்திருந்தது பலருக்கு நினைவிருக்கலாம். இந்தப் பாலம் வரமுன்னரே இந்திய வணிகர்களது ஆதிக்கம் பல துறைகளிலும் ஊடுருவி விட்டது. பாலம் வந்த பிறகு இலங்கை இந்தியாவின் ஹொங்கொங் ஆகுமா அல்லது அதற்குமப்பால் சென்று இந்தோனீசியாவிற்கு கிழக்குத் திமோர் ஒரு காலத்தில் இருந்த நிலைக்கோ மொறாக்கோவுக்கு மேற்கு சகாரா இருக்கிற நிலைக்கோ போகுமா?

தமிழரையும் சிங்களவரையும் ஒற்றுமைப்படுத்துவதில் என்ன விதமான தயக்கங்கள் இருந்தாலும் தமிழ்த் தலைவர்களும் சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் இந்த நாட்டை இந்தியாவிற்கு விற்பதில் மட்டும் பூரணமான உடன்பாடு காண்கிறார்கள். இது போதாதா இந்த ஏழை மண்ணின் ஏழ்மைப்பட்ட சனங்களுக்கு!

**ஒரு வேட்பாளரின் பாராட்டு!**

*பட்டறிவுடன்,*
*பகுத்தாய்ந்து பணியுரிந்தோரே.*
*மாயையில்,*
*மாண்டுபோகாத மாணிக்கங்களே.*
*விலைக்கு,*
*விலை போகாத விவேகிகளே.*
*தூரநோக்கோடு*
*தெளிந்த சிந்தையுடன்*
*வாக்களித்தீர்கள்.*

உங்கள் அனைவரையும்
மெச்சுகிறேன்,
உளமார பாராட்டுகிறேன்.

*சங்கானை* மு. தியாகராசா
ஜனநாயக இடதுசாரி முன்னணி
புதிய ஜனநாயக கட்சி
(வெல்லாத வேட்பாளர்)

# யாழ் குடாநாட்டுத் தேர்தல் களத்தில்

## தமிழர் கூட்டமைப்பு யாருக்காக?

- கடந்த பொதுத் தேர்தலின் போது உருவாக்கப்பட்ட நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வெளிநாட்டுத் தலைவர்கள் தூதுவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே அமைக்கப்பட்டது என்று தமிழர் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் தெரிவித்தார். அவ்வாறெனில் அந்த வெளிநாடுகள் எவை? புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் எனத்தடை விதித்து வைத்துள்ள அமெரிக்காவா? இந்தியாவா? பிரித்தானியாவா? கனடாவா? அல்லது சி.ஐ.ஏ.யா? றோ வா? அப்படியானால் இன்றைய ஆப்கானிஸ்தானில் இயங்கும் வடக்கு கூட்டணி போன்று எதிர்காலத்தில் தமிழர் கூட்டமைப்பு மாறுமா? இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரச்சார மேடைகளில் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு கூட்டமைப்பு இதுவரை பதில் கூறவே இல்லை.
- சந்திரிகா அரசாங்கத்தைத் தோற்கடிப்பதும் விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்பதை அங்கீகரிக்க வைக்கவே தமிழர் கூட்டமைப்பின் பணியாகும் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி கூறினார். அதேவேளை கூட்டமைப்பை உருவாக்கிய கொழும்பு வாழ் பெரும் தமிழ்ப் புள்ளிகள் யூஎன்.பியை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காகவே இவ் ஐக்கியத்தை ஏற்படுத்தியதாகக் கூறி கொண்டனர்.
- புலிகள் இயக்கத்தை ஏகப்பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்வதில் கூட்டமைப்புக்குள் கடுமையான கருத்து முரண்பாடு ஏற்பட்டு கூட்டணியின் தலைவர்கள் முகம் சுழித்துக்கொண்டனராம். என்றாலும் தேர்தல் வெற்றியை எண்ணி மௌனம் காத்துக்கொண்டனராம்.
- தமிழர் கூட்டமைப்பின் வெற்றிக்காக அறிக்கை வெளியிட்டு ஒடியாடி வேலை செய்து இறுதியில் கள்ள வாக்குகள் போட்டவர்கள் வரை எத்தகைய அரசியல் ஆதிக்க வர்க்க சக்திகளுக்காக பணிபுரிந்தனர் என்பதைப் புரிந்து கொண்டால் கூட்டமைப்பு யாருக்கானது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

## யூ.என்.பி.யும். வடக்கு கிழக்கும்

- கடந்த பொதுத் தேர்தலில் யூஎன்.பி. சார்பாக கிழக்கில் வேட்பாளர்கள் நிற்பதற்கு 'அனுமதிப்பதில்லை'. ஆனால் வடக்கில் அமோகப் பிரசாரத்துடன் 'அனுமதிக்கப்பட்டது'. ஏன் என்பது தான் தமிழ் மக்களுக்கு விளங்கவில்லை.
- யூஎன்.பி. யின் குடாநாட்டுப் பட்டியலில் முதலில் இருந்து முடிவுவரை இருந்தவர்கள் வர்த்தகப் புள்ளிகள், சண்டியர் திலகங்கள், மற்றும் புளிச்சல் தனப்பேர்வழிகளாவர். இவர்கள் எந்த முகங்களோடு ஆனைச் சின்னத்திலும் பச்சை வர்ணத்திலும் வாக்குக் கேட்கிறார்களோ தெரியவில்லை என்று புதிய ஜனநாயகக் கட்சி மேடைகளில் கேட்கப்பட்டது. மேலும் 1981ல் எரிக்கப்பட்ட யாழ் நூலகத்தின் நூல்களின் சாம்பலை நெற்றியில் பூசிக் கொண்டும் 1983யூலையில் வெலிக்கடையிலும் வெளியிலும் கொல்லப்பட்ட தமிழர்களின் எலும்புகளை கால்களின் கீழ் வைத்துக்கொண்டும் தான் யூஎன்.பியினர் வாக்குக் கேட்கிறார்கள் என அறைந்து பேசப்பட்டது.
- "ஐக்கிய தேசியக் கட்சியை பேரினவாதக் கட்சி எனச் சிலர் பிரசாரம் செய்கின்றனர். உண்மை அப்படியல்ல. அது ஒரு தேசியக் கட்சி அதில் சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் மலையகத்தவர் என அனைவரும் இருக்கின்றனர். அப்படியானால் அது எப்படி பேரினவாதக் கட்சி ஆகும்." இப்படிப் பேசியவர் யார் தெரியுமா? யூஎன்.பி. யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன்.
- தந்தை செல்வாவிற்கும் தேசியத் தலைவர் வே. பிராகரனுக்கும் மேடைகளில் முதல் வணக்கம் தெரிவித்துக்கொண்ட மகேஸ்வரன் தேர்தல் சுவரொட்டிகளில் ரணில் விக்கிரமசிங்காவுடன் போஸ்கொடுத்து நிற்பதை விளம்பரப்படுத்திக் கொண்டார். திரு. திருமதி ரணிலின் படங்கள் பதித்த கலண்டர்களை வீதிவீதியாக விநியோகிக்கப்பட்டது. பச்சைக்கட்சியின் அகோரத்தை மறைத்து பசுமை காட்டுவதில் தேர்தல் நல்ல தருணமாகிக்கொண்டது.
- யாழ்ப்பாணத்திலிருந்து உதயமாகி கருத்தாதிக்கம் செலுத்தி நிற்கும் பத்திரிகை ஒன்று 'ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் வெற்றி பெறப்படாதபாடு பட்டுக்கொண்டது. இவ்வளவு செய்தும் ஒரு ஆசனம் மட்டும் தான் பெற்றுக் கொண்டதில் அப்பத்திரிகைக்கு பெரும் மனவருத்தமாம்.
- ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தால் ஸ்ரான்லி வீதியின் சிறிதர் தியேட்டருக்குப் பதிலாக பலாலி வீதியின் கந்தர் மட இல்லம் வந்துகொள்ளும். டக்ளசுக்குப் பதிலாக மகேஸ்வரன் வந்து கொள்வார். இது தமிழ் மக்களுக்கு தேவைதானா என புதிய ஜனநாயகக் கட்சி மேடையில் கேட்கப்பட்டது.

## தேர்தலும் துரோகிகளும்

- தமிழர் அரசியலில் தேர்தல் காலத்தில் 'துரோகிகள்' கண்டு பிடிக்கப்பட்டு தேர்தலில் வெற்றி பெறுவது வழமையாகிவிட்டது.
- சுதந்திரத்துக்கு முதல் காங்கேசன் துறையில் யூஎன்.பி.யில் சு. நடேசபிள்ளையும் யாழ்ப்பாணத்தில் மகாதேவாவும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றனர்.
- இவர்களைத் 'துரோகிகள்' எனக்காட்டித் 'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என சந்தனப்பொட்டும் பட்டு வேட்டியும் நாஷனலும், வெண்டயச் சங்கிலியும் அரையில் சால்வையுமாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ். பிரதிநிதியானார்.
- பின்பு செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் ஜீ.ஜீ. மந்திரிப் பதவியை யூஎன்.பியில் பெற்றாரென்று 'துரோகி'யென கண்டுபிடித்து அவரைத் தோற்கடித்தனர்.
- அதன்பின் திருச்செல்வம் மந்திரியானபோது தமிழரசினர் துரோகியாக அதனைக் கண்டுகொள்ளவில்லை.
- யாழ்ப்பாணத்தில் துரையப்பாவை தோற்கடிக்க அவரை 'துரோகி' என அண்ணன் அமிர்தலிங்கம் குறிகாட்ட தம்பிமார் கொன்றொழித்தனர். மற்றும் சிலர் துரோகிகளாக்கப்பட்டு 1977ல் எல்லா முகமும் ஒரே முகமாக கூட்டணி கடைசிச் சந்தர்ப்பமாக தேர்தலில் 18 முகங்களுடன் வென்றது! தமிழீழத்தை வென்று வருவோம் என்றனர்.
- ஆனால் அமிர் 'துரோகி'யான துயரத்தை என்னவென்பது. வரலாறு எவரையும் தவறவிடாது என்பதுதான் உண்மையா?
- 2001இல் புதிய துரோகியாக டக்ளஸ் தேவானந்தா அகப்பட்டுக் கொண்டார். கூட்டு உருவானது, சுடச்சொன்னவர்களை, சுட்டவர்களை, சூடு வாங்கியவர்களை சூடுபட்டவர்களைக் கொண்டு கூட்டு உருவானது. பதினைந்து முகமும் ஒரு முகமாகி 'அரோகரா'வும் 'ஆமென்' னும் வானைப்பிளக்க ஆயர்களின் அரவணைப்பில் துரோகிகள் துடைத்தழிக்கப்பட்டு தூண்களாக நிமிர்ந்து தமிழ் மீண்டும் மீண்டும் கடைசிச் சந்தர்ப்பமாக வென்றது வந்தது. "அடுத்த தடவை பாராளுமன்றம் வருபவன் தன்மானத் தமிழனாக் இருக்கமாட்டான்" என்று சம்பந்தரும் பாடிப் பரவினார் பல்லோரும் பரவசமாக!!
- துரோகி காண் படலம் இடைவேளைக்காகத் தனது திரையை மூடிக் கொள்கிறது. அடுத்த தேர்தலில் எவர்தான் துரோகியாவதோ தெரியவில்லை.

*தொகுப்பு : சோமஸ்கந்த*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# கேள்விகளுக்கு பூமிதாசன் பதிலளிக்கிறார்

**கேள்வி :** புதிய ஜனநாயக கட்சியினரையும் ஜனநாயக இடதுசாரி முன்னணியினர் உட்பட்ட இடதுசாரிகளையும் தமிழ் சிங்கள மக்கள் கடந்த தேர்தலில் நிராகரித்துள் ளனர். நீங்கள் இதன் பின்னரும் ஏன் இந்த அரசியலில் ஈடுபடுகிறீர்கள்?

**பதில் :** நாங்கள் இந்தப் பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுவது தேர்தலில் வென்று அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கவும் இல்லை. அல்லது எவருடனும் அதிகாரத்தைப் பங்கு போடவும் இல்லை. அல்லது எந்த ஆட்சிக்கும் முட்டுக்கொடுக்கவும் இல்லை. தேர்தலில் நிற்பதன் மூலம நமது அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் கொண்டுபோக முடியும். அரசியல் விடயங்கள் தீவிரமாக விவாதிக்கப்படும் ஒரு சூழ்நிலையில் நாங்கள் விலகி நின்றால் மக்களுடனான தொடர்பு களை வலுப்படுத்த முடியாது. வென்றால் பாராளுமன்றத்தை நாங்கள் பாவிக்கிற விதமும் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் பாவிக்கிற விதமும் முற்றிலும் எதிரெதிரானவை.

பாராளுமன்றத்தின் மூலம் இந்த நாட்டினது பிரச்சினைகளையோ இந்த நாட்டின் எந்தத் தேசிய இனத்தினதும் பிரச்சினையையோ எந்தச் சமூகப் பிரிவினது பிரச்சி னையையோ தீர்க்க முடியாது என்பது நமது நிலைப்பாடு. அதே வேளை, பாராளுமன்றத்தின் மூலம் செய்யக்கூடிய சில காரியங்கள் உள்ளன. மக்களை ஒடுக்குகிற ஆட்சியாளர்களும் கொள்ளையடிக் கிற அந்நியர்களும் அவர்களது உள்ளூர் கையாட்களும் பற்றி அம்பலப்படுத்தி மக்களுக்கு அறியத்தர அது ஒரு களமாகிறது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி பொதுசன மட்டத்தில் கவனத்தைக் கொண்டுவர அது ஒரு களமாகிறது. அதேவேளை. பாராளுமன்றத்தில் இருப்பதோ அல்லது வெளியில் இருப்பதோ நமது அரசியலின் தன்மையையோ நடைமுறையையோ தீர்மானிக்காது. பாராளுமன்றம் எமது அரசியல் வேலைகட்கான ஒரு களம் மட்டுமே. அதைவிட முக்கியமான களங்களும் உள்ளன. மக்கள் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை யோடு உள்ள அளவுக்கு, நாமும் அதில் பங்கு பற்றுவதன் மூலம் நமது அரசியல் வேலைகளை விரிவுபடுத்த நமது சக்திக்கு ஏற்றபடி அதில் ஈடுபடுவோம்.

மக்கள் அரைநூற்றாண்டுக்கால மாகத் தீவிர குறுகிய அரசியலுக்குப் பழக்கப் பட்டு விட்டனர். தமிழரைக் காட்டிச் சிங்களவரை மிரட்டி ஏமாற்றுவதும், சிங்கள வரைக் காட்டித் தமிழரை மிரட்டி ஏமாற்று வதுமாக வளர்ந்த அரசியல் இன்று போராகத் தொடர்கிறது. போரை மைய மாக வைத்து நடந்து வந்த அரசியலில் உண்மையான இடதுசாரிகள் பலவீன மடைந்தது உண்மை. போலி இடது சாரிகள் கூட ஒரு இனைவாதக் கட்சியையோ இன்னொன்றையோ வைத்தே தேர்தலில் வாக்குகளைப் பெறுகிறார்கள். ஜனதா விமுக்தி பெரமுன கூட இனவாதமே பேசுகிறது. எனவே நமது தோல்வி களை இப் பின்னணியிலேயே நோக்க வேண்டும்.

இந்த இனவாத அரசியல் மூலம் நாட்டின் எந்தப் பிரச்சினையும் தீராது என்பதை மக்கள் காணும் நாள் அதிக தொலைவில் இல்லை. அதன் பின்னரே மக்கள் மாற்று வழிகளைத் தேடுவர். அதுவரை நாம் வெறும் தேர்தல் முடிவுகளை வைத்துச் சும்மா இருக்கவோ அரசியலிலிருந்து விடுப்பில் போகவோ இயலுமா?

சென்ற தேர்தலில் கூட, வடக்கில் நாலுகட்சிக் கூட்டணியும் ஈ.பி.டி.பி. யும் நம்முடன் விவாதத்தில் இறங்கத்தயங்கின. இது ஏன்? எதிர்வரும் காலம் இதற்கான பதிலைத் தரும். மக்கள் சரியான நிலைப்பாட்டுக்கு வரக் காலம் எடுக்கும். ஆனால் அவர்கள் அங்கு வந்த பின்பு யாராலும் அவர்களை ஏய்க்க முடியாது. இடைக்காலத்தில் நமது பணி சிரமமானது. அதற்காக நாம் ஒதுங்கி நிற்க முடியுமா? நாம் முன்னெடுத்துச் செல்வது மக்களுக் குரிய நேர்மையான அரசியலாகும்.

**கேள்வி :** தமிழ் மக்களின் இனப் பிரச்சினையின் தீர்வுக்கான வழி வகைகள் எவை?

பதில் : தமிழ் மக்களின் இனப்பிரச்சினை சரியாக அடையாளங் காணப் பட்டால் ஒழியத் தீர்வுக்கான வழி வகைகளை அறிய முடியாது. 1983க்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்களும் போக்குகளும் அதன் விளைவான பெருமளவிலான புலப் பெயர்வும் இன்று பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி உள்ளன. இன்றைய பிரச்சினையை ஒற்றையா இரட்டையா என்கிற விதமாகயாரும் சரியாக முன்வைக்க முடியுமா? ஆனால் இது தான் இன்று தமிழ்த் தலைவர்கள் எனப்படுவாராலும் சிங்களப் பேரின வாதிகளாலும் முன்வைக்கப்படு கின்றன. இன்றைய பிரச்சினையின் மையும் விடுதலைப் புலிகளா? விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளா என்பதா? தமிழீழமா, ஐக்கிய இலங்கை யா என்பதா? அல்லது சிங்களப் பேரினவாத நோக்கில், நாட்டின் பிரச்சி னைகள் பயங்கரவாதமும் பிரவினை வாதமும் மட்டுமா? தமிழ் மக்கள் தங்களது விடுதலைக்கான போராட்டத் தில் வலிந்து இறங்கவில்லை. பேரின வாத அரசியலும் ஒடுக்கு முறையும் அவர்களை அதில் இறக்கின. அதை விடத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பிரச்சினைகளை என்றுமே முழுமை யாக நோக்காமல் தமிழ் மக்களை தனிமைப்படுத்துகிற முனைப்பிலும் ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவு படுத்துகிற முறை யிலுமே செயல்பட்டு வந்துள்ளனர்.

**கேள்வி :** மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை, முழுமையாக நம்பி வாக்களித்துள்ளார்கள். அவர்களது நம்பிக்கைகள் பயன் அளிக்குமா?

பதில் : மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களிக்கவில்லை. ஆறுமுகம் சந்திரசேகரன் போன்ற தம் நலன் காக்கும் தலைவர்களால் நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள். மலையக மக்கள் எதிர் நோக்கும் வர்க்க-இன அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்வித கோரிக்கையும் முன்வைக்காது ஆறுமுகம், சந்திரசேகரன் போன்றோர் அமோக வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் அவர்களது ஏமாற்றும் திறன் எந்தளவுக்கு இருக்கிறது என்பதே முக்கியமானதாகும். மலையக மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறாதவரை ஏமாற்றும் தலைவர்களும் ஏமாறும் மக்களும் இருக்கவே செய்வார்கள்.

**கேள்வி :** உங்கள் கட்சி மாக்சிச லெனினிச அடிப்படையில் வழி நடந்து வரும் கட்சி எனக் கூறுகின்றீர்கள். அப்படியாயின் ஏன் நீங்கள் இடதுசாரி ஐக்கியத்தை ஏற்படுத்தாது செயல்படுகிறீர்கள்?

பதில் : இடதுசாரி ஐக்கியம் முக்கிய மானது என்பதில் எமக்கு எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை. ஆனால் ஐக்கியம் எதற்காக என்பதே நமக்குப் பிரச்சனையாகும். எமது கட்சியினதும் வேறும் சில இடதுசாரிக் கட்சிகளினதும் முன் முயற்சியால் 1997ல் ஆறு இடதுசாரி அமைப்புகளின் ஐக்கியத் துடன் ஏற்படுத்தப்பட்டதே புதிய இடதுசாரி முன்னணியாகும். ஆனால் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கும் தனிக்கட்சி தனிநபர் சுயநலத்திற்கும் புதிய இடதுசாரி முன்னணி பலியாக்கப் பட்டது. அதனைமுன்னின்று நடாத்தியவர் விக்கிரமபாகு கருணாரத்தினா. இன்று அந்த அமைப்பின் தனி ஒருவரது கட்சியாவே இருந்து வருகிறது. தேர்தல்களின் வெற்றி நோக்கத்திற்காக மட்டும் இடதுசாரி ஐக்கியம் அவசியம் இல்லை என்பதே நமது நிலைப் பாடாகும். அதற்கு அப்பாலான பரந்த வெகுஜனப் போராட்டங்களுக்கே இன்று இடதுசாரி ஐக்கியம் தேவை. அதற்கான அடித்தள வேலைத்திட்டமும் நேர்மையான அரசியல் நடைமுறைகளும் உருவாகுவதற்குரிய காலம் வரும் என நம்புகின்றோம். அப்போது எமது கட்சியின் பங்களிப்பு நிச்சயம் அங்கே இருக்கும்.

**புதியபூமி கேள்வி பதில் பகுதியை ஆரம்பிக்கின்றது. தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்பும் முன்வைக்கப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில் தருவதோடு இதனை ஆரம்பிக்கின்றோம். உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். பதில் அளிக்கப்படும்.**

**புதிய பூமி**
**கேள்வி பதில்**
**47, 3வது மாடி, கெ.ம.ச.கட்டிடத் தொகுதி, கொழும்பு 11. இலங்கை.**

ஆசிரியர்.

## போர்ப் பிரகடன

7ம் பக்க தொடர்ச்சி

ஆளுமையின் பூரண மறுதலிப்பு என்ற உண்மையைத் த.வி.கூட்டணியோ பெருவாரியான விடுதலை இயக்கங்ளோ உணர இயலாதிருந்தனவா? அல்லது உண்மையாகவே தங்களுக்காகப் பேசும் அதிகாரத்தை மட்டுமல்லாது தமிழ் மக்கள் அனைவருக்குமாகவும் பேசும் அதிகாரத்தையும் அந்த அயல்நாட்டிற்கே வழங்கி விட்டனரா?

விடுதலைப் புலிகளின் தலைவரை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கி உடன்படச் செய்வதன் பின்பு நடைமுறைப் படுத்தப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவானது. இதில் பங்குபற்றுவது பற்றி விடுதலைப் புலிகள் முன்வைத்த கடும் நிபந்தனைகள் தொடங்கி இந்திய 'அமைதி' காக்கும் படையினருட னான போர் வரையிலான நிகழ்வுகளை விளங்கிக் கொள்வதாயின், இலங்கை-இந்திய உடன்படிக்கை இந்தியாவின் உள்நோக்கங்களையும் நலன்களையும் எவ்வளவு தூரம் உள்ளடக்கியிருந்தது என்பதையும் கணிப்பிற் கொள்ள வேண்டும். இவ்விடயம் இலங்கையின் மக்களது. குறிப்பாகத் தமிழ் மக்களது, கவனத்திலிருந்து திட்டமிட்டே விலக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் பங்கு பற்ற மறுத்து ஒதுங்கி நின்ற சூழலில் 1988ல் தேர்தல் நடைபெற்றது. அதிலும் த.வி.கூட்டணி ஓரங்கட்டப் பட்டது. அதையடுத்து நடந்த பாராளு மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெரிய தலைகள் ஒவ்வொன்றுமே உருண்டதில் ஒரு அதிசயமும் இல்லை. ஏனெனில் ஐந்து வருடங்களாக இந்தியாவில் அஞ்ஞாத வாசம் செய்து மீண்ட 'தலைவர்களை' மக்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை.

அமிர்தலிங்கத்தின் தோல்வி ஒன்றும் வெட்கக் கேடானதல்ல. 1970ல் தோற்ற அவர் 1977 வெற்றியுடன் மீளவில்லையா? ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட பிறகு தேசியப் பட்டியல் மூலம் தன்னைப் பாராளுமன்ற உறுப்பினராக்கிக் கொண்டாரே அது மிகவும் வெட்கக்கேடான விடயம்.

தன்னுடைய பதவி மூலம் மக்களுக்கு எதையும் செய்ய முடியாது என்று தெரிந்துகொண்டு அந்தப் பதவியை எப்படியாவது பதவி பிடித்தால் போதும் என்ற நிலைக்கு இறங்கிய ஒருவருக்குத் தலைவர் பதவி ஒரு கேடா! அமிர்தலிங்கத்தை ஒரு தலைவராகத் தமிழ் மக்கள் கருதவில்லை என்றாலும் அமிர்தலிங்கத்திற்குத் அந்த நப்பாசை போகவில்லை. அவரை வைத்துக் காரியம் சாதிக்க நினைத்த இந்தியா ஆட்சியாளர்கட்கும் அது வசதியாகவே இருந்தது.

# அண்ணன் காட்டிய வழி அரசியல் தொடர்கிறது

இந்திய மேலாதிக்கவாதிகளும் ஆளும் வர்க்கமும் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, 1987 உடன்படிக்கை மூலம் தாங்கள் வேண்டியதைப் பெற்று விட்டனர். எனினும் எந்தப் பிரச்சினையை முன்வைத்து அந்த உடன்படிக்கை ஏற்பட்டதோ அதைத் தீர்ப்பதை விட இந்தியாவின் பிராந்திய நலன்களையும் மேலாதிக்க நோக்கங்களையும் காப்பாற்றிக் கொள்வதிலேயே அது முக்கியமாகப் பயன்பட்டது. இந்திய மேலாதிக்கக் கனவை முழுமைப் படுத்த இயலாத விதமாக வட இலங்கையில் விடுதலைப் புலிகளும் தெற்கில் பலவேறு சக்திகளும் முற்றிலும் எதிர்மாறான காரணங்கட்காக இந்தியாவின் குறுக்கீட்டுக்குத் தடையாக நின்றன.

பங்ளாதேஷில் முஜிபுர் ரஹ்மானை முன்வைத்து இந்தியா செயற்பட்டது போல இலங்கையிற் செயற்பட வரதராஜப் பெருமாளோ அமிர்த லிங்கமோ மக்களால் ஏற்கப்பட்ட தலைவர்களாக இருக்கவில்லை. இந்தியாவிடம் எவ்வளவு தூரம் தம்மைப் பறிகொடுத்திருந்தனவோ, அந்தளவுக்கு, ஒவ்வொரு தமிழ்த் தேசியவாத இயக்க மும் கட்சியும் மக்களிடமிருந்து அந்நியப் பட்டிருந்தது. என்றாலும் இந்திய மேலாதிக்கம் இலங்கை அரசியற் சதுரங்கப் பலகையில் நகர்த்துவதற்காக எந்த உதிரியான காயையும் விலைக்கு வாங்க ஆயத்தமாகவே இருந்து. இந்திய மேலாதிக்கத்தின் தயவில் பிழைப்பு நடத்த ஆயத்தமாக இருந்த தமிழ்த் தேசியவாதிகள் ஏற்கனவே விலை போனவர்கள் என்றளவில் அதிகம் பேரம் பேசுவதற்கு அவர்கட்கு இடமிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமக்குப் போட்டியாக வரக்கூடிய எந்த அரசியற் சக்தியையும் சகித்துக் கொள்ளுகிற மனோபாவம் இருந்த தில்லை. அதைவிட, தமிழ் விடுதலை இயக்கங்களாகத் தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட முக்கியமான இயக்கங்கள் எவற்றிலும் அணுகுமுறை யோ அரசியலோ இருந்ததில்லை. மூலமே இயக்கங்களுக் கிடையிலும் இயக்கங்கட்குள்ளும் முரண்பாடுகள் தீர்த்துக்கொள்ளப் பட்டன. இந்திய அரசின் முகவர் களாகச் செயற்பட்ட அமைப்புக்களில் வெளித்தூண்டுதலாற் பல வன்முறைச் சம்பவங்களும் படுகொலைகளும் நடந்துள்ளன என்பதையும் நாம் அறிவோம்.

### அண்ணன் காட்டிய வழி - 12

இன்று அரசியற் பண்பாடு பற்றியும் புரிந்துணர்வு பற்றியும் பேசுகிற நிதானத்தின் குரல்களுக்கு உரியவர் களின் கைகளில் படிந்த இரத்தக் கறைகளைப் பற்றி இன்று இல்லாவிடின் இன்னொரு நாள் தமிழ்ச் சமூகம் அறியாமற் போகாது. எனவே தான் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் முன்னாள் விடுதலை இயக்கங் களையும் மிதிவாதிகள் என்பவர்கள், இந்த மிதவாதத் திரையின் பின்னால் மறைந்துள்ள வன்முறை அரசியலையும் அயலார் நலன் பேணும் முகவர்களையும் மக்கள் அறிய மாட்டார்கள் என்றும் அறிந்திருந்தாலும் மறந்து விட்டார்கள் என்றும் எதிர்பார்க்கக் கூடும். எனவே தான், காந்தி வேடங்களின் முகப் பூச்சைச் சிறிது சுரண்டிப் பார்ப்பது அவசியமாகிறது.

—முற்றும்—

விடுதலைப் புலிகளின் அரசியற் படுகொலைகளை என்னால் என்றுமே ஏற்க இயலாது. அது வெகுஜன அரசியல், மக்கள் போராட்டம், மக்கள் யுத்தம் என்ற கருத்துக்களுக்குப் பகையானது. ஆயினும் அந்த வன்செயல்களைத் தனிமைப்படுத்திப் பார்ப்பதும் தவறானது. அமிர்தலிங்கம் 1983ன் பின் தமிழ் மக்களது அரசியலைப் பொறுத்தவரை செல்லாக் காசாகிப் போனவர். அவரை மறுபடி அரசியலில் இறங்க வைத்தது அவருடைய பதவி மோகம் மட்டுமல்ல. அவரது பலவீனத்தைப் பயன்படுத்தி அவரைத் தமது அரசியல் பகடைக் காயாக்கிக் கொண்ட இந்திய மேலாதிக்கச் சக்திகளும் அதில் ஒரு முக்கிய பங்கு வகித்தன.

அமிர்தலிங்கம் விரும்பியிருந்தாலும் அவரை அரசியலிலிருந்து ஒதுங்க இந்திய மேலாதிக்கம் அனுமதித் திருக்குமோ என்பது சந்தேகம். இந்திய மேலாதிக்கத்தைப் பொறுத்தவரை, அமிர்தலிங்கத்திலும் அவரது த.வி.கூட்டணிச் சகாக்களிலும் முதலீட்டுக்கு ஏற்ற பயனை அது எதிர் பார்த்தது. 1988 தேர்தல் தோல்விக்குப் பிறகும் இந்திய மேலாதிக்கம் அமிர்த லிங்கத்துடன் அரசியற் பேரங்களை நடத்தவே விரும்பியது.

அமிர்தலிங்கம் பற்றி விடுதலைப் புலிகளுக்கு இருந்து வந்த அவ ...ன்றுமே மாற வில்லை. ...ந்தேகங்கள் பல வற்றில் ...து. விடுதலைப் புலிகட்கு எதிராக அவர் பயன்படுத்தப் படுவார் என்பதற்கு ஆதாரமாக அவர் 1988க்குப் பின்பு அதிகம் பேசாது போனாலும் அவர் இந்திய எசமானர் களை எதிர்த்து ஒரு சொற் கூடப் பேசி அறியாதவர் என்பதையும் நாம் புறக்கணிக்க முடியாது.

அமிர்தலிங்கத்தின் கொலை மக்கள் மனதில் கோபத்தை ஏற்படுத்தியதாகக் கூற முடியாது. அதை மக்கள் அங்கீகரிக்காவிட்டாலும் அவரது கொலையை அவர்கள் ஒரு பொருட்டாகக் கொள்ள வில்லை. அவருடன் சேர்த்துக் கொல்லப் பட்ட யோகேஸ்வரனது மரணம் பற்றி வருந்தினோர் பலர் இருந்தனர். அமிர்தலிங்கத்தின் சாவிற்குப் பின்பு அவரது பேரைச் சொல்லி த.வி.கூட்டணியால் எது வித ஆதயமும் தேட இயலவில்லை. பத்திரிகைகளில் த.வி.கூ. ஆதர வாளர்கள் சிலர் அமிர்தலிங்கத்தைப் பற்றிய நல்ல படிமம் ஒன்றைக் கட்டியெழுப்ப இடையிடை முயன்றாலும் அது எடுபடவில்லை.

கடைசியாக நடந்ததேர்தலின் போது, த.வி.கூட்டணியின் எந்த பிரசாரத்திலும் அவரது படம் பதிக்கப்படவில்லை என்பது முன் குறிப்பிட்ட உண்மையை மேலும் வலியுறுத்துகிறது.

செல்வநாயகத்தின் சில நற்பண்பு களால் அவரது அரசியற் தவறுகளை நியாயப் படுத்தவும் தமிழரசுக் கட்சியின் அரசியல் அழிவினின்றும் காக்க முடியவில்லை. எனவே தான், அமிர்தலிங்கத்தின் திமிர்த்தனமான போக்கால் மட்டுமே த.வி.கூட்டணி சரிந்தது என்று விளக்க முடியாது. தமிழரசுக் கட்சி மட்டுமன்றி அதற்கு முந்திய தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் காலந் தொட்டுத் த.வி.கூட்டணி வரை அதற்கப்பால், இன்றைய த.தே.கூட்டணி வரை, குறுகிய தேசியவாத, சந்தர்ப்பவாத அரசியலின் காரணமாகத் தாமும் அழிந்து தமிழ் மக்களின் விடுதலைக்குத் துரோகமும் செய்த மேட்டுக்குடி அரசியலையே நடத்தி வந்துள்ளன.

அமிர்தலிங்கத்தின் மரணத்தின் பின்பும் அந்த அரசியல் தொடர்கிறது. அரசியற் பேரமும் இரகசியமான அரசியல் உடன்படிக்கைகளும் அயல்நாடுகளின் தயவை நம்பிச் செயற்படுவதும் அவற்றின் முகவர்கள் போல இயங்குவதும் இன்னமும் தொடர்கிறது. இந்தச் சூதாட்டம் இவர்களது இறுதிச் சூதாட்டமாகவே இருக்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் பயங்கரவாதம்

முஸ்லிம் தீவிரவாதிகள் பற்றியும் பயங்கரவாதம் பற்றியும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் பற்றியும் நமது நாளேடுகள் பிதற்றுகின்றன. சிங்களப் பேரினவாதத் தலைமைகள் யாவும், யூ.என்.பியாகட்டும், பொதுசன முன்னணியாகட்டும், சிஹலஉறுமய வாகட்டும் அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது குண்டு வீசுவது பற்றி எல்லாரும் ஏற்கிறவர்களாவே உள்ளனர். ஜே.வி.பி. யூகோஸ்லாவியா மீது குண்டு வீசப்பட்ட போது நடத்திய அமர்க்களத்தை ஆப்கானிஸ்தான் விடயத்தில் காண முடியவில்லை. தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் என்ன சளைத்தனவா! அமெரிக்க வன்முறையைக் கண்டித்து ஒரு சொல்லேனும் யாரும் பேசத் துணிந்தார்களா? முஸ்லிம் ஐக்கியம், முஸ்லிம் தேசியம் என்று சொல்லி வாக்குச் சேர்த்த தலைவர்களும் முஸ்லிம் காங்கிரஸ் பிற முஸ்லிம் கட்சிகளும் வாயடைத்து நிற்பது ஏன்?

## அமெரிக்காவின் இலக்கு பின்லேடன் அல்ல ஆப்கானை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வருவது!

அமெரிக்காவின் இரு நகரங்கள் மீது நடந்த தாக்குதல் பயங்கரவாதத் செயல் என்பது பற்றியோ அதனால் உயிரிழந்தோர் ஒரு பாவமுமறியாத அமெரிக்க உழைக்கும் மக்கள் என்பது பற்றியோ நமக்கு ஐயமில்லை. ஆனால் இந்தப் பயங்கரவாதத்தை ஊட்டி வளர்த்தது யார் என்பது பற்றியும் நாம் மறக்க முடியாது. அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு ஒசாமா பின் லாடன் என்கிற முன்னாள் சி.ஐ.ஏ. முகவரும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையும் இன்று வரை இஸ்லாமிய தீவிர வாதியாகவே (உயிரோடிருந்தால்) தொடருகிற ஒருவர் மட்டுமே காரணம் என்பதற்கு அமெரிக்கா தன் சாட்சியங் களை இன்னமும் மும்முரமாக உற்பத்தி செய்து கொண்டு தான் உள்ளது.

அமெரிக்க உளவுச் செய்மதிகள் அறியாமல் தகவல் பரிமாற முடியாத நிலையில் ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த பின்லாடன் இந்த அற்புதத்தைச் செய்திருந்தாலும் அல்லாமற் போனால் அவரது கையாட்களே இதன் காரணகர்த்தாக்களானாலும், அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது நடத்திய குண்டுவீச்சுக்கு இது வரை ஒரு நல்ல நியாயமுமில்லை. முதலாவதாக, அமெரிக்கா அரசாங்கத்திடம் பின்லாடனுக்கு எதிரான சாட்சியங்களின்றி அவரை ஒப்படைக்க இயலாது என்று ஆபகானிய தலிபான் அரசு சொன்னதில் சர்வதேசக் சட்டப்படி ஒரு தவறும் இல்லை. அடுத்ததாக, இந்தக் குண்டு வீச்சை நடத்துவதற்கு அது ஐ.நா. பாதுகாப்புக் சபையின் அங்கீகாரத்தைப் பெறவுமில்லை. அதைவிட, அமெரிக்காவின் தாக்குதல் களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண மக்களே என்பதும் அமெரிக்க விமானங்கள் சாதாரணக் குடிமக்கள் வாழும் பகுதிகளை இலக்கு வைத்துக் தாக்கியதற்கும் ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

உலகின் பெரிய செல்வந்த நாடான அமெரிக்கா உலகின் மிக வறிய நாடான ஆப்கானிஸ்தான் மீது ஏன் போர் தொடுத்தது? இதற்கு நீண்ட காலத் தேவை சார்ந்த காரணங்கள் இருந்தன. ஒன்று சோவியத் சார்பு ஆட்சியைக் கவிழ்த்த பிறகு அமெரிக்காவின் ஆதரவுடன் அதிகாரத்தைப் பிடித்த தலிபான் அமெரிக்காவின் கைப்பாவையாக இயங்காததால் அமெரிக்காவால் ஆப்கானிஸ்தான் தன் அதிகாரத்தை நிலை நிறுவ முடியவில்லை. ஈரான், பாக்கிஸ்தான், சீனா, தஜிக்கிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், கஸகஸ்தான் ஆகிய நாடுகளை எல்லையிற் கொண்ட ஆப்கானிஸ்தானின் கேந்திர முக்கியத்துவம் பிராந்திய மேலாதிக்க அடிப்படையில் முக்கியமானது. மறுபுறம் தஜிக்கிஸ்தான் எண்ணெய், எரிவாயு வளங்களை அமெரிக்கா தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர ஆப்கானிஸ்தான் வழியான குழாய்வழி களை இட வேண்டும். இவ்விடயத்தில் யாருடைய கட்டுப் பாட்டில் இக் குழாய்வழிகள் இருக்க வேண்டும் என்பது பற்றி தலிபான் ஆட்சியுடன் அமெரிக்காவுக்குச் சில ஆண்டுகளாகவே முரண்பாடு இருந்து வந்துள்ளது. இவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நீண்டகாலத் தேவை சார்ந்த, விடங்கள். அமெரிக்கா ஆப்கானிஸ்தானைத் தன் வசப்படுத்துவதற்கு நீண்டகாலத் திட்டங்களை வைத்திருந்தது. செப்ற்றெம்பர் 11ம்திகதி நிகள்வுகள் இத்திட்டத்தைத் தன் உடனடியான தேவைகளுடன் இணைக்குமாறு அமெரிக்காவை நிர்ப்பந்தித்தன.

உடனடியான பிரச்சனைகளாக அமெரிக்கா எதிர்நோக்கியவற்றுள் ஒன்று சென்ற ஆண்டுக்குச் சிறிது முன்பாகவே அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவாகும். அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி 2000வது ஆண்டில் மந்தமாகி 2001ல் நெருக்கடியை எதிர் நோக்கியது. உற்பத்தியில் தேக்கமும் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவும் அமெரிக்கப் பங்குச்சந்தையிலும் நெருக் கடிக்குக் காரணமாகின. சரிகிற பொருளாதாரத்தை நிலை நிறுத்த செப்ற்றெம்பர் 11க்கு முன்னமே பல தடவைகள் அமெரிக்க வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டு நினைத்ததிலும் குறைவான பலனே கிட்டியது. எனவே, ஆப்கானிஸ்தான் மீதான போர் மக்களின் கவனத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து திசை திருப்புவதற்கு மிகவும் பயன்பட்டது.

மற்ற முக்கியமான உடனடிக் காரணம், சோவியத் யூனியனின் சரிவுக்குப் பிறகு, உலகின் அதி வலிய நாடாகவும் உலகின் ஒரே நாட்டாண்மைக்காரனாகவும் தன்னைக் காட்டிக் கொள்ள முற்பட்ட அமெரிக்காவால் தன் வரலாற்றில் முதல் முதலாக அமெரிக்கா மண் மீது நடத்தப்பட்ட வெற்றிகரமான விமானத் தாக்குதல் ஒன்றின் அதிர்ச்சியினின்று மீள்வது எளிதாக இருக்கவில்லை. அமெரிக்கா வின் ஏவுகனைகளாலும் முப்படைகளாலும் ராடர்களாலும் ரோந்து விமானங்களாலும் அமெரிக்காவின் அதிமுக்கியமான வணிகமையத்தையும் ராணுவத் தலைமைக் கேந்திரத்தையும் காக்க முடியாது போனதால் அரச யந்திரத்தின் வலிமைபற்றி மக்களது நம்பிக்கையும் அதைவிட முக்கியமாக அமெரிக்க முதலாளிய நிறுவனங்களது நம்பிக்கையும் ஆட்டங்காணச் செய்தது. எனவே எதிரியை உடனடியாகவே தண்டித்துத் தனது வல்லபலத்தை நிலை நிறுவுவது முக்கியமாகியது.

பின் லாடன் உயிருடன் பிடிப்பதோ முறையான விசாரணைக்குட்படுத்தித் தண்டனைக்கு உட்படுத்துவதோ அமெரிக்காவின் நோக்கம் என எவரும் நம்பினால் அவருக்கு அமாவாசையில் அம்புலி காட்டுவது கூட எளிதான விடயமாகவே இருக்கும். பின் லாடனைப் பிடிப்பது என்ற பேரில் அமெரிக்கா தனது போரை ஆப்கானிஸ்தான் முழுவதற்கும் விஸ்தரித்தது. இதன் மூலம் ஆப்கானிஸ்தானின் எசமான் யார் என்பதை அங்கு தலிபான் ஆட்சியைக் கவிழ்க்க உருவாக்கப்பட்ட நாலு இயக்கக் கூட்டணியான 'வடக்குக் கூட்டணிக்கு' மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.



அமெரிக்கா தனது படைகளுக்கு ஆபத்தில்லாமல் குண்டுவீசித தலிபான படைகளின் முன்நிலைகளையும் அரண களையும் ஆயுதங்களையும் அழித்ததன் மூலம் தனக்கு ஆட்சேத மில்லாமல் வடக்குக் கூட்டணியினர் மட்டுமே உயிரிழப்பை எதிர் நோக்கு மாறான முறையில் போரை நடத்தியது. தலைநகர் காபூலைக் கைப்பற்றிய வடக்குக் கூட்டணி அமெரிக்காவை மீறி எதையும் செய்ய முடியாத நிலையில் திணறுகிறது.

வடக்கு முன்னணியில் இருந்த இயக்கங்கள் மீது தமது செல்வாக்குக் காரணமாக ஆப்கானிஸ்தான் எதிர் காலத்தின் மீது தமது ஆளுமையைச் செலுத்த எதிர்பார்த் திருந்த ரஷ்யாவும் இந்தியாவும் ஏமாற்றத்துக்குள்ளாகி விட்டன. பாகிஸ்தானுக்குப் பகைமையான ஆப்கானிஸ்தான் ஆட்சி ஏற்படுவது அமெரிக்காவுடைய இப்போதைய திட்டங்களுக்கு அமைவானதில்லை.

அமெரிக்கா குறுகிய காலத்தில் ஆப்கானிஸ்தானில் தனக்குச் சாதகமான ஆட்சியொன்றை அமைக்கலாம். ஆப்கானிஸ்தானை மீளக் கட்டியெழுப்புவது என்ற பேரிலும் பொருளாதார உதவி என்ற பேரிலும் ஆப்கானிஸ்தானைத் தனது பொருளாதார ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர எடுக்கும் நடவடிக்கைகள் மூலம் ஆப்கானிஸ் தானின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க முடியுமோ என்பது இன்னொரு விடயம்.

அமெரிக்காவின் அண்மைக்காலப் போர் நடவடிக்கைகட்கு அதிகம் இலக்காகியுள்ள நாடுகளில் முக்கியமான நாடுகளாக ஈராக்கும் ஆப்கானிஸ் தானும் உள்ளன. மறுபுறம் பலஸ்தீனத்தில் அரபு மக்கள் மீதான இஸ்ரேலிய அடக்குமுறைக்கு அமெரிக்காவே உடந்தையாக இருந்து வந்துள்ளது. இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அரபு நாடுகளினதும் இஸ்லாமிய நாடுகளினதும் மக்களின் வெறுப்பு ஆளாகியுள்ளதற்குக் காரணங்களில் முதன்மையானது பலஸ்தீனப் பிரச்சினையில் அதன் முரட்டுத்தனமான சியோனிஸ் சார்பு நிலைப்பாடே இதற்கான காரணங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இஸ்ரேலைத் தனது கருவியாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புடையது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வைத்த ஒவ்வொரு பொறியிலும் தவறாமல் தன் காலை வைத்துக் காயப்படாமல் போகவில்லை. ஆயினும் ஏகாதிபத்தியங்கள் எதையுங் கற்றதாக வரலாறு இல்லை. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தன்னை மேலும் ஆழமான சிக்கலில் மாட்டிக்கொள்ளப் போகிறது என்பதற்கான அடையாளங்கள் இப்போதே தென்படுகின்றன. அதைவிட மோசமாக அமெரிக்காவின் கொல்லைப் புறம் எனப்படும் தென் அமெரிக்காவின இரண்டாவது பெரிய நாடான ஆர்ஜன்டீனாவில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி அமெரிக்காவின் அடுத்த பெரிய தலைவலியாகப் போகிறது. உலகத்தின் பெரிய பொலிஸ்காரன் உலகத்தின் பெரிய கைதியாகப் போகிற காலம் வேகமாக நெருங்கி வருகிறது.

# அமெரிக்காவிற்கு அடிபணியாத வீரம் மிக்க கியூபா மக்கள்

இலங்கையின் புரட்சிகர இயக்கங்கள் என்று சொல்லப்படுபவை யாவும் புரட்சியை மறந்தாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சி எனக் கூறப்படுவது கம்யூனிஸத்தை விட்டு வெகுநாட்களாகி விட்டது. சேகுவார இயக்கம் என்ற ஜே.வி.பி சேகுவாராவை மறந்தது மட்டுமல்ல கியூப புரட்சியையும் மறந்து வெகு நாட்களாகிவிட்டது. ஆனால் இதுவரை கியூ தேசிய தினத்தை நினைவு கூர்ந்து வந்த மாக்சிச லெனினிஸ மாவோ சேதுங் சிந்தனையை அடிப்படையாக கொண்ட புதிய-ஜனநாயக கட்சி 2002 ஜனவரி முதலாம் திகதி கியூபாவின் 43வது தேசிய தினத்தை பெரியளவில் கொழும்பு கிராண்ட்பாஸிலுள்ள நாராயணன் குரு மண்டபத்தில் கொண்டாடியது.

இன்றும் சோஷலிஸத்தை உயர்த்திப் பிடித்து, ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாது ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தில் முதன்மை பாத்திரத்தை வகிக்கும் கியூப சோஷலிஸ அரசிற்கும், கியூப கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் தலைவர் பிடல் கஸ்ரோவுக்கும், கியூப மக்களுக் கும் ஒத்துழைப்பை தெரிவிப்ப தாகவும், கியூபாவை மதித்து கௌரவப் படுத்துவதாகவும் மேற்படி கியூப தேசிய தினவிழா அமைந்தது.

நாராயணன் குரு மண்டபத்திற்கு வெளியில் லேயார்ட்ஸ் புரோட்வே வீதியில் செம்மலர்கள் வீதி நாடகக் குழுவினரின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு வீதிநாடகம் நிகழ்த்தப்பட்டது. அனைத்து உலக நாடுகளின் விவகாரங்களிலும் தலையிட்டு மக்கள் விரோத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடிக்க செங் கொடியின் கீழ் அணிதிரள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி யதாக அவ்வீதி நாடகம் அமைந்திருந்தது.

## கொழும்பில் தேசிய தினக் கூட்டம்

அதன் பின்னர் மண்டபத்தினுள் கூட்ட நிகழ்ச்சி ஆரம்பமானது. தலைமை உரையாற்றிய புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா 'மூன்றாம்' உலக நாடான கியூபாவின் தேசிய விடுதலை போராட்டத்தில் இருந்து மட்டுமல்ல. சோஷலிச ஆட்சிமுறையிலிருந்தும் அனுபவங்களை நாம் பெற்றுக் கொள்வது அவசியம். இன்று புதிய வருடத்தை வரவேற்பதற்கு கொக்கோ கோலா, பெப்சி போன்ற பன்னாட்டு கம்பனிகளின் களியாட்டங்களில் கலந்து கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் இலங்கை மக்கள் வித்தியாசமான ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சோஷலிஸத்தை உயர்த்திப் பிடிக்கும் கியூபாவின் தேசிய விடுதலை தினத்தை நினைவு கூர்வதில் பங்கெடுப்பது அவசியம். அதனை வலியுறுத்தியே இந்நிகழ்ச்சி இங்கு நடைபெறுகிறது' என்று தெரிவித்தார்.

தேசிய விடுதலைப் போராட்டங்களில் இருந்து பட்டறிவுகளைப் பெற்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு நட்பு சக்தி எவையென்றும் எதிர்ப்பு சக்திகள் எவையென்றும் சரியாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்தியா என்பவற் றுடன் தந்திரோபாய ரீதியாக தொடர்பு களை வைத்துக் கொள்வதாகக் கூறிக்கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மூலோபாயத்தை தகர்த்துவிடும் என்பதில் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். என்று புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார கியூபா பற்றி ஒரு கவிதை யை சமர்ப்பித்து பேசினார். மூன்றாம் உலக நாடுகளுக்கு வழிகாட்டியாக தலைமை தாங்கக் கூடிய பக்குவத்துடன் கியூபா இருக்கிறது. ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது. கியூபாவின் அற்புதம் யாதெனில் மக்களின் போராட்ட சக்தியாலும், கியூப தலைவர்களின் முன்னுதாரணமான நடவடிக்கைகளாலும் கியூப புரட்சி நிகழ்ந்தது இடது சாரிகள் என்று கூறிக்கொள்வதிலும் பார்க்க மெய்யான இடதுசாரிகளாக நடந்து காட்ட வேண்டும் ஜே.வி.பி.யினர். இடதுசாரிகள் என்று தங்களை தாங்களே கூறிக் கொண்டாலும் தமிழ் மக்களின் உரிமை தொடர்பாக அவர்களின் நிலைப்பாடு இனவாதமாகும் என்று வாசுதேவ குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் சோ. தேவராஜா உரையாற்றும் போது புரட்சிவாதிகளுக்கு எல்லைக் கிடையாது. சாதி, மதம், நாடு என்ற வரையறைகள் கிடையாது. அதனை சேகுவேரா நடைமுறையில் நிரூபித்துள்ளார். ஆர்ஜென்டினாவில் பிறந்த சேகுவேரா கியூப மக்களின் புரட்சியில் ஈடுபட்டு அதன் வெற்றிக்கான பங்களிப்பை செய்துள்ளார் என்று தெரிவித்தார்.

வசந்த திஸாநாயக்கவும். உறையாற்றினார். இறுதியில் புரட்சிப் பாடல்கள் பாடப்பட்டன.







நன்றி - நூலகத்திட்டம்



# பேராசிரியர் சி. சிவசேகரத்தின் இரு நூல்கள்

இது ஒரு நாடக நூலாகும். சிலே நாட்டவரான அறியேல் டோர்க்மன் 1990 ஸ்பானிய மொழியில் எழுதிய நாடகம், பின்னர் மரணமும் மங்கையும் (Dath and the Maiden) என்ற பெயரில் ஆங்கிலத்தி ஆக்கப்பட்டு நாடாகமாக மேடையேறிய பின்பு திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டு வெற்றிபெற்றது. இத் திரைப்பட வடிவத்தை வைத்துச் சிங்கள த்தில் நாடமாக்கப்பட்டு மேடையேற்றப் பட்டுள்ளது. ஆங்கில வாக்கியத்தைச் சார்ந்து சி. சி. யினால் தமிழில் எழுதப் பட்ட நூலே 'அபராதி நானல்ல' நாடகம் ஆகும். இந்நூல் தேசிய கலை இலக்கிய பேரவையினால் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னைய சர்வாதிகார ஆட்சியில் கடத்திச் செல்லப்பட்டுச் சித்திரவதைக்கும் வன்கலவிக்கும் உட்படுத்தப்பட்ட மாலினி என்ற நடுத்தரவயதுப் பெண்ணும் அவரது கணவரான சட்டத் தரணி குமாரும் தங்கள் கடற்கரை யோர வீட்டில் தங்கியுள்ளனர். கடந்த

## அபராதி நானல்ல
### அவர்களது கதையும் எங்கள் கதைதான்
**ஆசிரியர் :~ சி. சிவசேகரம்**

ஆட்சியில் நடந்த மனிதஉரிமை மீறல் களை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு புதிய அரசாங்கம் குமாரை நியமித்து ள்ளது. ஒரு நாள் இரவில் அவர்களது வீட்டில் நடைபெறும் சம்பவமே நாடக மாக்கப்பட்டுள்ளது. குமார் வீதியில் காரில்வந்தபோது டயர் காற்றுப்போக வே ராஜா என்ற மருத்துவர் தனது காரில் குமாரை அவரது வீட்டுக்கு கூட்டிவருகிறார். இந்த மருத்துவரே வதை முகாமில் தனக்குக் கொடுமை செய்தவர் என்பதை மாலினி சந்தேகித்து துப்பாக்கி முனையில் அவரை மிரட்டி, கட்டி வைத்து விசாரணை நடத் துகிறார். குமார் அந்த விசாரணையை எதிர்க்கிறார். ராஜா தான் குற்றவாளி யல்ல எனமறுக்கிறார். எனினும் மாலினி அவரிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்றுவிடுகிறார். நாடகம் நிறைவுறுகிறது.

நாடகம் மூலம், மனித உணர்வுகள், உறவுகள் மீதும் ஏற்படுத்தும் கொடுமை யான ஆட்சி அதிகாரத்தின் வன்செயல் களின் பாதிப்புகளை பகிர்ந்து கொள் வதற்கு இந்நாடகச் சுவடி உதவு கின்றது. நாடகப் பிரியர்களுக்கு மட்டு மன்றி தமிழ் மக்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதம் இந்நூலாகும்.

அபராதி நானல்ல




---

## சிவவேகரத்தின் விமர்சனங்கள் 2

தமிழில் கடந்த காலங்களில் ஆக்க இலக்கியங்களின் நூல் வெளியீட்டு முயற்சிகள் மிக அருந்தலாக பகீரதப் பிரயத்தனத்துடன் மேற்கொள்ளப்பட் டுள்ளன. எனவே அந்நூல்கள் தொடர் பான விமர்சனங்கள் என்பன அவற்று க்கு அநுசரணையான வையாகவோ அல்லது ஆதரவு தெரிவிப்பனவாகவோ அமைவதையே படைப்பாளரும் விரும் பினர். ஆக, புத்தக வியாபாரமும் விமர் சனங்களும் கைகோர்த்து நடைபயில் வதையே இலக்கிய நெஞ்சங்கள் விரும்பின.

நிலைமை இன்று மாறிவிட்டது. தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழத்திலும் கணனி யின் வரவால் நூல்களின் வெளியீடுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இச் சூழலில் புத்தகப் பண்பாட்டை விருத்தி செய்ய வேண்டு மெனில் திறந்த விவாதங்களும் விமர் சனங்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.


விமர்சனங்களில் தனிப்பட்ட காழ்ப் புணர்வுகள் குறுங்குணங்கள் தவிர்க்கப் பட்டு மாற்று அணியினராயினும் ஆக்கபூர்வமாக கருத்துச் சொல்லும் துணிவும் தனிப்பட்ட நண்பரெனினும் தயங்காது தவறுகளைச் சுட்டிக்காட்டும் பண்பும் வளர்வதுவே நல்ல படைப் பிலக்கியச் சூழலை விருத்திசெய்வதற்கு அவசியமானதாகும்.

தமிழில் ஆய்வுப்பணி விருத்தியடைந்த அளவுக்கு விமர்சனப்பணியின் வேகம் போதுமானதாக அமையவில்லை.

விமர்சனத்துறையில் முன்னணியில் நிற்கும் வெகுசிலரில் சிவசேகரமும் ஒருவர். அவரது விமர்சனங்களில் நாம் பலபடைப்பாளர்களின் படைப்புகளைத் தரிசிக்கலாம். விவாதிக்கலாம். முதலாவது விமர்சனங்கள் என்ற நூலை 1995ல் வெளியிட்டோம். இது அவரது இரண்டாவது விமர்சன நூலாகும்.

கவிதை, நாடகம், மொழி பெயர்ப்பு, விமர்சனம் எனப் பல்துறை ஆற்றல் பெற்ற ஒரு சில எழுத்தாளருள் சிவசேகரமும் முக்கியமானவர்.

நூலில் காணப்படும் இவரது விமர்சனங்களே முடிந்த முடிவுகளல்ல.




இவ்விமர்சனங்களையே விமர்சிக்கும் தெளிந்த ஞானச்செருக்குடன் நாம் எல்லோரும் மனந்திறந்து பேசுவோம்.

---

# தாயகம் இதழ் 43 பற்றிய அவதானிப்பு

கடந்த டிசம்பரில் தாயகம் தனது 43வது இதழை வெளியிட்டுள்ளது. இலங்கை யின் பிரபல ஆய்வாளர்கள், விமர்சகர் கள், ஒலிபரப்பாளர்கள் பார்க்க மறுக்கும் ஒரு இதழாக தாயகம் யாழ்ப்பாணத்தி லிருந்து கடந்த 25 ஆண்டுகளாக வெளிவருகிறது. இதன் ஆசிரியராக எழுத்தாளர் க. தணிகாசலம் செயற் பட்டு வருகிறார். இவர் தன்னையொரு எழுத்துலகக் கொம்பனாக வெளிப்படுத் தாது தன்னடக்கமும் அழமும் உறுதியும் மிக்க எழுத்தாளராக இருந்து வருகிறார். அந்த நிலைப்பாடு சிலருக்கு ஒவ்வாமையாகும். அதனால் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகள் சிலவற்றில் இவரை நூல் பெறுவோர் வரிசையில் சேர்த்துக்கொள்ளும் சிலர் யாழ்ப்பாணத்தில் இவரது பேச்சை தமது வெளியீட்டு நிகழ்ச்சிகளில் கேட்க அஞ்சுகின்றதன் மூலம் தமது இலக்கிய த்தூய்மையை பாதுகாத்துக் கொண் டதை கடந்த டிசம்பரில் கண்ணுற்றேன்.

அரசியலியிருந்து இலக்கியத்தைப் பிரிப்பவர்களின் பக்கம் தற்போது காற்று வீசுவதனால் இலக்கிய மூடம் உச்சம் பெற்றிருப்பதனால் தாயகம் சிலரது கண்ணுக்கும் தெரியாது. தெரிய வேண்டிய அவசியந்தான் பொதுவர் களுக்கு ஏது?

43வது இதழில் 10 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. கவிஞர்கள் இராகலை பன்னீர், சிவசேகரம், தணிகையன், நீர்வை கலைவரன், சூரியநிலா, கு.றஜீபன, அழ. பகீரதன், இராம. ஜெய பாலன், பளை கோகுலராகவன், த. ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகள் உள்ளன.

'ஆறுதல்கள்' என்ற கவிதையில் ''தூங்கிக்கிடந்த அடிமைத்தனம் தகர்த்து/ ஓங்கிக் குரல் கொடுத்த /உலக.. முதல் முதுகெலும்பே../ ஜீலியஸ் சீசர் என விழிப்பது எவ்வளவு சரியாகும்? அதைவிடவும் 'ஸ்பாட்டக்கஸ்'ஸை வெறுமனே 'அன்பான' என விழிப்பதும் ஜுலியர்சீசருடன் இணைப்பதும் எப்படி ஆறுதல் தந்து அகத்தில் ஒளி ஏற்றும் என்பது தெரியவில்லை.

'விமர்சனம் பற்றி' கவிதை படைப்பாளி கள் என்று தம்மைத்தாமே பீற்றித் திரியும் பிரம்மாக்கள் தாம் விரும்பும் விமர்சனம் பற்றி என்ன நினைப்பிலுள்ளார்கள் என்ற அகங்கார த்தை வெளிப்படுத்துகிறது.

'எமது சமூகம்' கவிதையில் வரும் 'கற்பழிப்பு' சொல்லைத் தவிர்த்திருக்க லாம். 'நம்பிக்கை' கவிதையில் வரும் 'சிந்திய வியர்வைக்கே சில்லறை கிடைக்கும் உலகம்' என்ற நம்பிக்கை உற்பத்திசாரா வியாபார உலகில் எவ்வாறு சாத்தியம் என நம்புவது? 'ஐந்தாம் ஆண்டில்' கவிதையில் சிறார்கள் வாழ்வின் சிதைவை மீட்கும் கேள்வி எழுப்பப்படுகிறது. 'வெளிப்பு' கவிதையில் 'மீண்டும் வருமோர்




வெளிப்பு' பற்றிபாட 'விடியலுக்காய்' கவிதையில் 'திரும்பத் திரும்ப இருள் கவ்வ/மீண்டும் மீண்டும் விடியலுக்காய்/ காத்திருக்கின்றோம்'' என விடியல் பற்றியே சந்தேகம் கிளம்புகிறது.

நான்கு சிறுகதைகள் ஆக்கப்பட் டுள்ளன. உடுவில் அரவிந்தனின் 'பசி'யும், யாதவன் எழுதிய 'அரங் கேற்றம்' சிறுகதையும், முகமாலை சேகர் எழுதிய 'இருள் கதையும், கரப்பான் பூச்சிகள்' என்ற 'சித்திரா' வின் கதைகளும் உள்ளன.

'பசி' கதையில் அழிவுற்ற யாழ்ப்பா ணத்தில் மனித உயிர்கள் படும் கொடு மையையும், கோயில்களும், கோபுரங் களும் பணத்திமிருடன் பல்கிப்பெருகி வான்முட்ட வளர்ந்து ஆண்டகைகளின் அடாவடித்தனத்துடன் கிளை விடுவதை யும் அத்தகைய அநியாயத் துடன் சங்க மிக்கும் சகலரின் மீதும் கேள்வி யெழுப்புகிறது.

'அரங்கேற்றம்' கதையில் பிள்ளைகள் பெற்று வெளிநாட்டுக்கு அனுப்பிய வசதியான தந்தையின் அவலச் சாவும், ஊரிலையே வாழும் சாதாரணணின் தந்தையின் கௌரவச் சாவும் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

'இருள்' சிறுகதை இயக்கத்தில் ஈடுபடும் இலட்சிய இளைஞனின் உணர்வு பற்றியது. ''அவனது கேள்வியில் பதட்டமும், கவலையும் கலப்படமாய் இருந்தது' என்பதில் பொய்மையே தொனிக்கிறதென்பதால் பொருந்தவில்லை.

'சராசரி தாயின் ஆத்மார்த்த ஈடுபாடு' என்று ஆசிரியரின் வார்த்தையில் முரட்டுத்தனமான இலட்சியத்தாய்க்காக ஏங்குவது தெரிகிறது. கதாமாந்தரான இளைஞன் அவ்வாறு ஏங்கியதாகத் தெரியவில்லை. "தன் கடமை அங்கே ஒரு இடத்தில் நிறைவு செய்யப் படுகின்றது'' என்ற திருப்தியில் பொய்மை தொனிக்கிறது.

'கரப்பான் பூச்சிகள்' கதை சொல்லும் முறைமை வித்தியாசமாக அமைந் துள்ளது. கணவனும், இராவணனும், துச்சாதனனும், கரப்பான் பூச்சிகளும் பாதிக்கப்படும் பெண்ணுக்கு ஒன்றாகத் தெரிகின்றார்கள் என்ற உணர்வுத் தாக்கம் ஏற்படுகிறது.

'வால்' என்ற யாவும் சிந்தனை என்ற நடைச்சித்திரம் சி. கதிர்காமநாதனின் படைப்பு, நன்றாகச் சிரிக்கவும் ரசிக்கவும் சிந்திக்கவும் தகுந்த புதிய படையல் ஆகும். கட்டுரையை உரையாடலாய் எழுதும் பாங்கு நயப்புக்குரியதும் பலரும் தொடர முயற்சிக்க வேண்டிய உருவ நேர்த்தியுமுடையதாகும்.

'யாருக்கான கல்வி எதற்கான கல்வி' என்ற சிவசேகரத்தின் கட்டுரையும் பல கேள்விகளை எழுப்பகிறது. கொலனியுகத்தின் கல்வியைப்போல கொம்பியூட்டர் யுகத்தின் கல்வியும் சுரண்டற்காரரின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனவென்றும், பரீட்சைப் பெறுபேறுகளே கல்வித் தொழிற் சாலைகளின் உற்பத்திப்பண்டங்கள் என்றும், சமூகமேம்பாட்டுக்கு நிறுவனம் என்ற அடிப்படையில் பல்கலைக்கழகம் செய்யவேண்டிய பணி சீர்குலைந்துள்ள தென்றும், கொலனித்துவத்துக்கு சிற்றூழியர்களை உற்பத்தி செய்யும் கருவியாக கல்வி மாறி வருகிற தென்றும், சமூக உணர்வற்ற கல்விமான்கள் இயந்திரங்களைவிடக் கீழானவர்கள் என்றும் பல சிந்தனை களை கட்டுரை தூண்டுகின்றது.

'உடைபடவேண்டிய மௌனப்' (பொரு ளாதார) பண்பாடு என்ற கட்டுரையை வே.சேந்தன் எழுதியுள்ளார். உலக மயமாதலின் பல போக்குகளைத் தெளி வாகச் சுட்டியதுடன் மையநாடுகளின் கம்பனிகளுக்குச் செல்லும் விளிம்புநாடு களின் தேசியச் செல்வத்தை மீட்க செயல்முறையான மக்கள் உணர்வு தட்டியெழுப்பவேண்டிய ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

''பாலுன் கொங்'' (Falun Gong) இதுவும் ஒரு அமெரிக்க மத ஆயுதம்'' என்ற கட்டுரையை புவியன் எழுதியுள்ளார். Falan Gong என்பதை தமிழில் 'பாலுன் கொங்' என்பதற்குப் பதிலாக "பாலுன் கொங்'' எனவோ அல்லது Fாலுன் Gோங்'' என்றோ எழுதினால் உச்சரிப்புக்கு எது சரியாகும் என எண்ணத் தோன்றியது.

பாவலன் பா. சத்தியசீலன் என்ற கவிஞனை நினைவு கூறுதல் பற்றி. கல்வயல் குமாரசாமி மிக நன்றாகவே எழுதியுள்ளார். போலி மூதறிஞர் மீதும் பேராசான்கள் மீதும் கல்வயலாரின் கோபம் நியாயமானதே. அலையின்மீ தொரு தோணி செலுத்திய/ ஆழியாளர் குலத்துடன் பனைத்/ தலையின் மீதொரு பானையிற் பாகமாய்த்/ தமிழெடுக்கும் தொழிலவர் மட்டுமா'' என்ற சத்தியசீலனின் கவிதைகள் என்றும் எம் நெஞ்சில் நின்று நிலைக்கும் அவர் பேருடன் எனலாம்.

''தெனாலி'' படம் பற்றிய 'பேய்க்குஞ்சு'வின் விமர்சனமும் சுவையானது. திரும்பத் திரும்ப வாசிக்கலாம் "வால்'' போன்று.

சோ. தேவராஜா எழுதிய ஆச்சி கவிதைத் தொகுப்பு பற்றிய நூல் விமர்சனம் ஒன்றினை இரா. சடகோபன் எழுதியுள்ளார் சடகோபனின் பார்வை கவிதைகளை ஆழத் தொட்டுநிற்கிறது.

'பயங்கரவாதத்தின் அடித்தளம்' பற்றிய குறிப்பு அமெரிக்காவின் தோலை உரிக்கிறது. சிலர் அமெரிக்க தூதரகத் திற்கு காவடி எடுக்கும் இவ்வேளை இது போன்ற கட்டுரை அவசியமாகும்.

தாயகம் சஞ்சிகை புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாட்டைத் தோற்றுவிக்கும் சமூக மாற்றப் பாதையில் பயணிக்கும் ஒன்றாகும் என்பதால் சிலருக்கு அதன்மேல் வக்கிரம் தான். அதனையும் கடந்து தாயகம் தன்பணி தொடரவேண்டும்.

---

## கூட்டுத் தசாங்கம்

கூட்டு நல்ல கூட்டு
கருவாட்டுக் கூட்டு
வோட்டுக் கேட்கும் கும்பலுக்குள்
வலுவான கூட்டு
நாட்டு வரிச் சுரண்டலுக்கு
நலமான கூட்டு
வேட்டுத் தீர்க்கும் நாயகத்தின்
வழுதிலங் காய்க் கூட்டு

பாணின் விலை ஏறியதாய்
பல்லிழித்த கூட்டு
தானும் வந்து செய்த தென்ன
தலை கவிழ்ந்த கூட்டு
கோணிப் பையில் எலும்பெண்ணி
கொக்கரித்த கூட்டு
காணிகளில் பிணம் புதைத்து
கொட்டமிட்ட கூட்டு

மரம் வளர்த்துக் கதிரையிலே
முட்டு வைத்த கூட்டு
பரம் பொருளாய்ப் பத்தினியை
போற்றி நின்ற கூட்டு
கரம் எடுத்து மரம் தறிக்க
கத்தி தந்த கூட்டு
சிரம் தறிக்க சில்லெடுக்க
சீர் குலைந்த கூட்டு

ஆடி மாறி ஆவணியாய்
ஏறி வரும் கூட்டு
தேடி மக்கள் வீடுகளை
தடவி வரும் கூட்டு
சோடி போட்டுத் தாளமிடும்
சுதியிழந்த கூட்டு
ஓடி ஓடிக் குழிபறிக்கும்
ஒற்று மைக்குக் கூட்டு

வீட்டைப் பூட்டிச் சூரியனை
வடிவமைத்த கூட்டு
கோட்டை கட்டி சூரியனால்
கதியிழந்த கூட்டு,
நாட்டை விட்டு ஓடியெங்கும்
நக்கித் தின்ற கூட்டு
காட்டில் வாழும் சூரியனின்
கால் பிடித்த கூட்டு

முன்பு செய்த பிழைகயெல்லாம்
மறக்கச் சொல்லும் கூட்டு
என்பு கண்டு வாலாட்டும்
ஏது மிலாக் கூட்டு,
துன்பப்படும் மக்களுடல்
தோலுரிக்கும் கூட்டு,
இன்பம் தேடிக் கொழும்பேழில்
இடம் பிடிக்கும் கூட்டு

ஆக்கி மிடிஸ் போலெழுந்து
ஆர்ப்பரிக்கும் கூட்டு,
போக் கிழந்து பச்சை வயல்
பக்கம் பாடும் கூட்டு,
செக்கிழுக்கும் இனவாதச்
சேற்றமிழும் கூட்டு,
கக்கிவிடும் வாய்ப்புக்காக
கால் கழுவும் கூட்டு

பேசித் தீர்க்க வேண்டுமென்று
பாடி வந்த கூட்டு,
காசி சென்று கையேந்தி
கடனடைக்கும் கூட்டு,
ஆசி கேட்டு காவியிடம்
அடி பணியும் கூட்டு,
பாசி பட்ட தீர்வினிலே
பதறி விழும் கூட்டு

மொத்தமாக விற்பவரும்
மூக்கு நீட்டும் கூட்டு,
கத்தை யாகக் காசுழைக்க
காத்து நிற்கும் கூட்டு,
வித்தை காட்டி பாளிமென்றில்
வாழ்ந்து பார்க்கக் கூட்டு,
செத்த பாம்பைச் சேர்ந்தடிக்கும்
சுற்றி நிற்கும் கூட்டு

ஆயுதங்கள் ஓயும் வரை
ஆறப் போடும் கூட்டு
ஆயுதங்கள் ஓயும் முன்னர்
ஆட் சேர்க்கும் கூட்டு,
மாயு தெங்கள் துன்பமென்று
மக்கள் பார்க்கும் கூட்டு,
போயும் இங்கே வந்தகொடும்
போரோ என்னும் கூட்டு

~ பட்டணைத்தடிகள் ~

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



புதியபூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 ஜன/பெப்ரவரி 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 43



யாழ் செயலகம் முன்பாக மீனவர்களின் மறியல் போராட்டம்

# வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் கூட்டணியின் சந்தர்ப்பவாதம்

தமிழ் மக்களை இன உணர்வுகளின் பெரால் ஏமாற்றவும் அதன் மூலம் தமது உள்ளார்ந்த நிலைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும் தமிழ்த் தலைமைகள் என்றும் பின் நின்றதில்லை. அதற்காக காலத்திற்குக் காலம் ஒவ்வொரு உருவம் எடுத்துக்கொள்வார்கள். இப்போது எடுத்துள்ளதே தமிழர் கூட்டமைப்பாகும். கடந்த தேர்தலின் போது தமிழ்க் கனவான்களின் பேரில் தோற்றுவிக்கப்பட்ட இக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு ஒரு தோற்றமாகக் காட்டப்பட்ட அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழர்களின் உயர் மேட்டுக் குடிகளுக்கும் சேவை செய்யும் ஒன்றாகவே அதன் செயற்பாடுகள் இருந்து வருகின்றன. இதில் முன் நிற்கும் கட்சிகளில் தமிழர் கூட்டணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் முக்கியமானவை. அடுத்தஇரண்டு கட்சிகளும் தமது அரசியல் இருப்பை வலுப்படுத்தி தம்மீது படிந்துள்ள கறைகளைப் போக்கிக்கொள்ள இக் கூட்டமைப்பை பயன்படுத்தி வருகின்றன. அத்துடன் கூட்டமைப்பைத் தனி அமைப்பாக்க வேண்டும் எனக் கோரி வரும் ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணியும் கூட்டமைப்புக்குள் சினந்து வெறுக்கப்படவும் செய்கின்றன.

இவை ஒருபுறம் இருக்க கூட்டமைப்பின் பெயரால் வடக்கு கிழக்கில் நடைபெற வேண்டிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட உள்ளன. இவ்ஒத்தி வைப்புக்கு ஏற்ற நியாயமான காரணத்தை கூட்டமைப்பினர் முன்னைக்க வில்லை. வடக்கு கிழக்கில் தேர்தல் வைத்தால் இடம் பெற்றுவரும் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளுக்கும் பேச்சுவார்த்தைக்கும் குந்தகம் ஏற்பட்டு விடும் என விளக்கம் கொடுத்துள்ளனர்.

இது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயம் ஆகாது. அடுத்தடுத்து இரண்டு பொதுத்தேர்தல்களில் பங்கு கொண்டு உலகம் வடக்கு கிழக்கு முடிவையே எதிர்பார்த்து நிற்பதாகக் கூறி வாக்குகள் கேட்டுப் பாராளுமன்றம் வந்தவர்கள் கூட்டமைப்பினர். அதே பதவிகளைப் பாவித்து உள்ளூர் ஆட்சித் தேர்தலில் மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயக உரிமையை பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி மூலம் பறித்து கீழே போடவைத்துள்ளனர். இது பழமைவாத ஆதிக்க அரசியலின் தொடர்ச்சி தான். தாங்கள் மட்டும் தான் வடக்கு கிழக்கின் ஜனநாயகத்தையும் இயல்பு வாழ்வையும் தீர்மானிக்கும் திமிர்த்தின அரசியல் சக்தியாக இருக்க வேண்டும் என்பதையே கூட்டமைப்பினர் விரும்புகின்றதன் வெளிப்பாடே தேர்தல் ஒத்தி வைப்பாகும்.

இதே காரியத்தை வேறெரு கட்சியைச் சேர்ந்தோர் செய்து கொண்டிருந்தால் இப்போது அத்தகையோருக்கு 'துரோகிகள்' பட்டம் சூட்டுதல் இடம் பெற்றிருக்கும். இன்றைய கூட்டமைப்பும் முன்னைய கூட்டணியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூடிக் குலாவிக் கொள்வதன் மூலமான இரகசிய முடிவுகளின் ஒரு வெளிப்பாடு தான் தேர்தல் ஒத்திவைப்பு என்பதை அரசியல் ஞானம் உள்ளவர்கள் அதிகதூரம் ஊடுருவி அறிந்து கொள்வார்கள்.

அதிலும் துரோகத்தனமானது அம்பாறையைத் தனியாக்கி அங்கே தேர்தல் நடாத்த கூட்டமைப்பினர் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறெனில் வடக்கு கிழக்கு இணைப்பு என்பதற்குள் அம்பாறை இருக்க மாட்டாது என்பதை கூட்டமைப்பினர் ஏற்றுக்கொண்டு விட்டதையே எடுத்துக்காட்டுகிறது. பிரதமர் அண்மையில் தாயகக் கோட்பாட்டைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியதை கூட்டமைப்பு ஆமோதிக்கின்றது என்பதே அர்த்த மாகும். இதனைக் கூட்டமைப்பின் அம்பாறை பா.உ. சந்திர நேரு வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அது கூட்டமைப்பின் கொள்கை வகுக்கும் சில ருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் பின்பே தனித்தனி அறிக்கை விடவேண்டாம் என வாய் பூட்டு போட முன்வந்துள்ளது கூட்டமைப்பு.

வடக்கு கிழக்கு யுத்தத்தால் அழிந்து புனரமைப்பையும் புனர்வாழ்வையும் எதிர்நோக்கி நிற்கின்றது. இந்நிலையில் உள்ளூராட்சி சபைகளின் ஜனநாயக செயற்பாடு என்று கூறப்படும் தேவையை மக்கள் எதிர்நோக்கி நிற்கின்றனர். எவர் அச்சபைகளின் அதிகாரத்திற்கு வருவது என்பதல்ல பிரச்சினை. எவர் வந்தாலும் அவர்கள் மூலம் தமது உள்ளூர் அபிவிருத்தி புனர மைப்பு, புனர் நிர்மான வேலைகளை மக்கள் நிர்ப்பந்தித்துச் செய்து கொள்ள வாய்ப்புகள் இருக்ககும். விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் வடக்கு கிழக்கில் ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளின் மூலம் மக்கள் முடிந்தளவு நன்மை களைப் பெற்றே வந்துள்ளனர்.

வடக்கு கிழக்கின் உள்ளூராட்சி சபைகள் மூலம் முன்னை பேரினவாத பொதுசன முன்னணி அரசாங்கத்தின் ஆதரவுடன் சில கட்சிகள் செயல்பட்டதாக குற்றம் சுமத்தப்படுமானால் தமிழர் கூட்டடைப்பு இன்றைய பேரினவாதக் கட்சி அரசாங்கத்தின் மூலம் வடக்கு கிழக்கின் உள்ளூராட்சி சபைகளுக்கான ஜனநாயகத்தை திருகி நிற்கின்றது என்பதே உண்மையாகும். எவ்வளவிற்கு தமிழர் தன்மானம் பற்றிப் பேசினாலும் தமிழர் தலைமைகள் என்பன இரண்டில் ஒரு பேரினவாதக் கட்சியின் குடையின் கீழ்தான் சுகம் கண்டு வருகின்றனர். என்ற உண்மையைத் தான் தேர்தல் ஒத்திவைப்பு எடுத்துக் காட்டுகின்றது. இது தமிழர் கூட்டமைப்பின் சுயரூபத்தைத் தெரிந்து கொள்வதற்கு உரிய சந்தர்ப்பமாகும்.

## ஆனந்தசங்கரியார் அங்கும் இங்கும்



'ஐ.ஆர்.ஏ புலிகள் இயக்கம் ஆகியவற்றின் பயங்கரவாதமும் சமாதானப் பேச்சுவார்த்தையும்' என்னும் நூல் வெளியீட்டு விழா ஹோட்டல் ஒப்ரோயில் நடைபெற்றது. இதில் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொண்டு உரையாற்றுகிறார். அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# புத்தூர் பகுதியில் நிலச்சொந்தக்காரர் திமிர்த்தனம் குடியிருந்த மக்களை குடியெழுப்ப முயற்சி

வடபிரதேசத்தின் புத்தூர் பகுதியில் நிலவுடைமையாளர்களுக்கும் அவர்களது நிலங்களில் குடியிருந்தும் குத்தகை செய்தும் வரும் மக்களுக்குமிடையில் அடிக்கடி முறுகல் நிலைகளும் சில வேளைகளில் மோதல்களும் வருவதுண்டு. அண்மையில் புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமத்தில் பல்லாண்டுகளாக குடியிருந்து வந்த பதினைந்து குடும்பங்களை அங்கிருந்து அகற்றி விட்டு மேற்படி நிலத்தை வெளியிடங்களைச் சேர்ந்த பணம் படைத்தோருக்கு விற்பனை செய்ய நிலச் சொந்தக்காரர் முயற்சி செய்து வருகிறார்.

ஆனால் தமது குடியிருப்புகளை விடத் தயார் இல்லை என்றும் கூலி விவசாயிகளான மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான விலையில் அவற்றைத் தமக்கு தந்து கொள்ளுமாறும் கேட்டனர். இதனை உயர் சாதிய அகம்பாவத்திமிர் கொண்ட நிலச் சொந்தக்காரர் அவ்வாறு கொடுக்க மறுத்து பொலீஸ் மூலம் குடியிருந்த மக்களை அப்புறப்படுத்த சகல வழிகளையும் பயன்படுத்தி வருகிறார். இப்பிரச்சினையில் நான்கு பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முடிக்குரிய காணிகளாக இருந்தவற்றையெல்லாம் உடையார் மணியகாரர் விதானையார் பதவிகள் மூலம் அபகரித்து அவற்றுக்கு தத்தமது பெயர்களில் தோம்பு, உறுதி எழுதி ஊர் நிலங்களில் பெரும் பகுதியை தமதாக்கிக் கொண்டவர்களின் பரம்பரையினர் தான். இன்றும் நிலமற்ற மக்களைக் குடியெழுப்ப நிற்கின்றனர். பத்து வருடங்கள் ஆட்சியுரிமை உள்ள எந்தக் குடியிருப்பாளரையும் குடியெப்பிக் கலைக்க முடியாது எனச் சட்டம் கூறுகின்றது. ஆனால் ஆண்ட பரம்பரை திமிர் கொண்டவர்களோ தலைமுறை தலைமுறையாகக் குடியிருந்து வரும் நிலத்திலிருந்து விரட்ட கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

ஆனால் இனிமேல் இந்த ஆண்டகைகளின் வாரிசுகளின் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் அடிபணிய அங்கு எவரும் தயாராக இல்லை. அந்தக் காலம் மலைஏறி மறைந்து விட்டது. குடியிருப்பவனுக்கும் உழுது பயிரிடுபவனுக்கு தான் நிலம் சொந்தம் என்ற தன்னுணர்வும் போராட்டக் குணமும் ஏற்கனவே மக்களுக்கு வந்து விட்டது. நிலமற்ற சகல மக்களும் ஒரே அணியில் திரண்டு நிற்கின்றனர். நீதி நியாயம் கேட்கின்றனர். தமிழன்-தமிழ் இனம் என்று தேர்தலுக்காக ஏமாற்று அரசியல் நடாத்திய தமிழர் கூட்டமைப்பு நிலமற்ற தமிழன் பக்கமா? அல்லது நிலத்திமிர் பிடித்தலையும் விதானையார் குடும்பப் பக்கமா? மக்கள் நடைமுறையில் இருந்து தான் உண்மைகளையும் போலிகளையும் அறிந்து கொள்ள முடியும். புதிய பூமி தனது உறுதியான ஆதரவை நிலமற்ற ஏழை மக்களுக்குத் தெரிவித்து நிலவுடமையாளர்களின் தமிழின முகமூடிகளைக் கிழித்து நிற்கும் என உறுதி கூறுகின்றது.

# புதிய ஜனநாயக கட்சி நன்றி கூறுகிறது

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம், மலையகம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் புதிய ஜனநாயக கட்சி மணிக் கூட்டுச் சின்னத்தில் ஜனநாயக இடதுசாரி முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. கட்சி தனது மாக்சிச லெனினிச நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு கொள்கை களையும் தேர்தலில் கோரிக்கை களையும் மேற்படி தேர்தலின் ஊடாக மக்கள் முன்னிலைக்கு எடுத்துச் சென்று பிரச்சாரம் செய்து கொண்டது. யுத்தத்தை எதிர்த்து தேசிய இனப் பிரச்சினையின் தீர்வை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வலியுறுத்தி அடுத்த கட்டப் போராட்டத்தின் அவசி யத்தைச் சுட்டிக் காட்டி மக்கள் மத்தியில் கருத்துக்களை முன்னெடுத்துச் சென்றது. அத்துடன் உலகமயமாதலின் அபாயத்தின் மூலம் நாடு வநகொலனி யாக்கப்பட்டு வருவதையும் அதற்கு இரண்டு பேரினவாதக் கட்சிகளும் தமிழர் பழமைவாத ஆதிக்க அரசியல் சக்திகளும் துணைநின்று வருவதையும் கட்சி அம்பலமாக்கிக் கொண்டது. மக்கள் இன மத மொழி பிரதேச அடிப்படையில் பிளவுபடுத்தப் பட்டு பாராளுமன்ற பிற்போக்கு ஆட்சி அதிகாரத்திற்காகவும் பதவிகளுக்காவும் குறுகிய வழிகளில் பயன்படுத்தப்படுவதையும் கட்சி தனது பிரசாரத்தில் சுட்டிக் காட்டிக் கொண்டது.

பணபலம், ஆதிக்க அரசியல், பழமைவாதம், சாதியம், வர்க்கம் போன்ற பல்வேறு அம்சங்கள் முன்தள்ளப்பட்டு தேர்தல் வெற்றிகள் நோக்கி பாராளுமன்றக் கட்சிகள் செயல்பட்ட இத்தேர்தலில் புதிய ஜனநாயக கட்சி அவற்றுக்கு எதிர்நீச்சல் போட்டே தனது பிரசார இயக்கத்தை முன்னெடுத்துக் கொண்டது. கட்சியின் நிலைப்பாட்டை ஏற்று கணிசமான வாக்குகளை மூன்று மாவட்டங்களிலும் மக்கள் அளித்தனர். அவர்களுக்கு கட்சியின் மத்தியகுழு தனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரியப்படுத்து கின்றது. அத்துடன் தேர்தல் பிரசாரத்தில் உளவிருப்புடன் கலந்து கொண்டு கடுமையாக வேலைசெய்த அனைத்து தோழர்கள் நண்பர்கள் சமூகு நலன் விரும்பிகள் அனைவருக் கும் கட்சி தனது நன்றியைத் தெரிவிக்கின்றது. மேலும் கட்சியின் தேர்தல் நிதிக்கென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து நிதி உதவி செய்த தோழர்கள் நண்பர்களுக்கு கட்சி தனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றது.

மத்தியகுழு
புதிய ஜனநாயக கட்சி
கொழும்பு.

## சமாதானத்திற்கான

1ம் பக்க தொடர்ச்சி..

நிபந்தனைகளுடனும் இரு தரப்பும் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

அதேவேளை ஜே.வி.பி. தனது பேரினவாதப் பிரச்சாரத்தை கட்ட விழ்த்து விட்டுள்ளது. சிஹல உறுமய உட்பட பொதுசன முன்னணி என்பன பேரினவாதப் பிரசாரத்திற்கு பின் நிற்கப்போவதில்லை. அவை உரிய தருணம் பார்த்து நிற்கின்றன. அது மட்டுமன்றி அரசாங்கத்தினுள்ளும் பேச்சுவார்த்தையை விரும்பாத தீவிர பேரினவாத சக்திகள் இப்போதே அதிருப்திப்பட ஆரம்பித்து விட்டதாக அறிய முடிகின்றது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் உள்ளார்ந்த நீண்ட இலக்கு தமிழீழமாகும். ஆனால் அதன் அனுபவங்கள் பட்டறிவுகளும் ஒரு பேச்சுவார்த்தையில் இறங்கியே தீரவேண்டும் என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறது. அதேவேளை மக்களிடமிருந்து விலகிச் செல்ல முடியாது என்ற உண்மையையும் அவர்களுக்கு விளங்க வைத்திருக்கிறது. எனவே புலிகள் இயக்கம் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பனவற்றுடன் பேச்சு வார்த்தைக்கு செல்லல் வேண்டும். அதேவேளை வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷை களை விட்டுக் கொடுக்காது பேசி நியா யமான தீர்வுக்கு வந்து கொள்ளல் வேண்டும்.

சமாதானப் பாதையில் புதிய அரசாங்கம் எந்தளவு தூரத்திற்குச் செல்லப்போகிறது என்பதே அக்கறையுடனும் ஆவலுடனும் எதிர்பார்க்கப்படுவதாகும். இதற்கு முன் கூட்டியே தீர்ப்புக் கூற முடியாது. அல்லது கடந்த கால நிகழ்வுகளை இப்போதுள்ள சூழலுக்கு வலிந்து பொருத்தி யாந்திரிகமாகப் பார்க்கவும் கூடாது.

நான்கு அடிப்படைகளில் பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும் எனப் புதியபூமி எதிர்பார்க்கின்றது. ஒன்று, உள்நோக்கமற்ற நிரந்தர யுத்தநிறுத்தம், இரண்டு, புலிகள் மீதான தடையை அகற்றி பேச்சுவார்த்தையை முன்னெடுத்தல், மூன்று முஸ்லீம் மக்களின் தனித்துவம் தன்னடையாளம் என்பனவற்றை ஏற்றுக் கொண்டு அவர்களது அடிப்படை உரிமைகளை அங்கீகரித்துக் கொள்ளல். நான்காவது வடக்கு கிழக்கு இணைந்த பாரம்பரிய பிரதேசத்தில் உறுதியான சுயாட்சி.

இவை நான்கையும் முன்னெடுத்தாலே எந்தப் பேச்சுவார்த்தையும் சரியான திசையில் சென்றடைய முடியும். ஆனால் சமாதானப் பாதையில் பிரமதர் ரணில் விக்கிரமசிங்காவும் புதிய ஆட்சியும் எந்தளவு தூரத்திற்கு செல்லப்போகிறார் கள் என்பதே எழுந்து நிற்கும் கேள்வியாகும்.

இதற்குரிய உறுதியான நேர்மையான பதிலை அரசாங்கம் அளித்து அதன் அடிப்படையில் சமாதானத்ததை நோக்கி முன்செல்லுமானால் மீட்சிக்குரிய கடைசிச் சந்தர்ப்பமாக அது அமைந்து கொள்ளும். இல்லாது விட்டால் அழிவுகள் தொடர்வதையும் இருள் சூழும் எதிர்காலத்தையுமே முழு நாடும் மக்களும் எதிர்கொள்ள நேரிடும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிபு யு.கே. பிரின்டஸ் 91, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்